# குர்ஆனின் குரல்

ربيع الآخر – ١٤٤٦

அக்டோபர் - 2024

₹25/-



999 ®
BRAND

இது வெறும் நம்பரல்ல,
நம்பிக்கை!

OUR PRODUCTS



K.A.S. ZAINULABDIN & Co.
New No. 196, Angappan Street, Chennai - 600 001.
www.999lungies.com | Toll Free No. 1800 890 6784 | 893 999 7475
KOLKATA • MUMBAI • DELHI • GUDIYATTAM • ERODE • MADURAI • NAGORE

Scan to shop your favourite Lungies

# ஈருலகிலும் நலவு வேண்டும்!

وَمِنْهُمْ مَّنْ يَّقُوْلُ رَبَّنَاۤ اٰتِنَا فِى الدُّنْيَا حَسَنَةً وَّفِى الْاٰخِرَةِ حَسَنَةً وَّقِنَا عَذَابَ النَّارِ

"இன்னும், அவர்களில் சிலர், "எங்கள் இறைவனே! எங்களுக்கு இவ்வுலகில் நற்பாக்கியத்தையும், மறுமையில் நற்பாக்கியத்தையும் தந்தருள்வாயாக! இன்னும் (நரக) நெருப்பின் வேதனையை விட்டும் எங்களைக் காத்தருள்வாயாக" என்று கூறுகின்றனர்." –அல்குர்ஆன் (2:201)

ஹஜ்ஜுடைய நாட்களில் மௌட்டீக காலத்தில் மக்கள் தாங்களின் மூதாதையர்களை புகழ்ந்தும், பெருமைப்படுத்தியும் கவி பாடுகின்ற வழக்கம் இருந்துள்ளது. இஸ்லாம் அதைத் தடுத்து அந்த நாட்களில் அல்லாஹ்வை துதி பாடுவதிலும், பிரார்த்தனை செய்வதிலும் ஈடுபடுமாறு ஏவியது. பின்பு அல்லாஹ்வை துதி பாடுவதிலும், பிரார்த்தனை செய்வதிலும் ஈடுபடுகின்ற மக்களில் சிலர் அறியாமையால் வெறும் உலகத் தேவைகளை மட்டுமே கேட்கிறார்கள். அதிலும் நலவை கேட்பதில்லை. உலகம் எப்படி கிடைத்தாலும் பரவாயில்லை என உலகத் தேவைகளை மட்டுமே கேட்கிறார்கள். அவர்களுக்கு மறுவுலகில் எந்த பங்குமில்லை என்கிறான் அல்லாஹ்.

ஆனால், மார்க்கம் அறிந்த உண்மை முஸ்லிம்கள் எப்படி பிரார்த்தனை செய்கிறார்கள் என்பதை சிலாகித்து கூறுகிறான். எங்களின் இரட்சகனே! இவ்வுலக வாழ்விலும், மறுவுலக வாழ்விலும் நலவை தந்திடுவாயாக! நரக நெருப்பிலிருந்தும் பாதுகாப்பாயாக! எனக் கேட்கிறார்கள். இப்படித்தான் கேட்க வேண்டும் என்ற நியதியை அல்லாஹ் நமக்கு போதிக்கிறான். இப்பிரார்த்தனையை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதிகமதிகம் செய்பவர்களாக இருந்தார்கள். கஃபாவை தவாப் செய்யும்போது இப்பிரார்த்தனையை செய்வது சுன்னத் – நபி வழியாக உள்ளது. உலகில் நலவு என்பது, உடல் ஆரோக்கியம், உணவில், உடையில், ஆயுளில் அபிவிருத்தி, அந்தஸ்து, அழகிய நற்குணங்கள், தேவையான கல்வி, தொட்டதெல்லாம் துலங்கும் நிலை! இவையனைத்தும் அடங்கும். மறுவுலகில் நலவு என்பது அல்லாஹ்வின் பொருத்தம் பெறுவது, மன்னிப்பு கிடைப்பது, சுவனம் நஸீபாகுவது, அல்லாஹ்வை பார்க்கும் பாக்கியம் பெறுவது இவையனைத்தும் அடங்கும்.

மவ்லவீ ஹாஃபிழ் பீ.இஸட். பரகத் அலீ பாஜில் பாகவி

# சிறு தர்மமும் - பெரு நன்மையும்!

عَنْ سَعْدِ بْنِ أَبِي وَقَّاصٍ أَنَّ رَسُوْلَ اللهِ قَالَ: إِنَّكَ لَنْ تُنْفِقَ نَفَقَةً تَبْتَغِي بِهَا وَجْهَ اللهِ إِلاَّ أُجِرْتَ عَلَيْهَا حَتَّى مَا تَجْعَلُ فِيْ فَمِ امْرَأَتِكَ. رواه البخاري،

“நீங்கள் அல்லாஹ்வின் பொருத்தத்தை நாடி எதைச் செலவு செய்தாலும், அதனுடைய நன்மை நிச்சயமாக உங்களுக்கு வழங்கப் படும். நீங்கள் உங்கள் மனைவியின் வாயில் ஊட்டும் கவளத்திற்கும்” (உங்களுக்கு நன்மை கிடைக்கும்)” என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஹள்ரத் ஸஃதுப்னு அபீவக்காஸ் (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (நூல் : புகாரீ)

**மாதந்தோறும் ஒவ்வொரு நன்மையின் பக்கமாக வழிகாட்டி, மாதம் ஒரு நன்மையை செய்வதற்கு தூண்டிக் கொண்டிருக்கும் குர்ஆனின் குரல் பல்லாண்டு காலம் வாழ துஆ செய்கிறோம்.**

# செய்யது சகோதரர்கள்

## நாகூர்.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்...

குர்ஆனின் குரல்

குரல் : 67
ரபீஉல் ஆகிர் 1446

எதிரொலி – 10
அக்டோபர் – 2024

# அநீதியின் புல்டோசரை விட நீதியின் அளவு பெரிது!

கடந்த பத்தாண்டுகளாக சாதி, மதம், இனம் அடிப்படையில் நம் நாட்டில் நடக்கும் தனி மனிதத் தாக்குதல்கள், இஸ்லாமிய சமுதாய மக்களை மற்றும் அவர்களது வாழ்வாதாரங்களை அழித்து நிர்மூலமாக்குதல், பெண்களை அவமானப்படுத்தி அவர்களை பாலியல் துன்புறுத்துலுக்கு உள்ளாக்குதல், இஸ்லாமிய சமூகத்தைச் சார்ந்த மக்களைத் துன்புறுத்தி அவர்களது வாழ் விடங்களை விட்டு விரட்டுதல் போன்ற நிகழ்வுகள் நமது சமூகத் தில் பெரும் பகுதியினரால் ஒரு செய்தியாக மட்டுமே பார்க்கப்பட்டு, மக்கள் சாதாரணமாகவே கடந்து போவதைப் பார்க்க முடிகிறது.

தேசிய நெடுஞ்சாலைகளில் நண்பகல் நேரத்தில் ஒரு பெண்ணை வன்முறையாளன் ஒருவன் ஆயுதம் கொண்டு தாக்கி மானபங்கம் செய்யும்போது கூட அங்கே கூடுகின்ற கூட்டம் அதனை வீடியோ எடுத்து சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து லைக்ஸ் பெற வேண்டும் என்று துடிக்கிறதே தவிர, வன்முறை யாளனை தடுத்து அப்பெண்ணைப் பாதுகாக்க வேண்டும் என்று கூட்டத்தினர் முயற்சிப்பதில்லை.

ஒரு சக மனிதனின் அபயக் குரல் அவனது மரண ஓலம் அவனது வேதனை மற்றும் கண்ணீர் நம்மிடம் எவ்விதச் சலனத்தையும் உண்டாக்கவில்லையென்றால் நமது சமூகம் எங்கேயோ அழுகத் தொடங்கிவிட்டதென்பதே காலம் நமக்குத் தரும் எச்சரிக்கை!

வெறுப்பு, துவேஷம் ஆகியவற்றின் அடிப்படையில் சில வழி தவறிய இளைஞர்களும், சில அசாதாரண நிகழ்வுகளால் ஆவேசமடையும் பொதுமக்களும் உணர்ச்சிவசப்பட்டு இவை

போன்ற வன்முறைகளில் ஈடுபடுவதைக் கூட நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் ஓர் அரசாங்கமே இது போன்ற வன்முறை வெறியாட்டங்களைத் தொடர்ந்து நிகழ்த்துவதை பொது சமூகமும், ஊடகங்களும், மற்ற ஜனநாயக நிறுவனங்களும் கண்டும் காணாமல் கடந்து போவதை என்னவென்று சொல்வது?

சென்ற மாதம் மத்திய பிரதேசம் சந்தர்பூர் மாவட்டத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி தவறாகப் பேசிய ராம்கிரி மகராஜ் என்ற இந்துமதத் தலைவர் மீது புகார் அளிக்க காவல் நிலையம் சென்ற முஸ்லிம்களை, காவல் நிலையத்தில் போலீஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து தள்ளுமுள்ளு ஏற்பட்டுள்ளது.

இதன் பேரில் போலீஸார் தொடர்ந்த வழக்கில் இஸ்லாமிய சமூகத்தின் முக்கியப் பிரமுகரான ஹாஜி ஷெஹ்சாத் அலீ என்பவர் முக்கிய குற்றவாளியாகச் சேர்க்கப்படுகிறார்.

உடனடியாக அவரது வீடு புல்டோசர் கொண்டு முழுமையாக இடித்து தரைமட்டமாக்கப்படுகிறது. அவ்வீட்டிலுள்ள இளம் பெண்கள், குழந்தைகள் மற்றும் வயோதிகர்கள் உட்பட அனைவரும் அடுத்த நேர உணவும், உடைகளும் இன்றி தெருவில் நிற்கின்றனர்.

இதில் எந்தவிதத் தொடர்புமில்லாத குடும்ப உறுப்பினர்களை வீடுகளை விட்டு வெளியேற்றி நடுத்தெருவில் நிறுத்துவது என்ன நியாயம்?

இதனை “புல்டோசர் நியாயம்” என்று சொல்கிறது பாரதீய ஜனதா. மத்திய பிரதேசத்தில் மற்றும் பாரதீய ஜனதா ஆளும் மாநிலங்களில் இந்த புல்டோசர் நியாயம் அன்றாட நடைமுறையாக மாறிவிட்டது.

இந்த நிகழ்வுகளின்போது பாரதீய ஜனதாவினர் கூட்டமாக கூடி நின்று வீடுகளை இடிக்கும் அதிகாரிகளை உற்சாகப் படுத்துவதும், அவர்களுக்கு மாலைகள், சால்வைகள் அணிவித்துப் பாராட்டுவதும், அவற்றை வீடியோ எடுத்து சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து கொண்டாட்டங்கள் நடத்துவதும் தினசரி நிகழ்வுகளாகி விட்டன.

அரசாங்கமே முன்னின்று நடத்தும் இந்த அரசு பயங்கர வாதத்தால் பாதிக்கப்படுவது முஸ்லிமாக இருப்பதுதான் இந்த புல்டோசர் நியாயத்தின் முக்கிய அம்சம்.

உத்தரபிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் "பெண்களுக்கும், சமூகத்தின் நலிந்த மக்களுக்கும் எதிராகக் குற்றம் செய்பவர்களின் சொத்துக்களை புல்டோசர் வைத்து இடித்து நியாயம் வழங்குவேன்" என்று பகிரங்கமாக அறிவித்தார்.

குற்றங்களுக்கு எதிராக உடனடியாக தான் வழங்கும் இந்த நியாயத் தீர்ப்பு நடவடிக்கைகளில் சட்டம், நீதிமன்றம் என்பதைப் பற்றியெல்லாம் கவலைப்படப் போவதில்லை என்று சூசகமாக அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பாரதீய ஜனதாவினர் ஆதித்யநாத்தை "புல்டோசர் பாபா" என்றழைத்து பாராட்டி மகிழ்ந்தனர்.

ஆனால், இந்த புல்டோசர் நியாயம் முழுக்க முழுக்க முஸ்லிம்களை நோக்கி ஏவப்பட்டதுதான் தேசத்திற்கு ஏற்பட்ட பெரும் அவலம்.

குற்றம் செய்தவர்கள் முஸ்லிம்களாக இருந்தால் மட்டுமே அவ்வாறு சொத்துக்கள் இடிக்கப்படும். மற்றவர்களுக்கு அது பொருந்தாது என்று உத்தரபிரதேசம் பிந்த் மாவட்ட ஆட்சியர் பேசியுள்ளார்.

புல்டோசர்களை வைத்து பள்ளிவாசல்கள், மதரஸாக்கள், முஸ்லிம்களின் வீடுகள் மற்றும் வியாபார நிலையங்களை இடித்துத் தள்ளுவதால் பாரதீய ஜனதாவினர் இந்த சட்ட விரோத நடவடிக்கைகளை பெருமையுடன் கொண்டாடுகின்றனர்.

பாரதீய ஜனதா ஆளும் மாநிலங்களான அசாம், குஜராத், மத்தியப் பிரதேசம் மற்றும் உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்களில் இதுவரை 128 முஸ்லிம்கள் தொடர்பான சொத்துக்கள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டதாகவும், அதனால் 617 குடும்பங்கள் தங்களது இருப்பிடங்களை இழந்துள்ளதாகவும், "அம்னெஸ்டி இண்டர்நேஷனல்" நிறுவனம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

பெரும்பாலும் இரவு நேரங்களில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதிமன்றங்களை அணுக அவகாசம் கிடைப்பதில்லை.

காவல் துறையினர் முதலில் வீடுகளுக்குள் புகுந்து குடியிருப்பவர்களை அடித்து விரட்டிவிட்டு பொருட்களை

அள்ளி வெளியே போடுவதாகவும், அதன் பின்னர் புல்டோசர் வைத்து இடிப்பதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் புகைப் படங்களோடு உச்சநீதிமன்றத்தில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளனர்.

கட்டிடங்களை இடிப்பதற்காக அரசு சொல்லி வரும் காரணம்: அக்கட்டிடங்கள் சட்ட விரோதமாகக் கட்டப்பட்டுள்ளன என்பதுதான். ஆனால், கட்டிடங்களை ஒட்டியிருக்கின்ற இந்துக்களின் கட்டிடங்கள் சேதப்படுத்தப்படுவதில்லை.

மத்திய பிரதேச அரசால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்ட ஷெஹ்சாத் அலீயின் வீடு ஒரு பெரிய பங்களா எனத் தெரி கிறது. அதனுள் நிறுத்தப்பட்டிருந்த விலையுயர்ந்த கார்களையும் அதிகாரிகள் புல்டோசரால் நொறுக்கியுள்ளனர்.

வீடு விதிமீறலாகக் கட்டப்பட்டிருக்கலாம் என்று கருதினாலும் கூட வாகனங்களை அடித்து நொறுக்குவது ஏன் என்ற கேள்விக்கு அரசிடம் பதில் இல்லை.

உரிமைகளுக்காகவும், நியாயம் கேட்டும் குரல் கொடுக்க முன்வரும் முஸ்லிம்கள் மத்தியில் அச்சத்தையும், பீதியையும் விதைத்து அவர்களை வாய் பேசாத ஊமை ஜனங்களாக ஆக்குவதுதான் பாரதீய ஜனதா அரசுகளின் திட்டம்!

இந்த அநியாயங்களை மகிழ்ச்சியோடு கொண்டாடுகின்ற பாஸிச சக்திகள் இச்செயல்களையும், அதனை அரங்கேற்றும் அரசுகளையும், அரசியல் தலைவர்களையும் "புல்டோசர் ராஜா, புல்டோசர் ஸ்டேட், புல்டோசர் நியாயம், புல்டோசர் பாபா, புல்டோசர் மாமா" என்றழைத்து பெருமைப்பட்டுக் கொள்வது அவர்களது மனம் எவ்வளவு வெறுப்பால் நிறைந்துள்ளது என்பதைக் காட்டுகிறது.

இவர்கள் புல்டோசர் பாபாக்களா? அல்லது
புல்டோசர் பாவிகளா?

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்தின்போது உத்தரபிரதேச முதல்வர் ஆதித்யநாத் சென்ற இடங்களிலெல் லாம் புல்டோசர்களை நிறுத்தி வைத்து அவற்றுடன் புல்டோசர்களுக்கு பெரிய மாலைகளை அணிவித்து, புல்டோசர்களால் முஸ்லிம்களது வாழ்விடங்களை இடிப்பது அவருடைய ஆட்சியின் பெரும் சாதனை எனக் கூறி, அதற்காகவே பாரதீய ஜனதாவுக்கு வாக்களியுங்கள் என்று கேட்ட கொடுமையும் உத்தரபிரதேசத்தில் நடந்தது.

இதைவிடக் கொடுமையாக இந்திய ஜனநாயகமே வெட்கித் தலைகுனியும் அளவுக்கான ஒரு செயலை நமது பிரதமர் மோடியே செய்துள்ளார். “புல்டோசர் மூலமாக நீதியை நிலைநாட்டும் கலையை நன்றாகக் கற்றவர் உத்தரபிரதேச முதல்வர் ஆதித்யநாத்” என்று தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உச்சக்குரலில் புகழ்ந்தார்.

அரசியல் சட்டமும், அரசு விதிகளும், இயற்கை நீதியும், தனிமனித உரிமைகளும் ஒரு நாளும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு சட்ட விரோதச் செயலை செய்யும் ஒரு மாநில முதலமைச்சரை நம் தேசத்தின் பிரதமரே அதற்காகப் பாராட்டுவது நமது வாக்குச் சீட்டு அரசியல் எவ்வளவு கேவலமான நிலைக்கு வந்துள்ளது என்பதற்கு எடுத்துக்காட்டு.

சட்ட விரோதச் செயல்களை சட்டப்பூர்வமாகச் செய்வதில் கைதேர்ந்தவர்கள் பாரதீய ஜனதா கட்சிக்காரர்கள்.

உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், குஜராத் ஆகிய பாரதீய ஜனதா ஆட்சி செய்யும் மாநிலங்களில் சட்டத்தின் மூலமாக அல்லாமல் ‘புல்டோசர்’ மூலமாக ஆட்சியை நடத்தி வருகிறார்கள்.

இந்திய ஜனநாயக ஆட்சி முறைக்கு பாரதீய ஜனதா அளித்து வரும் கொடை இவை.

பாரதீய ஜனதாவுக்கு எதிராகப் போராடுபவர்கள் மீது வழக்குப் போடுவதோடு, அவர்களின் வீடுகளையே இடித்து விடுவார்கள்.

புல்டோசர் மூலம் வீடுகளை இடிப்பது பற்றி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. “அரசுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக டெல்லி ஜஹாங்கீர்புரியில் உள்ள போராட்டக்காரர்களின் வீடுகள் இடிக்கப்பட்டுள்ளன. குடியிருப்புவாசிகளுக்கு உரிய முன்னறிவிப்பு ஏதும் அளிக்காமல் இதுபோன்ற நடவடிக்கைகள் செய்யப்படுகின்றன. இதுபோன்ற நடவடிக்கைகளுக்குத் தடை விதிக்க வேண்டும்” என்று அந்த மனுவில் சொல்லப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் நீதிபதிகள் கேட்ட கேள்விகள் மிக மிக முக்கியமானவை. “குற்ற வழக்கில் தொடர்புடையவர் அல்லது குற்றவாளி என்பதற்காக ஒருவரின் வீட்டை எப்படி இடிக்க

முடியும்? உரிய சட்ட நடைமுறைகளைப் பின்பற்றாமல் இது போன்று செய்ய முடியாது. இது தொடர்பாக நாடு முழுமைக்குமான வழிகாட்டுதல்களை உச்சநீதிமன்றம் வகுக்கும்" என்று எச்சரிக்கை செய்துள்ளார்கள் உச்சநீதிமன்ற நீதிபதிகள்.

அஸ்ஸாம் மாநிலத்தில் மீன் வியாபாரியான ஷஃபிகுல் இஸ்லாம் வீடு இடிக்கப்பட்ட வழக்கு கவுகாத்தி உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

தலைமை நீதிபதி ஆர்.எம். சாயா, "மிகத் தீவிரமான வழக்குகளை விசாரணை செய்யும்போது தேடுதல் என்ற பெயரில் புல்டோசர்களைக் கொண்டு வீடுகளை இடிக்க எந்த குற்றவியல் சட்டமும் பரிந்துரைக்கவில்லை" என்று சொன்னார்.

அவர் இன்னொரு கேள்வியையும் கேட்டார், "நாளைக்கு உங்களுக்கு ஏதாவது தேவை என்றால் என்னுடைய நீதிமன்ற அறையையும் இடித்துவிட்டு தேடுதல் நடத்துவீர்களா? தேடுதல் என்ற பெயரில் ஒருவருடைய வீட்டை இடிக்க அனுமதி வழங்கினால் யாருக்கும் இங்கே பாதுகாப்பு இருக்காது.

நாம் ஜனநாயக நாட்டில் வாழ்கிறோம். இது போன்ற வீடு களை இடிக்கும் சம்பவம் எல்லாம் சினிமாவில்தான் நடக்கும்.

அப்போதும் 'வாரண்ட்' காண்பிக்கப்படும். வீடுகளில் தேடுதல் நடத்துவதற்கு அந்த வீட்டை இடிக்கத்தான் வேண்டுமா? சட்டம்-ஒழுங்கு என்று ஏன் சேர்த்துச் சொல்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்" என்று கவுகாத்தி உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி கடுமையாக கூறினார்.

குற்றங்களுக்குத் தண்டனை வழங்குவது வேறு, வீடுகளை இடிப்பது வேறு. 'குற்றவாளி' என்று தீர்ப்பளிக்கப்பட்டாலும், வீட்டை இடிக்க முடியாது' என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் சொல்லியிருக்கிறார்கள்.

உச்சநீதிமன்ற நீதிபதிகள் புல்டோசர் விஷயத்தில் சங்கி அரசுகளை கண்டிப்பதோடு நின்று விடாமல், புல்டோசர் அயோக்கியத்தனத்திற்கு முற்றுப்புள்ளி வைத்திட வேண்டும்.

உத்தர பிரதேச முன்னாள் முதலமைச்சரும், சமாஜ்வாதி கட்சித் தலைவருமான அகிலேஷ், இப்படிச் சொல்லியிருக் கிறார் 'அநீதியின் புல்டோசரை விட நீதியின் அளவு பெரிது!'

சில தமிழ் மாத-வார-நாள் இதழ்களில் நம் இஸ்லாமிய வரலாறுகளை சில இஸ்லாமிய எழுத்தாளர்கள் எழுதுகிறார்கள். ஆனால், அந்த மாத-வார-நாள் இதழ்களோ முஸ்லிம்களுக்கு எதிரான கருத்துகளை தங்களின் இதழ்களில் அவ்வப்போது வெளியிட்டு வருகின்றன. அப்படிப்பட்ட இதழ்களில் நம்மவர்களின் வரலாறுகள் எழுதப்படுவது தேவைதானா?

**வேடசந்தூரிலிருந்து**
**ஷேக் முஹம்மது**

வரலாற்றை ஆழமாக அறிந்து வைத்திருக்கக்கூடிய நம்மவர்கள், அவற்றை உலகின் பொது வெளியில் எடுத்துக்காட்டுவது தவறான காரியமல்ல அவசியமும்கூட! அதை தாங்கள் குறிப்பிட்டது போன்ற வார இதழ்களின் மூலம் வெளிப்படுத்துவதும் தவறான காரியமல்ல; எப்போதாவது அந்த இதழில் இஸ்லாத்திற்கு எதிராக எழுதப்பட்டிருந்தால் அதை நாம் கவனிக்க வேண்டிய அவசியமில்லை. அல்லாஹ் நாடினால் எப்போதும் யாரை கொண்டும் எதன் மூலமாகவும் ஹிதாயத் கொடுக்கலாம்.

அடையாளம் தெரியாத அளவுக்கு விமான விபத்தில் இறப்பவர், கடலில் இறப்பவர், நெருப்பில் இறப்பவர் போன்றவர்களின் நிலை மறுமை நாளில் எப்படி இருக்கும்?

**விழுப்புரத்திலிருந்து**
**அன்வர்தீன்**

உலகில் வாழும்போது அவர்களின் அமல்கள் அல்லாஹ் - ரஸூலுக்கு பொருத்தமானவையாக இருந்திருந்தால், மேற்கண்ட வழிகளில் இறந்து விட்டவர்கள் கியாமத் நாளன்று ஷஹீது எனும் உயிர்த்தியாகிகளாக எழுப்பப்படுவார்கள். அவர்களுக்கு அந்த ஷஹீதுக்கு கொடுக்கப்படக் கூடிய உயர்ந்த நன்மைகளும், அந்தஸ்துகளும் வழங்கப்படும்.

நம் சகோதரர் ஒருவர், ஜாதகம் பார்த்து சொல்லி சம்பாதித்துக் கொண்டிருக்கிறார். "அது தவறு" என்று சொன்னால் அவர் "மற்ற தொழில்களைப் போன்று இதுவும் ஒரு தொழில்தான்" என்று வாதிடுகிறார். இதுபற்றி மார்க்கம் என்ன சொல்கிறது?

**திண்டுக்கல்லிலிருந்து**
**ஏ.எஸ்.முஹம்மது**

அவரது செயல்பாடுகளும், அதன் மூலம் அவருக்கு வரக்கூடிய வருமானங்கள் அனைத்தும் முழுக்க முழுக்க ஹராமானதாகும். அதில் எந்த சந்தேகமும்

# பதில்கள்

மவ்லானா மவ்லவீ ஹாஃபிழ் காரி அல்ஹாஜ் முஃப்தீ
**மு.முஹம்மது இஸ்மாயீல்** காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஜலாலாபாதீ

இல்லை. அல்லாஹ் அவருக்கு ஹிதாயத்தைக் கொடுப்பதற்காக துஆ செய்யுங்கள்.

ஜோஸியம் பார்ப்பவர்கள், கண்ணுக்குத் தெரியாத விஷயங்களைப் பற்றி பேசுவார்கள். அப்படி பேசுவது நமது ஈமானை அழித்துவிடும் செயலாகும். இது பற்றி நபி (ஸல்) அவர்கள், "யார் ஜோஸியக்காரரிடம் சென்று, அவர் கூறுவதை உண்மை படுத்துவாரோ அப்படிப்பட்டவர் இந்த முஹம்மதின் மீது அருளப்பட்டதைக் கொண்டு நிராகரித்தவராக ஆகி விடுவார்" என்றும், இன்னொரு ஹதீஸில் "அப்படிப்பட்டவர் இந்த முஹம்மதின் மீது அருளப்பட்ட வேதத்திலிருந்து நீங்கி விடுவார்" என்றும், இன்னொரு ஹதீஸில் "ஜோஸியக்காரரிடம் செல்பவரின் நாற்பது இரவுகளுடைய தொழுகைகள் ஏற்றுக்கொள்ளப்படாது" என்றும் மிகக் கடுமையான எச்சரிக்கைகளை நபி (ஸல்) அவர்கள் நமக்கு கூறியுள்ளார்கள்.

எனவே, அந்த தொழில் செய்வது மட்டுமல்ல. அப்படிப்பட்டவரிடம் சென்று நமது தேவைகளை முறையிடுவதும், அவர்களிடம் நம் சந்தேகங்களைக் கேட்பதும், அதன் மூலம் நம்மை நாமே திருப்தி பட்டுக் கொள்வதும் மிகப் பெரிய பாவத்திற்கும், நம் ஈமானை இழந்து விடுவதற்கும் வழி வகுப்பதாகும். அல்லாஹ் நம் சமுதாய மக்களை குறிப்பாக, பெண் சமூகத்தையும் இது போன்ற பித்னாக்களிலிருந்து பாதுகாத்தருள நாம் துஆ செய்கிறோம்.

☛ சில இமாம்கள் ஃபர்ளான தொழுகைக்குப்பின்பு ஓதக்கூடிய துஆக்களை மிக நீண்ட துஆக்களாக ஓதி விடுகிறார்கள். குறிப்பாக, ஃபஜ்ரு தொழுகையின்போது, இமாம் ஓதக்கூடிய துஆவினால் சில பேர்களுக்கு தூக்கம் மிகைத்து விடுகிறது. எனவே, இமாம்கள் அந்தந்த நேரத்திற்கு என்று வழமையில் இருக்கின்ற சுருக்கமான துஆக்களை மட்டும் ஓதிக் கொண்டால் நன்றாக இருக்குமே!

**பெரிய வடகரையிலிருந்து**
**ஹாஜா பஷீரா**

✍ ஓர் இமாம் துஆ செய்யும் போது தனக்குப் பின்னால், தொழுக வந்திருக்கின்ற அனைத்து தொழுகையாளிகளுக்காகவும் சேர்த்தே துஆ செய்ய கடமைப்பட்டுள்ளார். அதனால், அந்தத் தொழுகையாளிகளின் மீதுள்ள பிரியத்தினால்தான் தனது துஆவை சில சமயங்களில் நீட்டியும் விடுகிறார். ஒரு வகையில், அந்த துஆக்கள் கபூலாகி விட்டால், இன்ஷா அல்லாஹ் நமக்கும் அதனுடைய பயன்களில் பங்கு கிடைக்குமல்லவா! இருந்தாலும், தொழுகைக்கு வரக்கூடிய பலர், தொழுகை முடிந்தவுடன் தங்களுக்கு ஆக வேண்டிய பல்வேறு காரியங்களில் தங்களின் சிந்தனைகளை

ஓட விட்டுக் கொண்டிருப்பார்கள். எனவேதான், நபி (ஸல்) அவர்கள் "தொழுகையில் ஓதப்படக்கூடிய குர்ஆனுடைய ஆயத்துகளை கூட பின்னால் நிற்பவர்களைக் கவனித்து, கொஞ்சம் நிதானமாக ஓதிக் கொள்ளட்டும்" என்று குறிப்பிட்டார்கள். சில சமயங்களில் அவசரத் தேவையுள்ளவர்கள் கூட அல்லது பயணத்திற்கு தயாராகிக் கொண்டிருப்பவர்கள் கூட ஜமாஅத் தொழுகையில் கலந்திருக்கலாம். எனவே, மார்க்கம் சொல்லியிருக்கின்ற அளவுக்கு, அந்தந்த நேரத்திற்குரிய சூராக்களை ஓதிக் கொள்ள வேண்டும். அவ்வாறே, துஆக்களையும் சுருக்கமாகவும், மக்களுக்கு பயன்தரக்கூடிய வகையிலும் ஓதிக் கொண்டால் மிக மிக நல்லது.

☛ எங்கள் மகளுக்கு ராயிஸா ஆரிஃபா என்று பெயர் வைத்துள்ளோம். அதன் பொருள் என்ன?

**புதுக்கோட்டையிலிருந்து**
**ரிஜ்வானா பேகம்**

✍ "ரயீஸா ஆரிஃபா" என்று திருத்திக் கொள்ளுங்கள். "தலைமைத்துவமும், அல்லாஹ்வைப் பற்றியுண்டான ஞானமும் கொண்டவள்" என்பது அதன் பொருளாகும்.

☛ சொர்க்கத்தில் பணிவிடை செய்வதற்காக சிறுவர்கள் சுற்றிச் சுற்றி வருவார்கள் என்று அல்குர்ஆனில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த சிறுவர்களுக்கான விளக்கம் என்ன?

**பணங்காட்டூரிலிருந்து**
**ஜே.முஹம்மது யூசுஃப்**

✍ அல்குர்ஆனின் விரிவுரையாளர்கள் மேற்படி ஆயத்துக்கு பல்வேறு கருத்துகளை குறிப்பிட்டிருக்கிறார்கள். சிலர், அந்த சிறுவர்கள் சொர்க்கவாசிகளுக்கு பணிவிடை செய்வதற்காக மட்டுமே படைக்கப்பட்டவர்கள். அவர்கள் மிக அழகாகவும், துடிப்புள்ளவர்களாகவும், ஆர்வமுள்ளவர்களாகவும் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருப்பார்கள். வயோதிகர்களாக ஆக மாட்டார்கள் என்று குறிப்பிடுகிறார்கள். இன்னும் சில விரிவுரையாளர்கள், உலகில் பிறந்ததற்குபின்பு, சிறு பிராயத்திலேயே இறந்துபோய் விட்டவர்கள் என்றும், இன்னும் சிலர், உலகில் வாழ்ந்த இறை மறுப்பாளர்களின் குழந்தைகள் என்றும், இன்னும் சிலர், அந்த சிறுவர்கள் அவர்களுக்கென்று அல்லாஹ்வின் சுவனத்தை அடைவதற்குண்டான நன்மைகளும் அவர்களிடம் இருக்காது. நரகத்திற்கு செல்வதற்கான தீமைகளும் அவர்களிடம் இருக்காது. அப்படிப்பட்டவர்களை அல்லாஹ் சுவனத்தின் பணிவிடையாளர்களாக நியமித்து விடுவான் என்றும் குறிப்பிடுகிறார்கள்.

☛ சிலர் பள்ளிவாசலுக்கு வரும் நேரத்தைத் தவிர, மற்ற அனைத்து நேரங்களிலும் செல்

போன்களில் மூழ்கிவிடுகிறார்கள். இதனால், குர்ஆன் ஓதுவது குறைந்து, நாகரீகங்கள் மிகைத்து விட்டன. அப்படிப் பட்டவர்களுக்கு தங்களின் அறிவுரை என்ன?

**விழுப்புரத்திலிருந்து**
**அன்வர்**

✍ தாங்கள் கூறியதைப்போன்று சிலர், பள்ளிவாசலுக்கு வரும் வரை செல்போன்களை பயன் படுத்திவிட்டு, பள்ளிக்குள் நுழைந்தவுடன் அதை ஆஃப் செய்துவிட்டு, வணக்கவழிபாடு களில் ஈடுபட்டு விடுகிறார்கள். இவர்களைப் பார்த்தால், நமக்கு கொஞ்சம் சந்தோஷமாகத்தான் இருக்கிறது. ஏனெனில், இன்றைய சில சகோதரர்கள் பள்ளிவாசலுக்குள் நுழைந்த பிறகும்கூட, இமாம் பயான் செய்து கொண்டிருக்கும்போதும், அவர் மிம்பர் படியின்மீது ஏறி, நின்று, குத்பா ஓதிக் கொண்டி ருக்கும்போதுகூட மறக்காமல் அந்த செல்போன்நிகழ்ச்சிகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறார் கள்என்றால்,இதைவிட வேதனை யான விஷயம் என்னவாக இருக்க முடியும்? இதனால் தானோ என்னவோ சில பள்ளி வாசல்களில் **படைத்தவனோடு தொடர்பு கொண்டிருக்கும்போது, படைப்புகளின் தொடர்பு எதற்கு?** என்பது போன்ற வாசகங்கள் எழுதப்பட்டு, மேற்படி சகோதரர் களுக்கு அமைதியான முறை யில் புத்திமதிகள் சொல்லப்படு கின்றன. ஆனால், அப்போதுகூட, இந்த வார்த்தைகள் அவர்களை திருத்தவில்லையென்றால் இப்படிப்பட்டவர்கள் பிறகு எப் போது திருந்தப் போகிறார்கள்? இவர்களின் இந்தப் பழக்கத்திற்குக் காரணம் பெரும்பாலும் பெற் றோர்கள்தான்என்று சொன்னால் அதில் தவறொன்றுமில்லை. அல்லாஹ் நம் வருங்கால சந்ததி களை இந்த செல்போன்களுடைய கொடூரமான பித்னாக்களிலி ருந்து பாதுகாப்பானாக.

☛ ஜூம்ஆ தொழுகைக்காக குத்பா ஓதும்போது அந்த அரபி கிதாபை பார்த்துதான் ஓத வேண்டுமா? அல்லது பார்க்கா மலும் ஓதிக் கொள்ளலாமா?

**பல்லடத்திலிருந்து**
**அப்துல்லாஹ்**

✍ கிதாபை பார்த்தோ, பார்க்காமலோ அந்த இமாம், குத்பாவை எப்படியும் ஓதி விடுவார். அதைப் பற்றி நாம் கவலைப்படவேண்டிய அவசிய மில்லை. இன்ஷா அல்லாஹ் அவரின் மூலமாக நமது ஜூம்ஆ தொழுகை நிறைவேறி விடும். பயப்பட வேண்டாம்.

☛ ஒரு சகோதரர், தான் வாழும் போதே தனது சொத்துக்களை மனைவிக்கும், இரண்டு மகன் களுக்கும்பிரித்து கொடுத்துவிட வேண்டும் என்று ஆசைப்படு கிறார். மார்க்கம் என்ன சொல்கிறது?

**சிவகங்கையிலிருந்து**
**எம்.எம்.ராஜா**

# ஏஜண்டுகள் தேவை

உலகின் இலாபங்களை நோக்கமாகக் கொள்ளாமல், சமுதாய மக்களின் ஹிதாயத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு தமிழகத்திலும், மற்ற மாநிலங்களிலும் தங்களை குர்ஆனின் குரலின் ஏஜண்டுகளாக பதிவு செய்து கொண்டு, ஒவ்வொரு மாதமும் குர்ஆனின் குரல் பிரதிகளை மக்களுக்கு கொண்டு போய் சேர்க்கும் அருமையான சேவையை தொடர்ந்து செய்து கொண்டிருக்கும் எங்களின் பாசத்திற்குரிய ஏஜண்டுகளுக்கு நெஞ்சார்ந்த நன்றி! நன்றி!! அல்ஹம்து லில்லாஹ்!

**தமிழறிந்த முஸ்லிம்கள் பரவலாக வாழ்ந்து கொண்டிருக்கும் தென்காசி, கடையநல்லூர், புதுக்கோட்டை, சென்னை, திருச்சி, திண்டுக்கல், புதுச்சேரி, பெங்களூர் போன்ற ஊர்களில் குர்ஆனின் குரலை பரப்பும் அரும் பணியில் ஈடுபடக்கூடிய தீன் வழியில் ஆர்வம் கொண்ட, சேவை மனப்பான்மையுள்ள சகோதரர்கள் தாமதமின்றி தொடர்பு கொள்ளுங்கள்.**

## 25% கமிஷன் வழங்கப்படும்.

*உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :*

## குர்ஆனின் குரல்

**4/25, எழில் நகர், மேலமடை,**
**மதுரை - 625020.**

**9442056547, 9486729192**

e-mail:quraaninkural@gmail.com • web:www.quraaninkural.com

✍ அவர் விரும்பினால், தன் வாழ்க்கையின்போதே தனது சொத்துகளை தான்விரும்பியவர் களுக்கு பிரித்துக் கொடுத்து விடுவது ஆகுமானதுதான். அதில் எந்தத் தவறுமில்லை. எனினும், பிள்ளைகளுக்கு நடுவில், பாகுபாடு காட்டாமல், மனிதாபிமான அடிப்படையில், சரிசமமாக பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று மட்டும் மார்க்கம் நிபந்தனையிடுகிறது.

☛ நிக்காஹ் மற்றும் வலீமாவை ஒரே நாளில் நடத்திக் கொள்ளலாமா?

**ஈரோட்டிலிருந்து முஹம்மது ரிஜ்வான்**

✍ நடத்திக் கொள்ளலாம். எனினும், நிக்காஹ் முடிந்ததற்கு பின்பு, புதுமணத் தம்பதிகள் இருவரும் யாருடைய இடையூறும் இல்லாமல், ஓரிரு மணி நேரங்களாவது தனித்திருந்து, பிறகு வலீமா விருந்தைக் கொடுப்பது மார்க்கத்தின் வழிகாட்டலாகும்.

☛ சிலர், ஐந்து நேரங்களும் தொழுது, குர்ஆன் ஓதி, அல்லாஹ் வின் கடமைகளை முழுமையாக நிறைவேற்றுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு சிரமங்களும், கஷ்டங்களும் தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவர்களின் வியாபாரங்களில் சரிவுகள் ஏற்படுகின்றன. முன்னேற்றம் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், தொழுகையின்றி, அல்லாஹ்வின் வணக்க வழிபாடுகளின்றி வாழக்கூடிய சில மனிதர்கள், செழிப்பான வியாபாரங்கள் செய்து கொண்டு, சந்தோஷமான வாழ்க்கையோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதைப் பார்க்கின்ற நமக்கு எதுவும் புரியவில்லையே?

**பெங்களூரிலிருந்து நூருல்லாஹ்**

✍ அல்லாஹ் தனக்கு நெருக்கமானவர்களை பல நேரங்களில் சோதனை செய்வான். அவர்கள் அதில் வெற்றி பெற்றுவிட்டால் அவர்கள் அல்லாஹ்வின் அதிக நெருக்கத்திற்கும், நேசத்திற்கும் ஆளாகி விடுவார்கள். அல்லாஹ்வுக்கு மாறு செய்யக்கூடியவர்களுக்கு உலகின் நாட்களில் அவன் அதிக சோதனைகளைக் கொடுப்பதில்லை. மாறாக, நிறைவான சொத்துகளையும், நிறைவான சுகங்களையும் கொடுத்தே அவர்களை சோதிக்கிறான். அந்த சொத்துகள் மேலும் சுகங்களைக் கொண்டு அனுபவிக்கக் கூடிய வேளையில் அவர்கள் அல்லாஹ்வை நினைவு கூர்ந்தால், அப்படிப்பட்டவர்களை அல்லாஹ் தன் நேசத்திற்குரியவர்களாக மாற்றி விடுகிறான். ஆனால், அந்த சொத்து, சுகங்கள் கிடைத்த போது, அதைக் கொண்டு அவர்கள் பெருமையடித்துக் கொண்டும், அல்லாஹ்வுக்கு மாற்றமான, ஹராமான காரியங்களில் அதைப் பயன்படுத்திக்

கொண்டுமிருந்தால் சில நாட்கள் வரை அவர்களை அப்படியே விட்டு விடுவான். திடீரென்று பிடிக்க நினைத்துவிட்டால், அவனது பிடியை அவர்களால் நிச்சயமாக தாங்கிக் கொள்ள முடியாது. உஷார்!

எனது வங்கியில் அவ்வப்போது சிறிதளவு வட்டிப்பணம் வருகிறது. நான் அதை எடுத்து எந்த நிய்யத்தும் இல்லாமல் உறவினர்களுக்கு மருந்து மற்றும் ஆடைகளை வாங்கிக் கொடுக்கலாமா?

**மேட்டுப்பாளையத்திலிருந்து**
**முஹம்மது யூசுஃப்**

வாங்கிக் கொடுக்கலாம்.

ஆஸருடைய இமாம் ஜமாஅத் முடிந்தவுடன், களாவான தொழுகை களை மக்ரிபு நேரம் வரும்வரை தொழுது கொள்ளலாமா?

**உத்தமபாளையத்திலிருந்து**
**பீர் முஹம்மது**

அஸர் தொழுதுமுடிந்த பின்பு, அன்றைய தினம் அல்லது அதற்கு முந்தைய தினங்களில் களாவான ஃபர்ளான தொழுகைகளை தொழுது கொள்வதில் தவறில்லை. எனினும், சூரிய மறைவு நேரம் நெருங்கி, சூரியன் மஞ்சனித்துவிட்டால் அப்போது ஃபர்ளான, நஃபிலான எந்தத் தொழுகையையும் தொழுவது கூடாது.

ஆனால், ஒருவர் ஏதோவொரு சூழ்நிலை காரணமாக, அன்றைய தினத்தின் அஸர் தொழுகையை சூரியன் மஞ்சனிக்கும் அளவுக்கு தாமதமாக ஆகி தொழுக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் அதை மட்டும் தொழுது கொள்வது கூடும்.

நாற்காலியில் அமர்ந்து தொழுகக்கூடிய பழக்கம் எல்லாப் பள்ளிவாசல்களிலும் மிகைத்து வருகிறது. இந்த சூழ்நிலையில், தொழுகைக்காக பள்ளிவாசலுக்கு வரக்கூடியவர்கள் சில சமயங்களில் கீழே அமர்ந்து ரேஹாலியை வைத்தோ அல்லது வைக்காமலோ குர்ஆன் ஓதிக் கொண்டிருக்கிறார்கள். அதே பள்ளிவாசலில் அவருக்கு அருகிலோ அல்லது தூரத்திலோ சில வயதானவர்கள் சேர்கள் மீது அமர்ந்து கொண்டிருக்கிறார்கள். இதனால், அல்குர்ஆனின் கண்ணியத்திற்கு ஏதாவது இழுக்கு ஏற்படுமா? அப்படி ஏற்படுமென்றால் அதைத் தவிர்ப்பதற்காக இருவருக்குமிடையில் ஏதாவது தடுப்புகள் வைத்துக் கொண்டால் போதுமா? அல்லது இருவரும் தூரம் தூரமாக அமர்ந்து கொண்டால் போதுமா? மார்க்கம் என்ன சொல்கிறது?

**இளையான்குடியிலிருந்து**
**முஹம்மது இஸ்மாயீல்**

அல்குர்ஆன் உலகில் மிக உயர்ந்த வேதமாகும். அதன் கண்ணியமும், மரியாதையும் மிக உயர்தரமாக இருக்க வேண்டும். அதில் கொஞ்சமும் குறைவுகள்

ஏற்படக்கூடாது. கவனமாக செயல்பட வேண்டும். எனவே, அதன் திசையில் கால் நீட்டுவதோ அல்லது மற்ற புத்தகங்களைப் போல அதைத் தரையில் வைத்து பார்ப்பதோ அல்லது அதை அசால்ட்டாக திறந்து வைத்துவிட்டு, நாம் வேறு வேலைகளில் ஈடுபடு வதோ அல்லது அதை கீழே வைத்து விட்டு, நாம் நாற்காலி யில் அமருவதோ எதுவும் கூடாது.

எனவே, பள்ளிவாசலில் ஒருவர் கீழே உட்கார்ந்து குர்ஆன் ஓதிக் கொண்டிருக்கும்போது, அவருக்கு அருகாமையில், இன்னொருவர் நாற்காலியைப் போட்டு அமருவது கூடாது. இதேபோன்று நாற்காலியின் மீது ஒருவர் அமர்ந்து கொண்டிருக் கும்போது, இன்னொருவர் குர்ஆனை எடுத்துக் கொண்டு அவருக்கு அருகிலேயே கீழே போய் உட்காருவதும் கூடாது.

பொதுவாகவே, பள்ளிவாசல் களில் அவசியமின்றி, நாற்காலி களைப் பயன்படுத்துவதை மார்க்க அறிஞர்கள் பல்வேறு வழிகளில் ஆய்வு செய்து அதை தடுத்திருக்கிறார்கள். அப்படியே அவசியமாக அமர வேண்டிய சூழ் நிலைஏற்பட்டால், குர்ஆனுடைய இடத்திலிருந்து சற்று தூரமாக அமர்ந்து கொள்ள வேண்டும். அதாவது, இவர் ஒரு ஓரத்திலும், குர்ஆன் ஓதுபவர் இன்னொரு ஓரத்திலும் இருந்தால் போதுமா னது. அல்லது குர்ஆனுக்கும், இவருக்கும் இடையில் சுமார் இரண்டு ஸஃப்கள் அளவு இடை வெளிஇருந்தாலும்போதுமானது. குர்ஆனுக்கு கூறப்பட்ட சட்டம் தான் குர்ஆனை ஒட்டிய மார்க்கம் சார்ந்த கிதாபுகளுக்கும் பொருந் தும். எனவே, குர்ஆனை மதிப்ப தற்கு அடுத்தகட்டமாக மார்க்கத் துடைய ஹதீஸ்களையும், ஃபிக்ஹு உடைய கிதாபுகளை யும் மிக்க மரியாதையாகக் கையாள வேண்டும்.

☛ எனக்கு இரண்டு ஆண் பிள்ளைகளும், இரண்டு பெண் பிள்ளைகளும் உள்ளனர். என் வாழ்நாள் இருக்கும்போதே எனக்குச் சொந்தமான சொத்துக் களை அவர்களுக்கு நடுவில் பிரித்துக் கொடுத்துவிட வேண் டும் என்று நினைக்கிறேன். பதில் தேவை.

**உளுந்தூர்பேட்டையிலிருந்து அப்துல்லாஹ்**

✍ நீங்கள் விரும்பினால் உங் களது சொத்துக்களை அப்படி பிரித்துக் கொடுப்பது ஆகுமான தாகும். எனினும், அதில் ஆண் - பெண்பிள்ளைகளுக்கு நடுவில், கூடுதல் - குறைவுகள் இன்றி, சரி சமமாக பிரித்துக் கொடுத்து விட வேண்டும். உங்களுக் கென்று ஏதாவது ஒன்றை உங்களின் சொந்தப் பிடியில் வைத்துக் கொண்டு மற்றதைப் பிரித்துக் கொடுத்து விடலாம்.

87 வருட பாரம்பரியம்

## ஆடைகளும் கலாச்சாரமும்

# நான்கு தலைமுறைகளாய்



மனசெல்லாம் மஹாராஜா... ®

# மஹாராஜா

பட்டு • ஜவுளி • ரெடிமேட்ஸ்

தஞ்சாவூர் : காந்திஜி ரோடு

தஞ்சாவூர் : நியூ ஹவுசிங் யூனிட்

இராமநாதபுரம்

பள்ளிவாசலில் தொழுகையை முடித்துவிட்டு வெளியே வரும்போது சில பெரியவர்கள் ஒருவரையொருவர் சந்தித்து முஸாஃபஹா செய்து கொள்கிறார்கள். இது விஷயத்தில் மார்க்க நிலைபாடு என்ன?

**சேலத்திலிருந்து**
**இல்யாஸ்**

பொதுவாக, ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமை சந்திக்கும்போது ஸலாம் சொல்வதும், முஸாஃபஹா செய்வதும் நிறைந்த நன்மைகளைக் கொண்ட செயல்களாகும். ஆனால், தொழுகைக்குப் பின்பு வழமையாக தொழுக வரக் கூடியவர்கள் தங்களுக்குள் முஸாஃபஹா செய்து கொள்வதை வழமை யாக்கிக் கொள்வார்களானால், அதற்கு நமது மார்க்க அறிஞர்கள் இடம் கொடுக்க வில்லை. அதாவது, தொழுகை முடிந்ததும், முஸாஃபாஹா செய்வதுகண்டிப்பானதுஎன்றும், அதை செய்து முடித்தால்தான் தொழுகை முழுமையடையும் என்று நினைப்பதும், அப்படி முஸாஃபஹா செய்யாதவர் களை குறை கூறுவதும், அப்படி முஸாஃபஹா செய்யாவிட் டால்தொழுகையில்குறைவுஏற் பட்டுவிடும்என்றுநினைப்பதும் ஆகுமானது அல்ல என்று மிகப் பிரபலமான மார்க்கச் சட்ட நூல்களில் அந்த மாமேதைகள் ஹதீஸின் ஆதாரங்களோடு நமக்கு வழங்கியுள்ளார்கள். எனவே, எப்போதாவது ஒரு முறை சந்திக்கக்கூடிய ஒருவரிடம் முஸாஃபஹா செய்து கொள்வது தவறல்ல. அதை வழமையாக்கிக் கொள்வது ஷரீஅத்படி தவிர்க்க வேண்டிய விஷயங்களாகும்.

கேரளா வயநாடு நிலச்சரிவு பற்றி தங்களின் கருத்து என்ன?

**ஈரோட்டிலிருந்து**
**செய்யது முஸ்தபா**

இதுபோன்ற எதிர்பாராத விதமான நிகழ்வுகள் எப்போதா வதுநிகழ்ந்துவிடுவது அல்லாஹ் வின் நாட்டத்தில் கட்டுப்பட்ட தாகும். அது சில சமயங்களில், அல்லாஹ்வின் கோபமாகக்கூட இருக்கலாம். சில சமயங்களில் அது மனிதர்களுக்கு எச்சரிக்கை யாக இருக்கலாம். அல்லது சில சமயங்களில் ஏதாவது ஒரு நன்மையைக் கருதி, அல்லாஹ் அதை ஏற்படுத்தியிருக்கலாம். அதன் இரகசியம் அவனுக்கு மட்டுமே தெரிந்த விஷயமாகும். அதை வைத்துக் கொண்டு மேற்படி விபத்தில் சிக்கி இறந்து போனவர்களை பாவம் செய்தவர்கள் என்றும், அந்த மக்களின் குற்றங்குறைகளின் காரணமாக அல்லாஹ்வின் வேதனை அவர்களைப் பிடித்து விட்டது என்றும் பேசிக் கொள் வது நம்மவர்களுக்கு அழகானது அல்ல. மாறாக, அப்படி இறந்து விட்ட முஸ்லிம்கள் நிச்சயமாக, ஷஹீதுகளின் அந்தஸ்தில்

அல்லாஹ்விடம் சேர்ந்து விட்டார்கள் என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மையாகும். எனவே, இந்த நிலையில், அவர்களின் மறுமைக்காக துஆ செய்வதும், அவர்களின் எஞ்சியுள்ள குடும்பத்தினர்களுக்காக துஆ செய்வதும் மட்டுமே நமது கடமையாகும். இதை விடுத்து அவசியமில்லாத சர்ச்சைகளை பேசுவதும், பித்னாக்களை பரப்புவதும் அந்த ஷஹீதுகளின் விஷயத்தில் நம் மீது பெரும் பாவச் சுமையாக மாறிவிடலாம். எனவே, அந்த நல்லவர்களுக்காக அதிகமதிகம் துஆ செய்வோம்.

☛ ஃபர்ளு தொழுகைக்காக ஏழு வயதுக்குக் கீழ் இருக்கக் கூடிய விபரமறியாத குழந்தைகளையும் சில சகோதரர்கள் தொழுகைக்கு அழைத்துக் கொண்டு வந்து விடுகிறார்கள். இது விஷயத்தில் நமது மார்க்கத்தின் சட்டம் என்ன?

**தேனியிலிருந்து முஹம்மது**

✍ பொதுவாக, பள்ளிவாசல் அல்லாஹ்வின் அடையாளங்களில் ஒன்றாகும். அதில் சப்தமிடுவதும், அதை அசுத்தப்படுத்துவதும் தடை செய்யப்பட்டுள்ளது. இந்த அடிப்படையை வைத்து விபரமறியாத குழந்தைகளை பள்ளிவாசலுக்கு அழைத்து வந்தால் அதன் மூலம் தொழுகையாளிகளின் அமைதிகள் குலைந்து போய் விடும் என்று பயந்தாலோ அல்லது குழந்தைகள் தங்களை அறிந்தோ அறியாமலோ அசுத்தம் செய்து விடுவார்கள் என்று நினைத்தாலோ அப்படிப்பட்ட குழந்தைகளை பள்ளிவாசலுக்கு அழைத்து வருவது கூடாது.

எனவே, பள்ளிவாசல் மற்றும் தொழுகையைப் பற்றி ஓரளவு அறிவூட்டப்பட்ட, வயதுக்கு வராத சிறுபிள்ளைகளை பள்ளிவாசல்களுக்கு அழைத்து வருவது ஆகுமானதாகும்.

மேலும், பருவ வயது அடைவதற்கு நெருக்கமாக ஆகியிருக்கக் கூடிய ஆண் பிள்ளைகளை பள்ளிவாசலுக்கு அழைத்து வருவது அவசியம் செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். அப்போதுதான் தொழுகையின் அவசியமும், பள்ளிவாசலின் அவசியமும், ஜமாஅத் தொழுகையின் முக்கியத்துவமும் அந்தப் பிள்ளைகளுக்கு புரிந்து, அவர்கள் பருவ வயதை அடைந்ததற்கு பின்பும் பள்ளிவாசல் சார்ந்த ஜமாஅத்துடைய தொழுகைகளை தொடர்படியாக தொழுவதற்கு அது ஒரு நல்ல வழியை ஏற்படுத்தும். எனவே, இந்த மூன்று நிலைகளுக்குள் தங்களின் குழந்தைகள் எந்த நிலையைச் சார்ந்தவர்கள் என்பதை அந்தந்த பெற்றோர்கள் முடிவு செய்து அதற்கு தகுந்தவாறு அந்தக் குழந்தைகளை பள்ளிவாசலுக்கு தொடர்புடையவர்களாக ஆக்க வேண்டும்.

# காலக் கண்ணாடி

தென்காசி மஸ்ஊது

## நோய்த்தடுப்பு அருமருந்து – தாய்ப்பால்

ஆகஸ்ட் 1 – 7 உலகத்தாய்ப்பால் வாரம் கொண்டாடப்பட்டது. குழந்தை பிறந்த அரை மணி நேரத்திற்குள்ளும், அறுவை சிகிச்சை மூலமாகப் பிறந்த குழந்தை என்றால் இரண்டு மணி நேரத்திலும் தாய்ப்பால் கொடுக்க வேண்டும். குறைந்த பட்சம் 3 மணி நேரத்திற்கு ஒரு முறை தாய்ப்பால் புகட்டுவது அவசியம்.

தாய்ப்பாலில் ஆன்டிபயாடிகள் உள்ளதால், வைரஸ், பாக்டீரியா தொற்றுகளை எதிர்த்துப் போராட அது உதவுகிறது. தாய்ப்பால் அருந்தும் குழந்தைகளுக்கு வலுவான நோய் எதிர்ப்பு ஆற்றல் உருவாகிறது.

மேலும் தாய்ப்பால் கொடுக்கும்போது ஏற்படும் தாய் – சேய் இடையேயான தொடர்பு குழந்தை பாதுகாப்பை உணர உதவுகிறது.

தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்களுக்கு பிரசவத்திற்குப் பிறகான மனச்சோர்வு, ஆஸ்டியோபோரோசிஸ், இடுப்பு எலும்பு முறிவுகள் ஆகியவை பிற்காலத்தில் ஏற்படும் அபாயம் குறைவு.

– இந்து தமிழ் திசை (03-08-24)

“தமது தாய் தந்தை[க்கு நன்றி செய்வது] பற்றி மனிதனுக்கு நாம் நல்லுபதேசம் செய்தோம். அவனுடைய தாய், துன்பத்தின் மேல் துன்பத்தை அனுபவித்து, [கர்ப்பத்தில்] அவனைச் சுமந்தாள். [அவன் பிறந்த] பிறகும், இரண்டு வருடங்களுக்குப் பின்னரே அவனுக்குப் பால் மறக்கடித்தாள். [ஆகவே, மனிதனே!] நீ எனக்கும், உன்னுடைய தாய் தந்தைக்கும் நன்றி செலுத்தி வா. [முடிவில் நீ] என்னிடமே வந்து சேர வேண்டியதிருக்கிறது.” – அல்குர்ஆன் [31 : 14]

“மனிதன் தன்னைப் பெற்றோருக்கு நன்றி செய்யும்படி நாம் அவனுக்கு நல்லுபதேசம் செய்தோம். அவனுடைய தாய், கஷ்டத்துடனேயே [கர்ப்பத்தில்] அவனைச் சுமந்திருந்து, கஷ்டத்துடனேயே அவனைப் பிரசவிக்கின்றாள். அவள் கர்ப்பமானதிலிருந்து, இவன் பால்குடி மறக்கும் வரையில் முப்பது மாதங்கள் [மிக்க கஷ்டத்துடன் செல்லுகின்றன]....”

– அல்குர்ஆன் (46 : 15)

# தாராபுரம்

# பெரிய ஹள்ரத் அவர்களின் இழப்பு!

மவ்லானா மவ்லவீ முஃப்தீ அல்ஹாஃபிழ் அல்ஹாஜ்
**மு.முஹம்மது இஸ்மாயீல்** காஷிஃபீ ஃபாஜில் தேவ்பந்தீ ஜலாலாபாதீ

ஈரோடு ஜம்பையில் பிறந்து, வளர்ந்து, ஈரோடு தாவூதிய்யா அரபு கல்லூரியில் ஆரம்ப காலத்தில் பயின்று, மதரஸாவின் முதல் மாணவராக ஸனது பெற்று, மவ்லானா மர்ஹூம் சித்தீக் அலீ (ரஹ்), மவ்லானா மர்ஹூம் உமர் ஃபாரூக் (ரஹ்) போன்ற பெரும் பெரும் பெரியார்களுக்கு முன்னால் அந்த மதரஸாவின் பேராசிரியராக தேர்வு செய்யப்பட்டு, மாணவர்களுக்கு ஓதிக் கொடுத்து, பின்பு,

ஊட்டியில் இமாமாக பணியாற்றிவிட்டு, அதைத் தொடர்ந்து லால்பேட்டை மாநகரில் மிகப் பிரபலமான ஹோமியோபதி மருத்துவராக பணியாற்றி, மக்களுக்கு பல சேவைகள் செய்து, அதே காலத்தில் லால்பேட்டை மதரஸாவில் ஃபாஜில் பிரிவில் சேர்ந்து ஃபாஜில் மன்பஈ ஸனது பெற்ற பின்பு,

தாராபுரத்திற்கு வந்து, தனது மருத்துவ சேவைகளையும், மார்க்க சேவைகளையும் மன நிறைவோடு மக்களுக்கு செய்து வந்தார்கள்.

தாராபுரம் மரக்கடை பள்ளிவாசலில் சுமார் இருபது ஆண்டுகாலம் இமாமாக பணியாற்றி விட்டு, பிற்காலத்தில் எழுதுவதையும், பேசுவதையுமே தனது இலட்சியமாக ஆக்கிக் கொண்டு வாழ்ந்து சென்றவர்தான் :

மூத்த ஆலிம் பெருமகனாரும், தாராபுரம் வட்டார ஜமாஅத் உலமா சபையின் தலைவரும், குர்ஆனின் குரல் போன்ற பல தமிழ் மாத - வார இதழ்களில் நீண்ட நெடிய காலமாக எழுதி எழுதி தன் கட்டுரைகள் மூலம் சமுதாயத்தை தட்டியெழுப்பியவர் "ஜம்பை ஜப்பார்" எனும் அல்ஹாஜ் மவ்லானா மவ்லவீ **ஜே.எம்.அப்துல் ஜப்பார் தாவூதி பாஜில் மன்பஈ** ஹள்ரத் அவர்கள்!

அப்படிப்பட்ட மாமேதை; அவரைப் பற்றி விரிவாக சொல்லு மளவு விபரம் தேவையில்லை.

மற்ற ஆலிம்களையெல்லாம் மவ்லானா என்றும், அல்லாமா என்றும், மவ்லவீ என்றும், ஹள்ரத் என்றும் மக்கள் புகழ் பாடுவார்கள்.

ஆனால், எந்த அடைமொழியும் இல்லாமல் "ஜம்பை ஜப்பார் ஹள்ரத்" என்ற மூன்று வார்த்தைகளைக் கொண்டு மட்டுமே தமிழகம் முழுவதும் அறியப்பட்ட மாமேதை. தனது எழுத்துக்

களால் பல இலட்சக்கணக்கான வாசகர்களை தன் பக்கம் ஈர்த்துக் கொண்ட மிகப் பெரும் ஆற்றல் கொண்ட மாமனிதர்!

அல்லாஹ் அவருக்கு உறுதியான சரீரத்தையும், அடர்த்தியான தாடியையும், பறந்து விரிந்த மனதையும், சரியான சிந்தனை திறனையும், எளிமையான வாழ்க்கையையும் கொடுத்திருந்தான்.

அல்லாஹ் கொடுத்திருந்த இந்த எல்லா நிஃமத்துக் களுக்கு பகரமாக இந்த சமுதாயத்திற்காக வேண்டி அவர் எழுதிய எழுத்துக்கள் கொஞ்சம் நஞ்சமல்ல.

துணுக்குகள் வடிவிலும், கட்டுரைகள் வடிவிலும், புத்தகங்கள் வடிவிலும் இந்தச் சமுதாயத்திற்கு ஏராளமான அறிவுரைகளை சொல்லி சென்றுள்ளார்.

அவருக்குப் பின்னால் கல்வி பயின்றவர்கள் கூட, இவ் வுலகை விட்டும் மறைந்துவிட்ட நிலையில் அல்லாஹ் அவருக்கு அவரது வயதிலும் நன்றாகவே பரக்கத் செய்திருந்தான் போல.

சுமார் 84 வயது வரை திடகாத்திரமாகவும், தைரியமாகவும், மனோ தத்துவத்துடனும், மார்க்க நெறிமுறைகளைப் பேணியும் வாழ்ந்து வந்திருக்கிறார்.

தான் அமர முடியாத சூழ்நிலையிலும்கூட படுத்துக் கொண்டே பரீட்சை அட்டையை கிளிப் குத்தி கையில் வைத்துக் கொண்டு, அதன் பேப்பரில் தன் எழுத்துக்களைக் கொண்டு வரைவார்.

அவரை சந்திக்க வரக்கூடிய ஆலிம் பெருமக்களை மிகச் சிறப்பாக கண்ணியப்படுத்துவார்.

வரக் கூடியவர் வயதில் குறைந்தவராக இருந்தாலும், அவரை கண்ணியத்தோடு வரவேற்று, தன்னால் முடிந்த விருந்துபசாரத்தைச் செய்து, மிக கண்ணியத்தோடு அவரை வழியனுப்பியும் வைப்பார்.

நீண்ட காலம் வரை குர்ஆனின் குரல் மாத இதழுக்கு வருட சந்தாவை செலுத்தி, இதழை வாங்கி படித்துக் கொண்டிருந்தார். பல்வேறு தலைப்புகளில் எழுதி எழுதி அனுப்பிக் கொண்டிருந்த கட்டுரைகளும் இந்த இதழோடு நிறைவு பெற்றுவிட்டன.

ஹள்ரத் அவர்களின் கட்டுரைகள் அவர்களின் வாழ்வின் முடிவையொட்டியே நிறைவு பெற்றிருப்பது ஏதோ ஒரு அறிகுறியாகக் கூட இருக்கலாம்.

லால்பேட்டையிலும், தாராபுரத்திலும், ஈரோட்டிலும் அவர் சம்பாதித்த மனித உள்ளங்கள் எண்ணிலடங்காதவை!

அல்லாஹு அக்பர்!

அதனால்தான் அவரது ஜனாஸா தொழுகையில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டுவிட்டனர்!

அப்பேர்ப்பட்ட மாமனிதர் நம்மைவிட்டும் கடந்த 09.09.2024 அன்று மறுவுலகப் பயணம் மேற்கொண்டது மிகுந்த வேதனையளிக்கும் செய்தியாகவே இருந்தது. ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பாகவே இருந்தது.

அல்லாஹ் அன்னாரின் எல்லாக் குற்றங்குறைகளையும் மன்னித்து, அன்னாரின் இருப்பிடத்தை ஜன்னத்துல் ஃபிர்தௌஸாக ஆக்கித் தந்தருள்வானாக.

அன்னார் உலகில் வாழும் போது இந்தச் சமுதாயத்திற்காக எடுத்துக் கொண்ட எல்லா முயற்சிகளையும், எழுத்துக்களையும், பேச்சுகளையும் கபூல் செய்தருள்வானாக.

அன்னாரின் குடும்பத்தாருக்கும், மாணவர்களுக்கும், நண்பர்களுக்கும், எங்களைப் போன்ற பத்திரிகையாளர் களுக்கும் நிறைவான "ஸப்ரன் ஜமீல்" என்ற அழகிய பொறுமையை தந்தருள் புரிவானாக.

ஆமீன் ஆமீன் யா ரப்பல் ஆலமீன்!

"ஒரு பேரீத்தம் பழத்தின் ஒரு துண்டை தர்மம் செய்தாவது நரகத்திலிருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல் : புகாரீ)

பாவா மெடிக்கல்ஸ்

53/4, பெரிய தெரு,
பட்டுக்கோட்டை–1.

✆ 04373-254354; 253339; 📱 99444 54354

# வரலாற்றில் ஓர் ஏடு

இறைத்தூதர் ஹள்ரத் தாவூத் (அலை) அவர்கள் காலத்தில் இரண்டு பெண்கள் கொண்டு வந்த வழக்கு பற்றி நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள் :-

"அவர்களில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு புதல்வர் இருந்தனர். ஒரு நாள் ஓநாய் ஒன்று வந்து அவ்விருவரின் புதல்வர்களில் ஒருவரைப் பிடித்துக் கொன்று விட்டது. ஆகவே இருவரும் ஹள்ரத் தாவூத் (அலை) அவர்களிடம் தீர்ப்புக் கேட்கச் சென்றார்கள். ஹள்ரத் தாவூத் (அலை) அவர்கள் அவ்விரு பெண்களில் மூத்தவளுக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்தார்கள். அவர்கள் வெளியே வந்தபோது அவ்விருவரையும் ஹள்ரத் சுலைமான் (அலை) அவர்கள் அழைத்தார்கள்.

அவர்களிடம் "ஒரு கத்தியைக் கொண்டு வாருங்கள். நான் (மீதியுள்ள ஒரு மகனை ஆளுக்குப் பாதியாக) உங்களுக்கு இருவருக்கிடையே பிளந்து (பங்கிட்டு) விடுகிறேன்" என்று கூறினார்கள்.

"உடனே இளையவள் (பதறிப்போய்), "அல்லாஹ் உங்களுக்குக் கருணை புரியட்டும், (அவ்வாறு செய்து விடாதீர்கள்) இவன் அவளுடைய மகன்தான்" என்று கூறினாள்.

"(இவ்வாறு தீர்ப்பளித்தபோதும் மூத்தவள் எந்தச் சலனமும் இல்லாமல் இருந்தாள்.) ஆகவே, ஹள்ரத் சுலைமான் (அலை) அவர்கள் (தாயுள்ளத்தை அறிந்து கொண்டு), இருக்கும் குழந்தை இளையவளுக்குரியது எனத் தீர்ப்பளித்தார்கள்."

உண்மையான தாய் தன் குழந்தை தன் கண்ணெதிரே கொல்லப்படுவதை விரும்பமாட்டாள் என்பதனை உணர்ந்து ஹள்ரத் சுலைமான் (அலை) அவர்கள் இந்த தந்திரம் செய்தார்கள். எதிர்பார்த்தபடியே இளையவள் துடித்தாள்; மூத்தவளிடம் எந்தச் சலனமும் இல்லை. மூத்தவளின் குழந்தையைத்தான் ஓநாய் தூக்கிச் சென்றுவிட்டது என்பது தானாகவே முடிவாயிற்று.

ஆதாரம் : தஃப்ஸீர் இப்னு கஸீர் தொகுதி 5 / பக்கம் 902 & 903

தருபவர் : **ப.பீர்இலாஹி** B.Sc., உத்தமபாளையம்.

# இந்த ஹதீஸை நீங்கள் முதல் தடவை கேட்பதாக இருக்கலாம்...

மவ்லானா முஃப்தீ **எம்.அபுல்கலாம் காஸ்** ஹஸ்ரத் – சேலம்.

நபி (ஸல்) அவர்கள் வீட்டிலிருந்து வெளியே வந்தார்கள்.

“நேற்றிரவு நான் கனவில் ஆச்சரியமான விஷயங்களைப் பார்த்தேன்” என்று சொன்னார்கள்.

“நான் எனது உம்மத்திலுள்ள ஒருவரைப் பார்த்தேன். அவரை மலக்குமார்கள் சூழ்ந்திருந்தார்கள். அவர் செய்த ஒளு அவரிடம் வந்தது. அந்த மலக்குமார்களின் பிடியிலிருந்து அவரைக் காப்பாற்றியது.

இன்னும் எனது உம்மத்திலுள்ள ஒருவரைப் பார்த்தேன். அவரை ஷைத்தான்கள் சூழ்ந்திருந்தார்கள். அப்பொழுது அவர் ஓதிய அல்லாஹ்வின் திக்ரு அவரிடம் வந்தது. பிறகு அந்த ஷைத்தான்களிடமிருந்து அவரைக் காப்பாற்றியது.

இன்னும் எனது உம்மத்திலுள்ள ஒருவரைப் பார்த்தேன். தாகத்தினால் அவரது நாக்கு தொங்கிக் கொண்டிருந்தது. அப்போது அவர் வைத்த ரமளானின் நோன்பு அவரிடம் வந்தது. பிறகு அவருக்கு நீர் புகட்டியது.

இன்னும் எனது உம்மத்திலுள்ள ஒருவரைப் பார்த்தேன். அவருக்கு முன்னும் – பின்னும், வலமும் – இடமும், மேலும் – கீழும் இருள் இருந்தது. அப்பொழுது அவர் செய்த ஹஜ்ஜும், உம்ராவும் அவரிடம் வந்தன. பிறகு அந்த இருளிலிருந்து அவரை வெளியாக்கியது.

இன்னும் எனது உம்மத்திலுள்ள ஒருவரைப் பார்த்தேன். அவருடைய ரூஹை கைப்பற்றுவதற்கு “மலக்குல் மௌத்” அவரிடம் வந்தார். அப்பொழுது அவர் பெற்றோர்களுக்கு செய்த உபகாரம் அவரிடம் வந்தது. பிறகு அந்த உபகாரம் மலக்குல் மௌத்தை திருப்பி அனுப்பியது. (ஹதீஸில் வந்துள்ளது பெற்றோர்களுக்கு உபகாரம் செய்வது ஆயுளை அதிகரிக்கின்றது)

இன்னும் எனது உம்மத்திலுள்ள ஒருவரைப் பார்த்தேன். அவர் முஃமின்களிடம் பேசுகிறார். ஆனால் அவரிடம் அவர்கள் பேசாமல் இருக்கின்றார்கள். அப்பொழுது அவருடைய உறவு வந்தது. பிறகு சொன்னது "இவர் உறவினர்களுடன் இணைந்து வாழக்கூடியவராக இருந்தார்." பிறகு அவர் முஃமின்களிடம் பேசினார். அவர்களும் அவரிடம் பேசிவிட்டார்கள். மேலும் அவர்களுடன் இணைந்து விட்டார்.

இன்னும் எனது உம்மத்திலுள்ள ஒருவரைப் பார்த்தேன். மனிதர்கள் வட்டமாக அமர்ந்திருந்த நிலையில் அவர் அவர்களிடம் வந்தார். வந்தவரை அவர்கள் விரட்டி விட்டார்கள். அப்பொழுது ஜனாபத்திற்காக (பெருந்தொடக்கிற்காக) அவர் குளித்தக் குளிப்பு அவரிடம் வந்தது. அவருடைய கையைப் பிடித்து அவர்களுடன் (வட்டத்தில்) அமர வைத்தது.

இன்னும் எனது உம்மத்தில் ஒருவரைப் பார்த்தேன். நெருப்புடைய ஜூவாலையின் பயத்தால் முகத்தில் இரு கைகளை வைத்தவாறு பயந்து கொண்டிருந்தார். அப்பொழுது அவருடைய தான தர்மம் அவரிடம் வந்தது. இன்னும் அவருடைய தலைக்கு மேல் நிழலாகவும், அவருடைய முகத்திற்கு முன் திரையாகவும் மாறியது.

இன்னும் எனது உம்மத்தில் ஒருவரைப் பார்த்தேன். அவரிடம் வேதனை கொடுக்கக் கூடிய மலக்குமார்கள் வந்தார்கள். அப்பொழுது அவரிடம் அவர் நன்மையை ஏவி, தீமையை தடுத்த அந்த செயல் வந்தது. பிறகு அவரை அவர்களிடமிருந்து காப்பாற்றியது.

இன்னும் எனது உம்மத்தில் ஒருவரைப் பார்த்தேன். அவர் நரகத்தில் விழக்கூடியவராக இருந்தார். அப்பொழுது அவர் அல்லாஹ்விற்காக அழுத கண்ணீர் அவரிடம் வந்தது. பிறகு அவரை நரகத்திலிருந்து வெளியாக்கியது.

இன்னும் எனது உம்மத்தில் ஒருவரைப் பார்த்தேன். அவருடைய பட்டோலை அவரது இடது கையில் இருந்தது. அப்பொழுது (தக்வா) அல்லாஹ்வின் பயம் அவரிடம் வந்தது. பிறகு அது அந்தப் பட்டோலையை எடுத்து அவரது வலது கையில் வைத்தது.

**குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்:**

**94420 56547**

# முனவ்வரா மகளிர் அறநிலையம்

மூன்று மாவடி, (சர்வேயர் காலனி பஸ் ஸ்டாப்), மதுரை - 625 007.

அலைபேசி : 97156 04495, 95977 25934

எமது நிறுவனம், மதுரை மாநகரில் இறையருளால் கடந்த **55 ஆண்டுகளாக** அநாதை, ஏழை முஸ்லிம் பெண் குழந்தைகளுக்கு '**ஆலிமா**' பட்டப்படிப்புடன் மார்க்கக் கல்வி, அரசு **சமச்சீர் கல்வி,** தையல் பயிற்சியுடன், குர்ஆன் ஷரீஃப், கிதாபுகள், பள்ளிப் புத்தகங்கள், சீருடைகள், மருத்துவ வசதி, மூன்று வேளை உணவு, தங்குமிடம் யாவும் முற்றிலும் **இலவசமாக** வழங்கி (அல்லாஹு தஆலாவிடம் மேலான நன்மையைக் கருதி) சிறப்பாக நடைபெற்று வருகிறது. அல்ஹம்து லில்லாஹ்!

தற்போது நடப்புக் கல்வி ஆண்டு "**புதுச் சேர்க்கை**" நடைபெறுவதால் விருப்பமுள்ள மாணவிகள் தக்க பொறுப்பாளருடன் தம் மஹல்லா முஸ்லிம் ஜமாஅத்தின் கடிதம் பெற்று உடனே நேரில் வந்து இந்நல்வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் விழைகிறோம்.

இப்படிக்கு

**நிர்வாகக் குழுவினர்**

★ '**ஆலிமா**' வகுப்புக்கு வருடம் முழுவதும் எந்நாளிலும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

**எமது இந்நிறுவனத்திற்கு 'நிதி வசூலிப்போர்' யாரும் நியமிக்கப்படவில்லை.**

**எனவே, முனவ்வரா மகளிர் அற நிலையத்திற்கு உதவி செய்ய விரும்புகின்றவர்கள் நேரடியாகவே எங்களுக்கு "MUNAWWARAH GIRLS ORPHANAGE TRUST" என்ற பெயரில் DD/செக் / M.O. மூலம் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி உதவிட வேண்டுகிறோம்.**

இன்னும் எனது உம்மத்தில் ஒருவரைப் பார்த்தேன். (மரத்தின்) கிளை குலுங்குவதைப் போல நடுங்கிக் கொண்டிருந்தார். அப்பொழுது அல்லாஹ்வின் மீது அவர் வைத்த நல்லெண்ணம் அவரிடம் வந்தது. பிறகு அவருடைய நடுக்கத்தை நீக்கியது.

இன்னும் எனது உம்மத்தில் ஒருவரைப் பார்த்தேன். அவர் "ஸிராத்துல் முஸ்தகீம்" பாலத்தின் மீது ஒருமுறை தவழ்ந்த நிலையில் இருந்தார். இன்னும் ஒருமுறை முழங்காலிட்ட நிலையில் இருந்தார். இன்னும் ஒரு முறை தொங்கிய நிலையில் இருந்தார். அப்பொழுது அவரிடம் அவர் ஓதிய "ஸலவாத்து" வந்தது. பிறகு அவரது கையைப் பிடித்து ஸிராத்துல் முஸ்தகீம் பாலத்தைக் கடக்க வைத்தது.

இன்னும் எனது உம்மத்தில் ஒருவரைப் பார்த்தேன். அவர் சுவனத்தின் வாயில்களுக்கு அருகாமையில் சென்று விட்டார். ஆனால், அவர் உள்ளே நுழையும் முன் கதவுகள் மூடப்பட்டு விட்டன. அப்பொழுது "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்ற கலிமா அவரிடம் வந்தது. பிறகு அவரது கையைப் பிடித்து அவரை சுவனத்தில் நுழைவித்தது."

---


# மணமகன் தேவை

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த தற்போது நெல்லையில் வசித்து வரும் **B.B.A.**, மற்றும் ஃபேஷன் டெக்னாலஜி படித்த, கணவனை இழந்த, 10 வயது ஆண் பிள்ளை உள்ள, 38 வயதுடைய சாலிஹான மணமகளுக்கு, வயது 40 முதல் 45க்குள் உள்ள பட்டப்படிப்பு படித்த சாலிஹான **மணமகன் தேவை.**

தொடர்புக்கு: **8610854700** **7871213116**

# பொன்மனச் செம்மலின் பொன்மொழிகள்!

மவ்லானா அல்ஹாஜ் **ஜே.எம்.அப்துல் ஜப்பார்** தாவூதி பாஜில் மன்பஈ
**(ஜம்பை ஜப்பார்)**

"முன்னோர்களின் வரலாறு களை சொல்லிக் காட்டுங்கள் அவர்கள் சிந்தித்துப் பார்ப்பதற்காக"

- அல்குர்ஆன் (9 : 176)

"(நபியே!) இக்குர்ஆனை நாம் உமக்கு வஹியாக அறிவித் திருப்பதன் மூலம் வரலாறு களில் மிக அழகியதை நாம் உமக்கு கூறுகின்றோம்."

- அல்குர்ஆன் (12 : 3)

குர்ஆனில் சில நபிமார் களின் வரலாறு விரிவாகவும், சிலரின் வரலாறு சுருக்கமாகவும் கூறப்பட்டு, இதன் மூலம் அவர்களின் உம்மத்தினரின் நடவடிக்கைகள் தெளிவாக்கப் பட்டு படிப்பினையாக அறியப் படுகிறது.

ஹள்ரத் யூசுஃப் (அலை) அவர்களின் வரலாற்றில் பாசம், பொறாமை, கனவின் விளக்கம், விபச்சாரத் தடுப்பு, அழகின் விபரீதம் இப்படிப் பல படிப்பினைகள் கிடைக்கின்றன.

மஸ்ஜிதுன் நபவியில் நபி (ஸல்) அவர்களும், சஹாபிகளும் அமர்ந்திருக்க, பல்வேறு தொல்லைகளுக்கு உள்ளாக்கப் பட்ட, பாரம்பரிய பணக்காரக் குடும்பத்தைச் சார்ந்த புதிதாக இஸ்லாத்தில் நுழைந்த, முஸ்அப் இப்னு உமைர் உள்ளே வர, அவரது பழைய, கிழிந்த, ஒட்டுப் போடப்பட்ட ஆடையைப் பார்த்ததும் நபி (ஸல்) அவர் களின் கண்களில் கண்ணீர் சொட்ட, இதுவருத்தமுடன்வெளி யேறும் கண்ணீர் என சிலர் கூற, இல்லை; இது ஆனந்தக் கண்ணீர் என சிலர் கூறினர்.

காலையில் ஓர் ஆடை, மாலையில் ஓர் ஆடை அணியும் காலம் வரும். பல வகை உணவுகளின் வசதி வரும். கஃபாவுக்கு ஆடை அணிவிப் பது போல, வீடுகளில் திரைச் சீலை தொங்கும். அப்போது கடந்த காலத்தை நினைத்துப் பார்க்க வேண்டும்.

வரலாறுகள் சட்டங்களை நினைவூட்டும் "நோன்பிருக்கும் போது மனைவியை முத்தமிட லாமா?" என ஒருவர் கேட்க, "முத்தமிடலாம்" என நபி (ஸல்) அவர்கள் அனுமதிக்க, மறுநாள் ஒருவர் இதே கேள்வியை கேட்க,

"கூடாது" என்றார்கள் நபி (ஸல்) அவர்கள். முதலாமவர் வயோதிகர்; உணர்ச்சிவசப்பட மாட்டார். இரண்டாமவர் வாலிபர்; உணர்ச்சி வசப்பட்டு விடலாம். நோன்பு முறிந்து விடலாம். இப்படியொரு சட்ட விளக்கம் வரலாறு மூலம் தெரிய முடிகிறது.

அல்லாமா ஷிப்லீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் : "எப் பிரச்சனையாயினும், அப்பிரச்சனையை தெளிவு படுத்துபவரிடம் கேட்க வேண் டும். மருத்துவத்தை மருத்துவ நிபுணர்களிடமும், சட்டப் பிரச்சனையை வழக்கறிஞர்களிட மும், மார்க்கப் பிரச்சனையை உலமா பெருமக்களிடமும் கேட்க வேண்டும்."

இமாம் புகாரீ (ரஹ்) அவர்கள் ஆறு இலட்சம் ஹதீஸ்களிலிருந்து ஏழாயிரத்து முன்னூற்று தொண் ணூற்றேழு ஹதீஸ்களை மட்டும் தேர்ந்தெடுத்து தந்திருக்கிறார் கள். ஒரு ஹதீஸை ஒரு பாடத்தி லும், அதே ஹதீஸை வேறு பாடத்திலும் தந்திருப்பார்கள். அந்தந்த பாடத்திற்கேற்ப ஹதீஸ்களை தந்திருப்பார்கள். ஒரு சட்டத்தை ஆதாரப்பூர்வ மாகத் தருவதற்கு மிகப் பிரயாசைப்பட்டிருக்கிறார்கள். இலட்சங்களிலிருந்து சில ஆயிரங்களை மட்டும் தேர்ந்தெடுத்திருப்பதென்பது ஹதீஸை அறிவித்தவர்களை புடம் போட்டு பார்த்து தேர்வு செய்திருக்கிறார்கள் எனத் தெரிகிறது.

நினைவாற்றல் மிக்கவர் களால் ஹதீஸ் கூறப்பட்டுள் ளது. இமாம் புகாரீ (ரஹ்) அவர் கள் கூறுகிறார்கள்: "உபைதுல்லா ஹிப்னு ஜாபிரிப்னு அம்ர் (ரளி) என்ற ஸஹாபி வரகீ என்பவரை சந்திக்கிறார். "என்னைத் தெரி கிறதா?" என உபை கேட்கிறார். "தெரியாது. ஆனால் அதி என்பவர் தன் குழந்தையை முழுக்க மூடியவாறு ஒரு பெண் ணிடம் கொண்டு போய் பால் கொடுக்கக் கூறினார். அப்போது அக்குழந்தையின் கால் விரல் கள் மட்டும் தெரிந்தன. அந்தக் கால் விரல்களும், உம்முடைய இக்கால் விரல்களும் ஒரே மாதிரியாக இருக்கின்றன" என்றார் வரகீ. இப்படித்தான் ஹதீஸ் சட்ட வல்லுநர்களின் நினைவாற்றல் இருந்தது.

ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் நூறு ஹதீஸ்களை ஒருவரிடம் சொன்னார்கள். அவர் ஓர் ஆண்டுக்குப் பிறகு அதே ஹதீஸ்களை சிறிதும் பிசகாமல் சொன்னதைக் கேட்டு, அவரின் நினைவாற்றலைக் கண்டு வியந்தார்கள்.

**குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்:**
**94420 56547**

# நிரந்தர நன்மை பெற உதவிடுவீர்!

அன்புடையீர், அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்....

வேலூர் மாவட்டம் அரியூரில் அமைந்துள்ள **ஜாமிஆ தக்வியதுல் இஸ்லாம் அரபிக் கல்லூரியில்** பயிலும் மாணவர்களின் இட நெருக்கடியைப் போக்கும் விதத்தில் அருகிலுள்ள காலி இடம் **(ரூபாய் ஒரு கோடியே நாற்பது இலட்சம்)** விலை பேசப்பட்டு அதை வாங்குவதற்காக கடந்த ஓராண்டாக தங்களைப் போன்ற நல்லுள்ளங்களிடம் உதவி வேண்டி கோரிக்கை வைக்கப்பட்டது. அதற்கிணங்க அவர்கள் செய்த உதவிகளின் மூலம் பாதிக்கும் மேற்பட்ட தொகை **(80 இலட்சம்)** சேர்ந்து விட்டது. அல்ஹம்துலில்லாஹ்! அந்த மேன்மக்களின் உதவிகளை அல்லாஹ் கபூல் செய்வானாக! அவர்களின் உயிர், பொருள், செல்வத்தில் அல்லாஹ் பரக்கத் செய்வானாக! இடத்தின் உரிமையாளரிடம் ரமளான் மாத இறுதிக்குள் பணம் தருவதாக வாக்களித்திருந்தோம். ஆனால் முழுத் தொகையும் வசூல் ஆகாத காரணத்தால் மேற்கொண்டு சில மாதங்கள் தவணை பெறப்பட்டது. வரும் செப்டம்பருடன் அந்தத் தவணையும் முடிவடைய உள்ளது. எனவே குறைந்த கால அவகாசமே உள்ளதால் மீதமுள்ள **60 இலட்சம் ரூபாய்களை** நாங்கள் கொடுப்பதற்கு உதவிடுமாறு மீண்டும் தங்களிடம் உதவி கோருகிறோம்.

தங்களின் இந்த உதவியால் கியாமத்து நாள் வரை தங்களுக்கும், தங்கள் பெற்றோர் மற்றும் தாங்கள் யாருக்காக நிய்யத் செய்தீர்களோ அவர்களுக்கும் ஸதக்கா ஜாரியாவாக தொடர்ந்து நன்மைகள் கிடைத்துக் கொண்டே இருக்கும் இன்ஷா அல்லாஹ்.

| |
|---|
| ஒரு சதுர அடி ரூபாய் **1,000/-** |
| ஒரு முஸல்லா அளவு ரூபாய் **6,000/-** |

इंडियन बैंक Indian Bank

**AZEEZIA EDUCATIONAL & CHARITABLE TRUST**

**A/C No. : 6845938157**

**BRANCH NAME : ARIYUR**

**IFSC CODE : IDIB000A198**

Estd.: 2007-1427

**மேலும் விபரங்களுக்கு :**

மவ்லானா **உபைதுல்லாஹ்** சாஹிப் காஸிமி, நிறுவனர் & முதல்வர்

## ஜாமிஆ தக்வியதுல் இஸ்லாம் அரபிக் கல்லூரி

அஜீஸ் நகர், அரியூர், வேலூர்–632055. தமிழ்நாடு Cell : 9443491834

ஹள்ரத் இப்னு மஸ்ஊது (ரளி) அவர்கள் ஒரு ஹதீஸை கூறினால் கண்கள் கண்ணீரை வடிக்கும். நரம்புகள் புடைக்கும். உடம்பு நடுங்கும். எந்த வார்த்தையும் கூடவோ, குறையவோ இருந்திடக் கூடாது என்ற பயம். ஹள்ரத் அபூதர் (ரளி) அவர்கள் ஒரு ஹதீஸை கூறினால் தவறு நேர்ந்திடுமோ என பயந்து மயக்கமுற்று விடுவார்கள்.

குர்ஆனையும், ஹதீஸையும் இணைத்தே சட்டம் சொல்லப்படுகிறது.

ஜனாஸா தொழுகை ஹதீஸின்படியே தொழுகப்படுகிறது. பாங்கு பற்றி குர்ஆன் கூறுகிறது. ஆனால்எப்படிகூற வேண்டும் என்பது ஹதீஸின் மூலம் தான் தெரிந்துகொள்கிறோம். ஒளுவின் ஃபர்ளுகளை குர்ஆன் கூறுகிறது. சுன்னத்துகளை ஹதீஸ் கூறுகிறது.

அதனால்தான் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "அல்லாஹ்வுடைய கலாமும், நான் சொன்னவையும் உங்களுக்கு வழிகாட்டும். இரண்டையும் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்"

நபி (ஸல்) அவர்கள் தங்கள் வாயின் பக்கம் ஜாடை காட்டி "அல்லாஹ்வின் மீது சத்தியமாக! இதிலிருந்து உண்மையைத் தவிர வேறெதுவும் வெளி வராது" என்றார்கள்.


ஆனந்தமாய் வாங்க! திருமண சீர்வரிசை பாத்திரங்கள் வாங்க!!

N.S.ஸ்டீல் ஹவுஸ்



எங்களிடம்

திருமண சீர்வரிசை பாத்திரங்கள், பிரஷர் குக்கர், மிக்ஸி, கிரைண்டர், கேஸ் ஸ்டவ், பரிசுப்பொருட்கள் அனைத்தும் தரமான, நியாயமான விலையில் கிடைக்கும்.

214/182, கீழவெளி வீதி, மதுரை-625001.
செல் : 9944001362

## மதுரை M.I.W.S. பைத்துல்மாலின் திருமண விழா

**குர்ஆனின் குரல் நிறுவனர்களில் ஒருவரும், மதுரை J.M.S. அரபு கல்லூரி மற்றும் M.I.W.S. பைத்துல்மால் நிறுவனருமான "அஸ்அதுல் மில்லத்" அல்லாமா அ.முஹம்மது அஷ்ரஃப் அலீ ஹள்ரத் கிப்லா** (ரஹ்) அவர்களால் உருவாக்கப்பட்டு கடந்த 1982ஆம் ஆண்டு முதல் மதுரை இஸ்லாமிக் வெல்ஃபேர் சொஸைட்டி (M.I.W.S.) பைத்துல்மால் இன்று வரை பன்னூறு ஏழைக் குமர்களுக்கு நிக்காஹ் செய்து வைத்து அவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றியுள்ளது. அல்ஹம்து லில்லாஹ்!

அந்த சேவையின் தொடர்ச்சியாக...

கடந்த 22.09.2024 ஞாயிற்றுக்கிழமையன்று காலை 10.30 மணியளவில் மதுரை J.M.S. அரபு கல்லூரி வளாகத்திலுள்ள **"அஸ்அதுல் மில்லத்" ஹள்ரத் (ரஹ்) அவர்களின் நினைவரங்கத்தில் ஏழு குமர்களுக்கான திருமணங்கள்** மிகச் சிறப்புடன் நடைபெற்றன.

விழா நிகழ்ச்சிக்கு -

J.M.S. அரபு கல்லூரி & M.I.W.S. பைத்துல்மாலின் தலைவர் மவ்லானா மவ்லவீ அல்ஹாஜ் **S.ஸபூர் முஹ்யித்தீன்** மிஸ்பாஹி ஹள்ரத் அவர்கள் தலைமை வகித்தார்கள். J.M.S. அரபு கல்லூரி & M.I.W.S. பைத்துல்மாலின் நிர்வாகக் குழு உறுப்பினர்களும், சமுதாய முன்னோடிகளும் முன்னிலை வகித்தனர்.

கல்லூரி பேராசிரியர்களும், விழாவைப் பார்ப்பதற்காக வருகை தந்திருந்த சமுதாயத்தின் மூத்த உலமா பெருமக்களும் சிற்சில நிமிடங்கள் மணமக்களுக்கு தேவையான விஷயங்களைக் கூறி, மன நிறைவான வாழ்த்துரைகளை வழங்கினார்கள். பின்பு, நிக்காஹ்வுடைய நிகழ்வுகள் நடைபெற்றன. அதைத் தொடர்ந்து....

கல்லூரி முதல்வர் அல்லாமா அல்ஹாஜ் **M.முஹிப்புல்லாஹ் ஹள்ரத் கிப்லா** தாமத் பரகாதுஹும் அவர்கள் துஆ ஓதினார்கள்.

மணமக்களுக்கு M.I.W.S. பைத்துல்மால் சார்பாகவும், நல்லுள்ளம் கொண்ட சமுதாயப் பிரமுகர்கள் சார்பாகவும் பல்வேறு பரிசுப் பொருட்களும், பண முடிப்புகளும் வழங்கப்பட்டன. அல்ஹம்து லில்லாஹ்!

## முஸ்லிம் மாணவிகள் ஹிஜாப் அணியக்கூடாது" என்ற மகாராஷ்டிரா மாநில தனியார் கல்லூரியின் உத்தரவுக்கு உச்சநீதிமன்றம் தடை!

முஸ்லிம் மாணவிகள் ஹிஜாப் அணியக்கூடாது என்ற மகாராஷ்டிரா மாநில தனியார் கல்லூரியின் உத்தரவுக்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

மும்பையைச் சேர்ந்த என்.ஜி. ஆச்சார்யா மற்றும் டிகே.மராத்தகா கல்லூரிவளாகத் தில்ஹிஜாப், நிகாப் உள்ளிட்டவை அணிய தடை விதிக்கப்பட்டது. இதனை எதிர்த்து தொடர்ந்த வழக்கை மும்பை உயர்நீதி மன்றம் தள்ளுபடி செய்தது. இதனைஎதிர்த்து 9 மாணவிகள் உச்ச நீதிமன்றத்தில் முறை யிட்டனர். இதனை நீதிபதிகள் சஞ்சீவ் கண்ணா மற்றும் சஞ்சய் குமார் ஆகியோர் கொண்ட அமர்வு விசாரித்தன.

அப்போது நீதிபதிகள் கூறிய தாவது : "என்ன அணிய வேண் டும் எனக் கூறும் நீங்கள் எப்படி பெண்களுக்கு அதிகாரம் அளிக் கிறீர்கள்? பெண்கள் என்ன அணிய வேண்டும் என்பதை அவர்களி டம் விட்டு விடவேண்டும். அது அவர்களின் முடிவு. நாடு சுதந்திரம் அடைந்த பிறகு இது போன்று தடை விதிப்பது துரதிர்ஷ்டவச மானது. கல்லூரி வளாகத்தில் ஹிஜாப் அணிய அனுமதிக்க வேண்டும்.

"முஸ்லிம் பெண்கள் ஹிஜாப் அணிந்துவரக்கூடாது" எனச் சொல்வது போல் மற்ற பெண் களை பொட்டு வைக்கக்கூடாது திலகம் வைக்கக்கூடாது என்று உங்களால் சொல்ல முடியுமா? அவற்றை உங்களால் தடை செய்ய முடியுமா? எனக்கேட்டனர்.

## வங்க தேசத்தில் கோவில், தேவாலயங்கள் மீது தாக்குதலை தடுக்க இரவெல்லாம் கண்விழித்துக் காக்கும் முஸ்லிம்கள்!

வங்க தேசத்தில் கோவில், தேவாலயங்கள் மீது தாக்குதலை தடுக்க இரவெல்லாம் முஸ்லிம் கள் கண் விழித்துக் காத்து வரு கின்றனர். இந்த மனிதாபிமான மற்றும் மத நல்லிணக்க நடவடிக்கைக்கு சர்வதேச அளவில் சமூக ஆர்வலர்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

தங்கள் பகுதியிலுள்ள கோவில்களை போராட்டக் காரர்களிடமிருந்து காக்க வேண் டும் என பள்ளிவாசல்களிலுள்ள ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு செய்யப்பட்டது.

அந்த அறிவிப்பில் பங்களா தேஷில் உள்ள மஸ்ஜிதுக்குள் இருந்து ஒலிபெருக்கியில் வந்த ஒரு சிறப்பு அறிவிப்பு :

அன்புள்ள குடிமக்களே! நாட் டில் அமைதியின்மை நிலவும் இந்தக் கால கட்டத்தில் நாம் அனைவரும் மத நல்லிணக்கத்

தைப் பேண வேண்டும் என்று மாணவர்களாகிய நாங்கள் உங்களைக் கேட்டுக் கொள்கிறோம். இது சிறுபான்மையினரை பாதுகாக்கவும், தீய சக்திகளிடமிருந்து அவர்களின் உயிரையும், செல்வத்தையும் பாதுகாக்க வேண்டியது உங்கள் பொறுப்பு, எங்கள் பொறுப்பு மற்றும் அனைவரின் பொறுப்பு; அனைவரும் விழிப்புடன் இருக்க வேண்டும் என அறிவிப்பு செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தங்கள் பகுதிகளில் கோவிலை தாக்குதலில் இருந்து காக்க இரவு நேரத்தில் முஸ்லிம்கள் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டனர். இந்து கோவில்கள், தேவாலயங்கள், கலாச்சார மையங்கள் உட்பட சிறுபான்மை வழிபாட்டுத் தலங்களில் மாணவர்கள் இரவு நேரத்தில் கண்காணித்து காவல் காத்து வருகின்றனர்.

அந்த வகையில் குமில்லாவிலுள்ள இந்து கோவிலை உலமாபெருமக்கள் தாமாகவே முன் வந்து பாதுகாத்தனர். கோவில் முன்பு சேர் போட்டு அமர்ந்து அவர்கள் இரவு முழுவதும் கண் காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.

அதேபோல் உபாசிலா என்ற இடத்திலுள்ள கோவிலை இஸ்லாமிய சத்ர ஷிபிரின் மாணவர் பிரிவினர் பாதுகாத்து வருகின்றனர். இந்த முயற்சி தற்போது அனைவரிடமும் பாராட்டைப் பெற்று வருகிறது.

## பாரதீய ஜனதா கூட்டணியில் உள்ள நிதிஷ்குமாரும், சந்திரபாபு நாயுடுவும் வக்ஃபு திருத்தச் சட்ட மசோதாவிற்கு எதிர்ப்பு!

வக்ஃபு திருத்தச் சட்ட மசோதாவிற்கு பாரதீய ஜனதா கூட்டணியில் இருக்கும் சந்திர பாபு நாயுடுவும் (தெலுங்கு தேசம்), நிதிஷ் குமாரும் (ஐக்கிய ஜனதா தளம்) எதிர்ப்பு தெரிவித்துள்ளதாக அகில இந்திய முஸ்லிம் தனியார் சட்ட வாரியம் தெரிவித்துள்ளது.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் (என்.டி.ஏ.) முக்கிய அங்கம் வகிக்கும் ஜனதா தளம் (யுனைடெட் ஜே.டி.யு.) மற்றும் தெலுங்கு தேசம் கட்சி (டி.டி.பி.) இம்மசோதாவுக்கு முதலில் ஆதரவு தெரிவித்த நிலையில் இச்சட்டத்திருத்தம் குறித்து முஸ்லிம்கள் அச்சம் தெரிவிப்பதாகக் கூறி தற்போது தங்கள் நிலைப்பாட்டை மாற்றியுள்ளனர் என செய்தியாளர் கூட்டத்தில் அகில இந்திய முஸ்லிம் தனிநபர் சட்ட வாரியத் தலைவர் காலித் ஸைபுல்லாஹ் ரஹ்மானி தெரிவித்துள்ளார்.

இது குறித்து பேசிய அவர், நாங்கள் பல அரசியல் கட்சிகள் மற்றும் தலைவர்களுடன்

சந்திப்புகளை நடத்தியுள்ளோம். முன்னதாக சந்திரபாபு நாயுடுவை சந்தித்தோம். இந்த மசோதாவை நாங்கள் கண்டிப்பாக எதிர்ப்போம் என்றார்.

அதே போல் நிதிஷ்குமாரை சந்தித்தோம். அவரும் மசோதாவை எதிர்ப்போம் என எங்களுக்கு உறுதியளித்தார்.

மேலும் நாங்கள் தேஜஸ்வி யாதவையும் சந்தித்தோம். அவர் மசோதாவை எதிர்ப்போம் என்றார்.

மேலும், வக்ஃபு சட்டத்தில் கை வைக்க விடமாட்டோம் என்று உத்தவ் தாக்கரே அறிக்கை விடுத்துள்ளார்.

இதே போல் தமிழக முதல்வரிடமிருந்தும் ஓர் அறிக்கை வந்துள்ளது. மற்ற மதச்சார்பற்ற கட்சி கள் மற்றும் என்.டி.ஏ. கூட்டணி கட்சிகளும் இந்த மசோதாவை எதிர்ப்பதாக எங்களிடம் உறுதியளித்துள்ளன என ரஹ்மானி பதிலளித்தார்.

மேலும், பாரதீய ஜனதாவின் கூட்டணி கட்சிகள் உட்பட அனைத்து அரசியல் தலைவர்களையும் நாங்கள் சந்தித்துள்ளோம். ஏனெனில், இது இந்து - முஸ்லிம் பிரச்சனை அல்ல. பாரதீய ஜனதாவுடன் கூட்டணி வைத்த கட்சிகள் உட்பட அனைத்து கட்சிகளும், மதச்சார்பின்மைக்கு ஆதரவாக செயல்படுவார்கள் என்று நம்புகிறோம்" என்றார்.

### நிதிஷ்குமார்

பிஹார் முதல்வரும், ஐக்கிய ஜனதா தளக் கட்சித் தலைவருமான நிதிஷ்குமாரை மாநில சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் மொகத் ஜமா கான் சந்தித்து வக்ஃபு வாரிய சட்டத் திருத்தத்திலுள்ள சில அம்சங்கள் குறித்து அதிருப்தி தெரிவித்துள்ளார்.

இந்த சட்டத் திருத்தம் குறித்து முஸ்லிம்கள் அச்சம் தெரிவிப்பதாக முதல்வருக்கு நெருக்கமான நீர்வளத் துறை அமைச்ச் விஜய குமார் சவுத்ரியும் கூறியுள்ளார். ஐக்கிய ஜனதா தளக் கட்சியின் இதர தலைவர்கள், எம்.எல்.ஏ. குலாம் கௌஸ் உள்ளிட்டோரும் இது தொடர்பாக சில சந்தேகங்களை எழுப்பியுள்ளனர்.

இதைத் தொடர்ந்து ஐக்கிய ஜனதா தளக்கட்சி செயல் தலைவர் சஞ்சய் ஜா, சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் மொகத் ஜமா கான் ஆகியோர் மத்திய அமைச்சர் கிரண் ரிஜ்ஜுவை சந்தித்து வக்ஃபு வாரிய சட்டத் திருத்தத்திற்கு மாநிலத்தில் எதிர்ப்பு கிளம்பியுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

பிஹாரில் அடுத்த ஆண்டு சட்டப்பேரவை தேர்தல் நடக்கவுள்ளது. மாநில மக்கள் தொகையில் 18 சதவீதம் பேர் முஸ்லிம்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

செய்தி :
**பாவா. ஜே.அப்துஸ் ஸலாம்**

# வக்ஃபு சொத்தை மீட்போம்! வக்ஃபு சொத்தை காப்போம்!!

மவ்லவீ ஹாஃபிழ் அ.செய்யது அலீ மஸ்லஹி பாஜில் தேவ்பந்தீ

வக்ஃபு என்பது அரபி அகராதியில் "சிறை பிடித்தல்", மற்றும் "தடுத்துக்கொள்ளுதல்" என்று அர்த்தமாகும். இஸ்லாமிய மார்க்கத்தின் பார்வையில் "வக்ஃபு" என்பது அசல் பொருளை கைப்பற்றி வைத்துக் கொண்டு, அதிலிருந்து கிடைக்கும் பலன்களை, இலாபங்களை, வருவாய்களை அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்வது ஆகும்.

ஷரீஅத்தில் அங்கீகரிக்கப் பட்ட மார்க்க சம்பந்தமான பணிகளுக்கும், நல்ல நோக்கங்களுக்கும், அறப்பணிகளுக்கும் அசையும், மற்றும் அசையா சொத்துக்களை ஒருவர் தானாக முன்வந்து, மனமுவந்து அர்ப்பணிப்பதே வக்ஃபு ஆகும்.

## வக்ஃபின் துவக்கம்

நபி (ஸல்) அவர்களின் காலத்தில் தான் வக்ஃபு துவங்கப்பட்டது. வக்ஃபு சொத்துக்களை, வக்ஃபின் திட்டங்களை, வக்ஃபு செய்வதின் அவசியத்தை ஆர்வமூட்டி, அதை துவக்கி வைத்தவர்கள் ஹள்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களே ஆவார்.

இஸ்லாத்தின் பார்வையில் வக்ஃபு குறித்து முதல் அறிவிப்பாணை :

**"ஒரு மனிதர் இறந்துவிட்டால், அவருடன் அவரின் செயல்பாடுகளும் அடங்கி விடுகிறது. எனினும் மூன்று அம்சங்களைத் தவிர! 1. நிலையான தர்மம், 2. பயன் தரும் கல்வி, 3. இறந்தவருக்கு பிரார்த்தனை புரியும் நல்ல குழந்தை" என நபி [ஸல்] அவர்கள் கூறினார்கள்.**

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூ ஹுரைரா (ரளி) அவர்கள், (நூல் : முஸ்லிம், திர்மிதீ, நஸாயீ)

மேற்கூறப்பட்ட ஹதீஸில் நிலையான தர்மம் என்பது வக்ஃபையும், வக்ஃப் சொத்துக்களையும் குறிக்கிறது. மேலும் இந்த ஹதீஸ் வக்ஃப் செய்வதை ஆர்வமூட்டுகிறது.

**"ஓர் இறை விசுவாசி அவர் மரணித்த பிறகும், அவரின் செயலிலிருந்து, மற்றும் அவர் செய்த நன்மைகளிலிருந்து அவரைப்பின் தொடரக் கூடியவை. 1. அவர் பரப்பிய கல்வி ஞானம். 2. அவர் விட்டுச் சென்ற நல்ல**

குழந்தை. 3. அவர் வாரிசுப் பொருளாக விட்டுச் சென்ற ஏடு. 4. அவர் கட்டி எழுப்பிய இறை யில்லம். 5. அவர் வழிப்போக்கர் களுக்காக கட்டிய சத்திரம். 6. அவர் உருவாக்கிய ஓடும் ஆறு. 7. அவர் ஜீவிய காலத்தில், ஆரோக்கியமாக இருந்த சமயத் தில் தமது பொருளிலிருந்து அவர் செலவு செய்த தர்மம். இத்தகைய ஏழு நல்லறங்களின் நன்மைகளும் அவர் மரணித்த பிறகும் அவரைப் பின் தொடரும்'' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(நூல் : இப்னுமாஜா)

## வக்ஃபு செய்யப்படும் சொத்துக்கள்

1. பள்ளிவாசல்கள், பள்ளி வாசல்களுக்கு நிலம் கொடுப்பது, மற்றும் கட்டி டம் கட்டிக் கொடுப்பது, பள்ளிக் கட்டிடங்களுக்கு பயனுள்ள உபகரணங் களை வாங்கிக் (வக்ஃபு செய்வது) கொடுப்பது யாவும் வக்ஃபில் சேரும்.
2. காலி நிலங்களை மட்டும் வழங்குவது.
3. தோட்டங்களை வழங்குவது.
4. கிணறு, ஊற்று போன்ற நீர் நிலைகளை ஏற்படுத்திக் கொடுப்பது.
5. குதிரை.

இந்த ஐந்து விதமான அம்சங்களும் வக்ஃபு செய்வதற்கு அடிப்படை யானவை ஆகும். இந்த ஐந்து அம்சங்களுக்குள் கட்டுப்பட்டு வரும் பொருட்களையும் வக்ஃபு செய்யலாம். உதாரணமாக மதரஸாக்கள் கட்டிக் கொடுப் பது, பள்ளிக்கூடங்கள் கட்டிக் கொடுப்பது, மருத்துவமனைகள் கட்டிக் கொடுப்பது, விருந்தினர் இல்லங்கள் கட்டிக் கொடுப்பது, நூலகங்கள் கட்டிக் கொடுப்பது, ஏழைகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பது, அடக்கஸ்தலங் களுக்கு நிலம் கொடுப்பது, கட்டிடம் கட்டிக் கொடுப்பது இவை யாவும் வக்ஃபாக அங்கீகரிக்கப்படும். வக்ஃபு சொத்துக்களாக பாவிக்கப்படும்.

பணங்காசுகளை, கனி வகைகளை வக்ஃபு செய்ய முடி யாது. இவற்றை தானமாகவோ, கொடையாகவோ, கடனாகவோ மட்டும் வழங்க முடியும்.

நபி (ஸல்) அவர்கள் முதல் நம் வரை வக்ஃபு செய்த சொத்துக்கள் ஏராளம் ஏராளம்.

## மஸ்ஜிதுன் நபவி மாநபி (ஸல்) வக்ஃபு செய்த மகத்தான இறையில்லம்

"நபி (ஸல்) அவர்கள் மதீனா விற்கு வருகை புரிந்தபோது, ஓர் இறையில்லத்தை எழுப்பும் படி தமது தோழர்களுக்கு கட்டளையிட்டார்கள். மதீனாவில் பனூ நஜ்ஜார் கோத்திரத்தாருக்குச் சொந்த

மான அவர்களின் தோட்டத்தை நபி (ஸல்) அவர்கள் விலைக்கு வாங்க முடிவு செய்து அவர்களிடம் நபி (ஸல்) அவர்கள் கேட்டபோது, "நாங்கள் அல்லாஹ்விற்காக எந்த பணத்தையும் வாங்க மாட்டோம்" என அவர்கள் கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் அவர்களிடம் விலை பேசி, தமது சொந்தப் பணத்தை கொடுத்து, அவர்களிடம் அந்தத் தோட்டத்தை விலைக்கு வாங்கி, அங்கு ஒரு பள்ளியை கட்டி எழுப்பி இறைவனுக்காக வக்ஃபு செய்தார்கள். "(அந்த இறையில்லம்தான் இன்றைய புனித மதீனாவில் காட்சி தரும் புனிதமஸ்ஜிதுன்நபவி" ஆகும்)

அறிவிப்பாளர்: ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள், (புகாரி)

## ஹள்ரத் உஸ்மான் (ரளி) அவர்கள் வக்ஃபு செய்த 'பிஃரு ருமா' எனும் கிணறு"

"யார் பிஃரு ரூமா எனும் கிணற்றை வாங்கி வக்ஃப் செய்வாரோ அவருக்கு சுவனம் கிடைக்கும்" என நபி (ஸல்) கூறியபோது, பனூகிஃபார் கோத்திரத்தைச் சார்ந்த ஒருவருக்குச் சொந்தமான அந்தக் கிணற்றை ஹள்ரத் உஸ்மான் (ரளி) அவர்கள் 35,000 திர்ஹங்கள் கொடுத்து அவரிடம் அதை விலை பேசி வாங்கி, அதை நபி (ஸல்) அவர்களிடம் வக்ஃபு செய்தார்கள். "நீங்கள் வாக்களித்த சுவனம் எனக்குக் கிடைக்குமா?" என ஹள்ரத் உஸ்மான் (ரளி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டபோது, நபி (ஸல்) அவர்கள் "ஆம்" என்று பதில் கூறினார்கள். அந்தக் கிணற்றை நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம்களின் பொது பயன்பாட்டிற்காக அர்ப்பணிப்பு செய்தார்கள்.

## கைபரில் கிடைத்த நிலத்தை வக்ஃபு செய்த ஹள்ரத் உத்தமர் உமர் (ரளி) அவர்கள்

கைபரில் கிடைத்த நிலம் ஹள்ரத் உமர் (ரளி) அவர்களுக்கு அவரின் சொத்துக்களிலேயே அது அவருக்கு பிடித்தமானதாக இருந்தது. நேராக ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, அந்த நிலம் குறித்து ஆலோசனை கேட்டார்கள். "நீர் நாடினால் அதன் அசலை உம்மிடம் தடுத்து வைத்துக் கொண்டு, அதிலிருந்து கிடைக்கும் பயன்களை வக்ஃபு செய்து கொள்ளலாம்" என நபி (ஸல்) அவர்கள் ஹள்ரத் உமர் (ரளி) அவர்களுக்கு ஆலோசனை வழங்கினார்கள். ஹள்ரத் உமர் (ரளி) அவர்களும் அந்த நிலத்தின் பயனை வக்ஃபு செய்து, ஒருசில அறிவிப்புகளை வெளியிட்டார்கள்.

"இந்த நிலத்தை யாருக்கும் விற்பனை செய்யக்கூடாது; மேலும், இது யாருக்கும் அன்பளிப்பாகவும் வழங்கக் கூடாது; இது வாரிசுடைமையாகவும் ஆக்கப்படக் கூடாது" என்ற அறிவிப்பை வெளியிட்டார்கள்.

இந்த நிலத்திலிருந்து கிடைக்கும் பலன்களை ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் ஏழைகளுக்கும், உறவினர்களுக்கும், அடிமைகளுக்கும், அல்லாஹ்வின் அறவழிக்கும், வழிப்போக்கர்களுக்கும், விருந்தினர்களுக்கும் தானமாக வழங்கினார்கள்.

## குதிரையை வக்ஃபு செய்வதன் சிறப்பு

"இறைவனின் பாதையில் அவனை நம்பி, அவனின் வாக்குறுதியை எதிர்பார்த்து எவர் ஒரு குதிரையை வக்ஃபு செய்வாரோ அவருக்கு அந்தக் குதிரையின் தீவனங்களும், அதன் சாணங்களும், அதன் சிறுநீரும் நாளை மறுமையில் தராசுத் தட்டில் அளந்து அவற்றை நன்மைகளாக மாற்றப்பட்டு அவருக்கு நன்மைகள் வழங்கப்படும்'' என நபி [ஸல்] அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூ ஹுரைரா (ரளி) அவர்கள், புகாரி, (முஸ்லிம்)

இன்னும் நபித் தோழர்கள் வக்ஃப் செய்த ஏராளமான சம்பவங்களும் ஆதாரப் பூர்வமான நபிமொழிகளில் காணப்படுகின்றன. ஒரு சில உதாரணங்களை மட்டும் நாம் சுட்டிக் காட்டியுள்ளோம். நபி (ஸல்) அவர்கள் காலத்திலிருந்து நம் காலம் வரைக்கும் முஸ்லிம்கள் வக்ஃபு செய்த சொத்துக்கள் ஏராளம்...

"ஒரு முஸ்லிம் தன்னுடைய சொத்துக்களை இறைவனுக்காக வக்ஃபு செய்து விட்ட பிறகு அவரோ, அவரின் வாரிசுகளோ அந்தச் சொத்துக்களின் நிர்வாகிகளாக இருக்க முடியுமே தவிர, ஒரு போதும் உரிமையாளர்களாக இருக்க முடியாது."

ஏனென்றால் வக்ஃபு என்பதற்கு நிறுத்துதல், நிலை நாட்டுதல் என்ற சொற்பொருள்களும் உண்டு. இறைவன் பெயரால் ஒருவர் தன் சொத்துக்களை அர்ப்பணித்து நிலை நாட்டும் போது, அது வக்ஃபு சொத்து எனும் நிலையை அடைந்து விடுகிறது.

ஒரு சொத்தை வக்ஃபு செய்வதன் மூலம் அந்தச் சொத்தின் உரிமையை இறைவனுக்கு அர்ப்பணித்து, அதன் வருமானத்தையும், பலனையும் மக்களின் நலனுக்காக செலவிடுவதே நோக்கமாகும்.

வக்ஃபு சொத்தின் அர்ப்பணிப்பு சமய நோக்கு கொண்டதாக இருக்க வேண்டும். சமய சார்பற்ற நோக்கைக் கொண்டது டிரஸ்ட்,

*A.Saleem*
*S.Mohammed Kassim*

93632 20624
99943 23977
99767 78597



# *Rahmaan Builders*

## *Property Developers*

45D, Ramasamy Pillai Street, Maruthamalai Main Road,
Vadavalli (P.o.), Coimbatore - 41.





# குட்லக் செப்பல்ஸ் & பேக்ஸ்

## குட்லக் புர்கா கடை
## குட்லக் எண்ணெய் கடை
## குட்லக் நாட்டு மருந்துக்கடை

எங்களிடம் அனைத்து வகையான காலணிகளும், பேக் மற்றும் சூட்கேஸ் வகைகளும், பெண்களுக்கு தேவையான புர்கா, ஷால், மக்கன்னா போன்றவைகளும், சமையலுக்குத் தேவையான சுத்தமான செக்கு எண்ணெய் வகைகளும் மற்றும் நம்பகமான நாட்டு மருந்துகளும் தரமான வகையில், நியாயமான விலையில் கிடைக்கும்.

தொடர்புக்கு

தரமான ஸ்கூல் பேக் அனைத்து பேக்குகளும் தயாரிப்பாளர்

# குட்லக் செப்பல்ஸ் & பேக்ஸ்

4027, தெற்கு 3ம் வீதி, புதுக்கோட்டை - 622 001.
✆ 04322-222466; Cell : 9443346313

அன்பளிப்பு என்றாகுமே தவிர வக்ஃபு ஆக முடியாது.

வக்ஃபு என்பது "ஸதகதுன் ஜாரியா" நிரந்தரத் தன்மை உடையதாக இருக்க வேண்டும். நிரந்தரத் தன்மை இல்லாதவை "ஸதகா" எனும் அறச் செயலாக அமையுமே தவிர, இஸ்லாமியச் சட்டப்படி வக்ஃபாக ஆக்க முடியாது.

வக்ஃபின் நுகர் உரிமை மனித நலனுக்குப் பயன்படு வதாக இருக்க வேண்டும்.

## வக்ஃபு சொத்துக்களின் இன்றைய அவலநிலை

இந்தியாவில் அல்லாஹ் விற்காக முஸ்லிம் சமுதாயத்தில் உள்ள ஏழை, எளியோரின் நலன் களுக்காக அளிக்கப்பட்ட வக்ஃபு சொத்துக்கள் சுமார் 4 இலட்சம் ஏக்கர்கள் நமது நாட்டில் உள் ளன. அதில் 3 இலட்சம் ஏக்கர் கள் பதிவு செய்யப்பட்டவை.

இந்தச் சொத்துக்கள் பாது காக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு சமுதாயத்தின் நலனுக்காக பயன்படுத்தப்பட வேண்டியவை. ஆனால், இன்று அவை அடகு வைக்கப்பட்டும், விற்கப்பட்டும், அபகரிக்கப்பட் டும், ஆக்கிரமிக்கப்பட்டும் உள்ளன. அவற்றை பாது காப்பவர்களே பங்காளிகளாக மாறும் மாபாதகச் செயல் நடைபெற்று வருகிறது.

இந்தியாவில் பாதுகாப்புத் துறை, இரயில்வே துறைக்கு அடுத்தபடியாக வக்ஃபு துறைக்குத்தான் அதிக சொத்துக் கள் உள்ளன. இந்தியாவில் 35 வக்ஃபு வாரியங்கள் உள்ளன. அவற்றில் பெரும்பாலானவை செயல்பாட்டில் இல்லை. பெரும்பாலான மாநிலங்களில் வக்ஃபு வாரிய பொறுப்பில் ஆளும் கட்சி ஆதரவாளர்களே உள்ளனர். தற்போது 70 சதவீத வக்ஃபு சொத்துக்கள் ஆக்கிர மிக்கப்பட்டும், அபகரிக்கப் பட்டும் உள்ளன. மீதி 30 சதவீத வக்ஃபு சொத்துக்களை முறையாகப் பயன்படுத்தினால் கூட, பல பிரச்சனைகளுக்குத் தீர்வுகான முடியும். மேலும் வக்ஃபு சொத்துக்களை முறை யாகப் பயன்படுத்தியிருந்தால் வேலையின்மை, கல்விக்கான வாய்ப்பின்மை, வறுமை ஆகிய பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டிருக்க முடியும் என்று மாநிலங்களின் மேனாள் உதவித் தலைவர் ரஹ்மான்கான் கருத்து தெரிவித்துள்ளார்.

★ 1997-ல் தமிழ்நாடு வக்ஃப் வாரியம் சென்னை திருவல்லிக்கேணியில் மிகவும் விலை மதிப்புள்ள பகுதியில் இருந்த 1710 சதுர அடி நிலத்தை வெறும் 3 லட்சம் ரூபாய்க்கு விற்க முடிவெடுத்தது.

★ மும்பையில் மஹாராஷ்டிரா வக்ஃபு வாரியம் மிகவும்

முக்கியத்துவம் வாய்ந்த அல்டமவுன்ட் சாலையில் 4532 சதுர அடி நிலத்தை வெறும் 16 லட்சத்திற்கு முகேஷ் அம்பானிக்கு விற்பனை செய்தது. அதில் அவர் 27 மாடியில் ஒரு பிரம்மாண்டமான மாளிகையைக் கட்டினார்.

★ பெங்களூரில் வக்ஃபு வாரியத்துக்குச் சொந்தமான 5 ஏக்கர் நிலத்தில் 500 கோடி ரூபாய் மதிப்புள்ள மிகப்பெரிய ஓட்டலைக் கட்டியுள்ள வின்சர் மேனர் ஓட்டல் நிர்வாகம், மாத வாடகையாக வெறும் 12,000 ரூபாய் மட்டுமே கொடுக்கிறது.

★ டில்லி சிறுபான்மையினர் கமிஷனரின் உறுப்பினர் ஒருவர் டில்லியில் நிஸாமுத்தீன் சாலையில் மிகவும் மதிப்புமிக்க பகுதியில் வக்ஃபு வாரியத்திற்கு உரிமையான நிலத்தில் ஒரு பள்ளிக்கூடத்தை நடத்துகிறார். அதற்கு ரூ.1000 பிச்சைக் காசை வாடகையாக வாரியத்திற்குக் கொடுக்கிறார். இவர்களெல்லாம் வக்ஃபு வாரிய சொத்துக்களை அபகரித்து கல்வி நிறுவனங்களை நடத்துகின்றனர். ஆனால், அதிக கட்டணம் செலுத்தும் மாணவர்களுக்கு மட்டுமே அங்கு இடம். வசதியற்ற வறிய முஸ்லிம்களுக்கு அங்கு இடம் இல்லை.

★ ஆந்திர மாநிலத்தில் மாநில அரசே வக்ஃபு வாரிய சொத்துக்களை கைப்பற்றியுள்ளது. ஹைதராபாத் ஹைடெக் நகரம் வக்ஃபு சொத்தில்தான் அமைக்கப்பட்டுள்ளது.

★ விசாகப்பட்டிணத்தில் அரசு ரூ.500 கோடி மதிப்புள்ள 6000 ஏக்கர் வக்ஃபு நிலத்தைக் கைப்பற்றி 900 ஏக்கர் நிலத்தை என் டிபிசி நிறுவனத்திற்கும், 800 ஏக்கர் நிலத்தை ஹிந்து சாஜாஸ் நிறுவனத்திற்கும் ஏக்கருக்கு ரூ 2.25 இலட்சம் எனும் அற்ப விலைக்கு வழங்கியுள்ளது. இவையெல்லாம் ஒரு சில உதாரணங்களே ஆகும். இன்னும், அதிகமான வக்ஃபு சொத்துக்களை அரசும், அரசியல்வாதிகளும், அரசியல்வாதிகளின் ஏஜெண்டுகளும், வக்ஃபை நிர்வகிக்கும் நிர்வாகிகளும், வக்ஃபு வாரியத்தின் கமிஷனரிலிருந்து கடைக்கோடி ஊழியர்கள் வரைக்கும், வக்ஃபு போர்டில் பதியப்பட்ட பள்ளியின் நிர்வாகிகளும், ஜமாஅத்தில் உள்ள சில சுயநலவாதிகளும் வக்ஃபு சொத்துக்

களை அபகரித்தும், ஆக்கிரமித்தும், சொந்தப் பெயரில் பட்டா மற்றும் பத்திரப் பதிவும் செய்து கொண்டு ஹராமான முறையில் வயிறுகளை நிரப்பிக் கொண்டு வருகிறார்கள். இறைவனின் வக்ஃபு சொத்துக்களை அபகரித்து உண்பவர்கள் தங்களது வயிறுகளை நரக நெருப்புக் களால் நிரப்பிக் கொள்கிறார்கள். எத்தனை ஏக்கர் நிலத்தை கயவர்கள் அபகரித்துள்ளார்களோ, அத்தனை ஏக்கர்களையும் ஏழு பூமிகள் வரைக்கும் மறுமையில் அவர்களின் தலை மீது போடப்படும். அவர்கள் எவ்வாறு சுமப்பார்கள் என்று நாம் பொறுத்திருந்து பார்ப்போம். இத்தகைய ஊழல்வாதிகளுக்கு நிச்சயமாக நரகம் உண்டு. அது நிரந்தரமாக ஆக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. வக்ஃபு செய்தவர்களே வக்ஃபு சொத்துக்களை உரிமை கொண்டாட முடியாதபோது, இந்த கயவர்கள் உரிமை கொண்டாடுவதும், அபகரிப்பதும், ஆக்கிரமிப்பதும் எந்த வகையில் நியாயம்? இத்தகைய கயவர்களை அடையாளம் கண்டு, சட்டரீதியாக அவர்களிடமுள்ள வக்ஃபு சொத்துக்களை மீட்டி, சட்டரீதியாக அவர்களுக்கு தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டும்.

இனிவரும் காலங்களில் அபகரிக்கப்பட்ட, ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட வக்ஃபு சொத்துக்களின் பத்திரப் பதிவுகளை ஆய்வு செய்து, அவற்றை வக்ஃபு போர்டில் சேர்க்க முஸ்லிம்கள் பாடுபட வேண்டும்.

ஆட்டு மந்தைகளுக்கு குள்ளநரிக் கூட்டம் பாதுகாப்பாக இருப்பது போன்றுள்ள நிலை வக்ஃபுபோர்டில் உள்ளது. வக்ஃபுபோர்டின் குள்ளநரிகளை இனம் கண்டு அதை தூய்மைப்படுத்திட வேண்டும்.

இறையில்லங்களை நிர்வகிப்பதற்கு எந்தெந்த தகுதிகளெல்லாம் பேணப்பட வேண்டுமோ, அதே தகுதிகளை வக்ஃபுபோர்டிலும் பேண வேண்டும்.

இறையச்சமுடையோர் வக்ஃபு போர்டின் பதவிகளை அலங்கரித்து, இறை சொத்துக்களான வக்ஃபு சொத்துக்களை பாதுகாக்க வேண்டும். இஸ்லாம் காட்டும் வழியில் வக்ஃபின் சட்டதிட்டங்களைப் பேணி அதன் பயன்களை ஏழை, எளியோருக்குச் சேர்த்து வைத்திட வேண்டும்.

# உன்னை நினைத்து...

மவ்லவி மு.முஹம்மது ஹைதர் அலி இம்தாதி

وَمِنَ النَّاسِ مَنْ يَشْرِي نَفْسَهُ ابْتِغَاءَ مَرْضَاتِ اللَّهِ وَاللَّهُ رَءُوفٌ بِالْعِبَادِ

**“அல்லாஹ்வின் திருப்தியை நாடி தம்மை அர்ப்பணித்துக் கொள்வோரும் மனிதர்களில் உள்ளனர். [இத்தகைய நல்] அடியார்கள் மீது அல்லாஹ் மிகுந்த பரிவுடையவன் ஆவான்.”**

- அல்குர்ஆன் (2 : 207)

## இலாபம் தந்த வியாபாரம்

ஹள்ரத் சுஹைப் பின் ஸினானுர் ரூமி (ரளி) என்ற நபித்தோழர், நூறு வயதுடையவர். அவர் மக்காவிலிருந்து புறப்பட்டு மதீனாவிற்கு புலம்பெயர்ந்து செல்லும்போது, குறைஷியர் இவரைப் பின்தொடர்ந்து வந்து தாக்க முற்பட்டனர். இவருடன் வந்த ஒருவரை குறைஷியர் கொன்றும் விட்டனர்.

தனி நபராக இருந்த அவர் தன்னிடமிருந்த அம்புக்கூட்டை கையிலெடுத்து, “குறைஷியரே! உங்களில் அம்பெய்துவதில் அதிகத் தேர்ச்சி பெற்றவன் நான்தான் என்பதை நீங்கள் நன்கறிவீர்கள். அல்லாஹ்வின் மீதாணையாக! என் அம்புக் கூட்டிலுள்ள அம்புகளெல்லாம் தீர்ந்துபோகும் வரை ஒவ்வொரு அம்பாலும் உங்களைத் தாக்கு வேன். அதன் பிறகு என் வாள் என் கையில் இருக்கும் வரை உங்களோடு போராடுவேன்.

ஒரு மனிதன் பாவத்தையோ அல்லது தனக்கு பலன் தரும் ஏதேனும் ஒன்றையோ அல்லாஹ் வுக்காக தவிர்த்துக் கொண்டால், அதற்காக மற்றொரு அழகிய பகரத்தை அல்லாஹு தஆலா தராமல் இருப்பதில்லை. அதாவது, நம்முடைய சிறிய, பெரிய அனைத்து தியாகங்களுக்கும் நற்கூலி கிடைத்தே தீரும்.

**நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள் கூறினார்கள்: “ஒரு பெண்ணின் அழகை முதல் முறையாகப் பார்த்து [அதில் மயங்கி விடாமல்] உடனே பார்வையைத் தாழ்த்திக் கொண்ட முஸ்லிமுக்கு வழிபாட்டில் இன்பம் தேடும் வாய்ப்பை அல்லாஹ் வழங்காமல் இருப்பதில்லை.”**

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூ உமாமா (ரளி) அவர்கள்

(நூல்:- முஸ்னது அஹ்மது, தஃப்சீர் இப்னு கஸீர் அந்நூர் வசனம்-30, மஜ்மஉஸ் ஸவாயித்)

(அதுவரை நீங்கள் என்னை நெருங்க முடியாது.) அதற்குப் பிறகு தான் நீங்கள் நாடுவது நடக்கும். எனவே, நீங்கள் விரும்பினால் நான் உங்களுக்கு வேறு ஒரு வழி சொல்கிறேன். அதாவது என் செல்வம் மக்கா வில் உள்ளது. அதை அடையா ளம் காட்டி விட்டால் (அதை எடுத்துக்கொண்டு) என்னைஎன் வழியில் விட்டு விடுவீர்களா?" என்று கேட்டார். குறைஷியர் "சரி" என்று கூறினர். அவ்வாறே (செல்வம் உள்ள) அவ்விடத் தைக் காட்டியதும், குறைஷியர் அவரை விட்டு விட்டனர்.

அதன்பிறகு இவர் மதீனா வந்தடைந்ததும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சந்தித்தார். அப்போது அண்ணலார் (ஸல்) அவர்கள், "அபூ யஹ்யா! உமது வியாபாரம் இலாபம் தந்து விட் டது. உமது வியாபாரம் இலாபம் தந்துவிட்டது" என்று கூறிவிட்டு, (தலைப்பில் காணும்) திரு வசனத்தை ஓதிக்காட்டினார்கள். அப்போது அவர் அதிகம் மகிழ்ச்சியடைந்தார்.

(நூல் : தஃப்சீர் காஸின், ரூஹுல் மஆனி, அஹ்சனுத் தஃபாசீர், கன்ஸுல் உம்மால்)

## அண்ணலாரின் துணைவியர்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா சென்றபின், நண்பர்கள் அன்போடு வழங்கிய அன்பளிப்புகள், அண்டை வீட்டார் கொடுத்த இரவல் கறவை ஒட்டகங்கள் மூலம் கிடைக்கும் பாலைக்கொண்டு தம் குடும்பத்தாரின் பசியை ஓரளவுக்குத் தணித்தார்கள். பல நாட்கள் அண்ணலார் (ஸல்) அவர்களின் துணைவியர் இல்லங்களில் அடுப்பு எரிந்ததில்லை. சில பேரீச்சம் பழத் துண்டுகளும், தண்ணீரும் தான் அவர்களின் உணவாக இருந்தன. பல சமயங்களில் அந்தப் போதாக்குறையான உணவு கூட அவர்களுக்குக் கிடைப்பதில்லை.

இந்த சூழ்நிலையில் தான் ஒருமுறை அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அன்பு துணைவியர் அண்ணலார் (ஸல்) அவர்களை சூழ்ந்து கொண்டு குடும்பச் செலவுகளுக்கு கூடுதலான தொகை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். பேச முடியாத அளவிற்கு துக்கம் மேலிட்டவர்களாக அண்ணலார் (ஸல்) அவர்கள் அமைதிகாத்தார் கள். பின்னர் ஒரு மாத காலம் அண்ணலார் (ஸல்) அவர்கள் தம் துணைவியரிடமிருந்து விலகியிருந்தார்கள். அப்போது தான் அல்லாஹு தஆலா,

"நபியே! ஒன்று, நீர் உம் முடைய துணைவியரை விட்டுப் பிரிந்து விடுவீராக! இவ்வுலக வாழ்க்கையும், அதன் அலங்கார மும் யாரிடத்தில் அவர்களுக்கு கிடைக்குமோ அவர்களிடம் அவர்கள் சென்று விடட்டும். அல்லது அல்லாஹ்வையும், அவன்

தூதரையும், மறுவுலகையும் விரும்பினால், நீர் இருக்கும் இந்த நெருக்கடியான சூழலில் உம்முடன் வாழ்ந்து அவர்கள் பொறுமை காக்கட்டும். அவ்வாறு பொறுமை காத்தால், அதற்காக அல்லாஹ்விடம் அவர்களுக்கு அதிகமான வெகுமதிகள் கிடைக்கும். எனவே, இவ்விரண்டில் ஒன்றை தேர்வு செய்து கொள்ளுமாறு உம்முடைய துணைவியாருக்கு நீர் விருப்ப உரிமை வழங்குவீராக!” என்று தன் தூதருக்கு சில (33: 28,29) திருமறை வசனங்களின் மூலம் கட்டளையிட்டான்.

அப்போது அண்ணலார் (ஸல்) அவர்களின் துணைவியர் அல்லாஹ்வையும், அவன் தூதரையும், மறுவுலகையுமே தேர்ந்தெடுத்துக் கொண்டனர். பொறுமை காக்க சம்மதித்தனர். இது, துணைவியரின் நன்னடத்தை, உயர் பண்பு ஆகியவற்றை காட்டியது. இதற்குப் பரிசாகவே உயர்ந்தோன் அல்லாஹ் கீழ்காணும் திருமறை வசனத்தை அருளினான்.

“(நபியே!) இதற்கு மேல் (வேறு) பெண்களுக்கு உமக்கு அனுமதியில்லை. (அவ்வாறே, இப்போது இருக்கும்) துணைவியருக்கு மாற்றாக அவர்களை நீர் ஆக்கிக்கொள்வதற்கும் அனுமதியில்லை. அவர்களின் அழகு உம்மைக் கவர்ந்தாலும் சரியே! (ஆனால்,) உமது வலக்கரத்தை உடைமையாக்கிக் கொண்ட (அடிமைப்) பெண்களைத் தவிர. அல்லாஹ் அனைத்துப் பொருட்களையும் கண்காணிப்பவனாக இருக்கிறான்.”

-அல்குர்ஆன் (33 : 52)

அதாவது, நபியே! இனி மேல் வேறு எந்தப் பெண்ணை, பெண்களை புதிதாக மணம் முடித்துக் கொள்ளவும், மனைவியரில் எவரையும் விவாகரத்து செய்துவிட்டு அவரிடத்தில் வேறு ஒருவரை மனைவியாக்கிக் கொள்ளவும் கூடாது என இறைவன் அறிவித்தான். அதன் பிறகு அண்ணலார் (ஸல்) அவர்கள் வேறு எவரையும் மணமுடிக்கவும் இல்லை.

(நூல் : தஃப்சீர் இப்னு கஸீர்)

## பாய்ச்சல் குதிரைகள்

ஒரு நாள் மாலைப் பொழுதில் அதிகமாக வணக்க வழிபாடுகளில் ஈடுபடக்கூடிய மன்னராகவும், இறைத்தூதராகவும் இருந்த சுலைமான் (அலை) அவர்கள் முன் இருபதாயிரம் உயர் ரக பாய்ச்சல் குதிரைகள் அணிவகுத்து காட்டப்பட்டன.

அப்போது ஹள்ரத் சுலைமான் (அலை) அவர்கள் குதிரைகளின் அணிவகுப்பைப் பார்வையிடுவதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள். அதனால் அஸர் தொழுகையின் நேரம் அன்னாருக்கு தவறிப் போனது. பின்னர் சுதாரித்துக் கொண்டு அந்தத் தொழுகையை

நிறைவேற்றிவிட்டு, தொழுகை யிலிருந்து கவனத்தைத் திசை திருப்பிய அந்தக் குதிரைகளை என்னிடம் கொண்டு வாருங்கள் என்று கூறி, அவற்றை அறுத்து பலியிட்டு விட்டார்கள். இதைப் பற்றி அல்குர்ஆன் (38 : 31, 32, 33) விவரிக்கிறது.

(நூல் : தஃப்சீர் இப்னு கஸீர்)

ஹள்ரத் சுலைமான் (அலை) அவர்கள் குதிரைகளை அறப்போருக்கும், மற்ற பயணத் திற்கும் பயன்படுத்தி வந்தார்கள். எனவே, உயர் ரக பாய்ச்சல் குதிரைகள் ஹள்ரத் சுலைமான் (அலை) அவர்களுக்கு பிரியமாகவும் இருந்தன.

(இந்நிகழ்வுக்கு பிறகுதான்) ஹள்ரத் சுலைமான் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் காற்றை வசப்படுத்தித் தந்தான். எனவே, அன்னார் காலைக் காற் றின் மூலம் ஒரு மாதப் பயணத் தூரத்தையும், மாலைக் காற்றின் மூலம் ஒரு மாதப் பயணத் தூரத் தையும் கடந்து விடுவார்கள் என்கிறது அல்குர்ஆன்.

ஹள்ரத் ஹஸன் அல்பஸரீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது : “இறைத்தூதர் ஹள்ரத் சுலை மான் (அலை) அவர்கள் காலை வேளையில் தமது தரைவிரிப்பின் மீது ஏறி டமாஸ்கஸ் (சிரியா) நகரத்திலிருந்து புறப்படுவார் கள். இஸ்தகர் (ஈரான்) வந்து சேர்ந்து அங்கு (அன்றைய) காலை உணவை உட்கொள்வார் கள். பின்னர் மாலை வேளையில் இஸ்தகர் நகரிலிருந்து புறப்பட்டு காபூல் நகரை (ஆப்கானிஸ்தான்) அடைந்து அங்கேயே இரவு தங்குவார்கள்.

வேகமாக பயணிக்கும் ஒரு வருக்கு டமாஸ்கஸ் - இஸ்தகர் ஆகிய நகரங்களுக்கிடையிலான தொலை தூரத்தைக் கடக்க ஒரு மாதம் பிடிக்கும். இவ்வாறே இஸ்தகர் - காபூல் நகரங் களுக்கிடையிலான தொலை தூரத்தைக் கடக்கவும் வேகமாகச் செல்லும் பயணிக்கு ஒரு மாதம் தேவைப்படும்.

(நூல் : தஃப்சீர் இப்னு கஸீர்)

ஹள்ரத் சுலைமான் (அலை) அவர்கள் இறைவழிபாட்டை விட்டும் திசை திருப்பக்கூடிய உலக செல்வமான அந்த உயர் ரக பாய்ச்சல் குதிரைகளை வேண்டாமென அறுத்துப் பலி யிட்டுவிட்டார்கள். அதன்பிறகு தான் அல்லாஹ், சுலைமான் (அலை) அவர்களுக்கு விரைவாகப் பயணிப்பதற்கு அந்தக் குதிரைகளைவிட சிறந்ததாக விளங்கும் காற்றை வசப்படுத்தித் தந்தான்.

## புதுத் துணி விற்ற பணம்

ஒருமுறை ஃபாத்திமா (ரளி) அவர்களும், அவர்களின் குடும்பத்தினரும் மூன்று நாட் கள் வரை தொடர்ந்து எதுவும் சாப்பிடாமல் பட்டினியாக இருந் தார்கள். குடும்பத்தின் பசி, பட்டினி பொறுக்க முடியாமல்

தங்களின் பிரியமான புதுத் துணியொன்றை தனது அருமைக் கணவர் ஹள்ரத் அலீ (ரளி) அவர்களிடம் கொடுத்து இத் துணியை விற்றுப் பணம் கொண்டு வாருங்கள் என்று சொன்னார்கள்.

ஹள்ரத் அலீ(ரளி) அவர்கள் தனது மனைவி கொடுத்த துணியை கடைத் தெருவுக்குக் கொண்டுபோய் ஆறு வெள்ளிக் காசுகளுக்கு விற்றார்கள். ஆனால் அந்த ஆறு வெள்ளிக் காசுகளையும் கொண்டு வரும் போதுஓர் ஏழை மனிதர் ஹள்ரத் அலீ(ரளி) அவர்களிடம் ஏதாவது தாருங்கள் என்று கேட்டார். அப்போது ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் அதனை அப்படியே தர்மம் செய்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

வழியில் ஒரு மனிதர் ஒரு ஒட்டகத்தை பிடித்துக் கொண்டு வந்து கொண்டிருந்தார். ஹள்ரத் அலீ (ரளி) அவர்களைப் பார்த்த வுடன் "அபுல்ஹஸன் அவர்களே! இந்த ஒட்டகத்தை விலைக்கு வாங்கிக் கொள்வீர்களா?" என்று கேட்டார்கள். ஹள்ரத் அலீ(ரளி) அவர்கள் "இந்த ஒட்டகத்தை வாங்க என்னிடம் பணம் இல்லை" என்றார்கள். அவர் "(பரவாயில்லை) இதனை நூறு வெள்ளிக்காசுகளுக்கு தவணை முறையில் உமக்கு விற்பனை செய்கிறேன். பணத் தைப் பிறகு தரலாம். (அது பற்றி கவலை இல்லை)" என்றார்.

உடனே ஹள்ரத் அலீ(ரளி) அவர்கள் அந்த ஒட்டகத்தை வாங்கிக்கொண்டு சென்றார்கள். சிறிது தூரம் தான் சென்றிருப்பார் கள். மற்றொருவர் அங்கு வந்து "அபுல்ஹஸன் அவர்களே! இந்த ஒட்டகத்தை விற்பனை செய் கின்றீர்களா?" என்று வினவினார்.

ஆச்சரியப்பட்ட ஹள்ரத் அலீ(ரளி) அவர்கள் "இதை நான் நூறு வெள்ளிக் காசுகளுக்கு வாங்கினேன். (நீர் எவ்வளவு தருவீர்?)" என்று கேட்டார்கள். அவர், "நான் இந்த ஒட்டகத்தில் இருந்து உங்களுக்கு 60 வெள்ளிக்காசுகள் இலாபம் கிடைக்குமாறு வாங்கிக் கொள் கிறேன்" (அதாவது 160 வெள்ளிக் காசுகளுக்கு வாங்கிக் கொள் கிறேன்)" என்றுகூறினார். ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள், சரியென சம்மதித்து ஒட்டகத்தை ஒப்படைத்து 160 வெள்ளிக் காசுகளைப் பெற்றுக் கொண் டார்கள்.

சிறிது தூரம் சந்தோஷமாக நடந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது முதலில் ஒட்டகத்தைதவணை முறையில் கொடுத்தவர் அங்கு வந்து, "(அபுல் ஹஸன் அவர்களே) ஒட்டகத்தை விற்பனை செய்து விட்டீரா? என்று வினவினார். ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் "ஆம் என்று கூறியதும் அவர், "(அப்படியானால் வாக்குப்படி) எனக்கு சேர வேண்டிய தொகை யைக் கொடுத்து விடுங்கள்"

என்று கேட்டார். உடனே ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் நூறு வெள்ளிக்காசுகளை கொடுத்துவிட்டு மீதி 60 வெள்ளிக்காசுகளை எடுத்துக் கொண்டுபோய் தனது அன்பு மனைவி ஃபாத்திமா (ரளி) அவர்களிடம் கொடுத்தார்கள்.

ஆச்சரியப்பட்ட ஃபாத்திமா (ரளி) அவர்கள் "(நான் கொடுத்த துணிக்கு) இவ்வளவு பணம் எப்படி உங்களுக்குக் கிடைத்தது?" என்று வினவினார்கள்.

ஹள்ரத் அலீ(ரளி) அவர்கள், ("உமது துணியை விற்ற) ஆறு வெள்ளிக்காசுகளை வைதது அல்லாஹ்வுடன் வியாபாரம் செய்தேன். அல்லாஹ் அதை அறுபதாக பெருக்கித் தந்தான்" என்று கூறி நடந்ததை விவரித்தார்கள். ஃபாத்திமா (ரளி) அவர்களும் சந்தோஷப்பட்டார்கள்.

உடனே ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் அருமை பெருமானார் (ஸல்) அவர்களிடம் சென்று நடந்த சம்பவங்களை எடுத்துச் சொன்னார்கள். இதைக் கேட்ட அண்ணல் நபி (ஸல்) அவர்கள், "(அலீயே! உம்மிடம்) ஒட்டகத்தை விற்றவர் (வானவர்) ஜிப்ரயீல் (அலை) ஆவார்கள். (உம்மிடமிருந்து) ஒட்டகத்தை வாங்கியவர் (வானவர்) மீக்காயீல் (அலை) ஆவார்கள். (மறுமை நாளில்) அந்த ஒட்டகம் ஃபாத்திமாவுக்குரிய வாகனமாகும்" என்று சொன்னார்கள்.

(நூல் : சீரத்துல் ஹலபிய்யா)

## சிறந்த பகரம்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "படுக்கை, போர்வை, மனைவி, மக்களின் அரவணைப்பு ஆகியவற்றை உதறிவிட்டு (இறை வணக்கம் புரிய) அதிகாலையில் எழுந்து செல்லும் மனிதனை பார்த்து இறைவன் வியப்படைகிறான். இறைவன் வானவர்களை நோக்கி, என்னுடைய இந்த அடியானை பாருங்கள். படுக்கை, போர்வை, மனைவி, மக்கள் அரவணைப்பு ஆகியவற்றை உதறிவிட்டு அதிகாலையில் (இறைவணக்கம் புரிய) எழுந்து விட்டான். எதற்காக? இந்த அடியானுக்கு என்ன வேண்டும்? (அவன் எழுந்தது) எனது அருள் மீது ஆசை வைத்தா? அல்லது எனது தண்டனைக்கு பயந்தா? என்று கேட்கிறான். பின்னர் இறைவன், "வானவர்களே! உங்களையே சாட்சியாகவைத்துக்கூறுகிறேன். நான், அவன் ஆசைப்பட்டதை அவனுக்கு நிச்சயமாக கொடுப்பேன். அவன் எதைப்பற்றி பயப்படுகிறானோ நிச்சயமாக அதிலிருந்து அவனைப் பாதுகாப்பேன்" என்று கூறினான்.

(நூல் : முஸ்னது அஹ்மத்)

ஹள்ரத் உபை பின் கஅப் (ரளி) அவர்கள் கூறுகிறார்கள். "எவரொருவர் அல்லாஹ்விற்காக ஒரு பொருளை இழப்பாரோ அவருக்கு அதைவிடச்சிறந்ததை

அவர் அறியா புறத்திலிருந்து அல்லாஹ் வழங்குவான்."

(நூல் : கன்ஜுல் உம்மால், ஹயாத்துஸ் ஸஹாபா பாகம் - 2, பக்கம் - 826)

கண்மணி பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "ஒருவர் பொய்யை அதுவே அசத்தியம் என்று தெரிந்ததும் (அல்லாஹ்வுக்காக) கைவிட்டால், அவருக்காகச் சொர்க்கத்தின் கீழ்தளத்தில் மாளிகை எழுப்பப்படும். ஒருவர் விதண்டா வாதத்தை அவர் உண்மையே உரைப்பவரானாலும் (அல்லாஹ்வுக்காக) கை விட்டால், அவருக்காகச் சொர்க்கத்தின் நடுப் பகுதியில் மாளிகை எழுப்பப் படும். ஒருவர் தம் குணங்களை (அல்லாஹ்வுக்காக) அழகு படுத்திக் கொண்டால் அவருக்காகச் சொர்க்கத்தின் மேல்தளத் தில் மாளிகை எழுப்பப்படும்."

அறிவிப்பாளர் : ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள்

(நூல் : திர்மிதீ-1916)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : எவர் அழகு ஆடையை அணிய சக்தி பெற்றிருந்தும் பணிவின் காரண மாக அதனை அணியாமல் இருந் தாரோ அவருக்கு அல்லாஹ் சொர்க்கத்தின் ஆடைகளை அணிவித்து கௌரவிப்பான்."

(நூல் : அபூதாவூத் - 4147 முஸ்னது அஹ்மத்-15066)

பேராசான் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "யார் தமது கோபத்தை செயல் படுத்த சக்தி பெற்றிருந்தும் அதை மென்று விழுங்கிவிடு கிறாரோ அவரை அல்லாஹ் மறுமை நாளில் படைப்பினங் களுக்கு முன்னால் அழைப்பான். சொர்க்கக் கன்னிகளில் (ஹூருல் ஈன்) அவர் விரும்பும் யாரையும் தேர்ந்தெடுத்துக்கொள்ள அவருக்கு உரிமை அளிப்பான்."

அறிவிப்பாளர்: ஹள்ரத் முஆத் பின் அனஸ் அல்ஜுஹனீ (ரளி) அவர்கள்

(நூல் : திர்மிதீ 1944)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "தூயோன் அல்லாஹ் கூறுகிறான்: ஆதமுடைய மகனே! (மனிதா!) துன்பம் ஏற்பட்ட முதல் கட்ட நிலையிலேயே நீ பொறுமை காத்து, நன்மையை எதிர்பார்த் தால், உனக்கு நான் சொர்க்கத்தை விடக்குறைவான வெகுமதியைக் கொடுப்பதில் திருப்தியடைய மாட்டேன்."

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூ உமாமா (ரளி) அவர்கள்

(நூல் : இப்னுமாஜா-1586, முஸ்னது அஹ்மத், அல்அதபுல் முஃப்ரத்-535)

துன்பம் ஏற்பட்ட முதல் கட்டத்தில் அதைத் தாங்கிக் கொண்டு பொறுமை காப்பது பாராட்டத் தகுந்தவையாகும். அதை விடுத்து துன்பம் தாக்கிய வுடன் புலம்புவதையெல்லாம் புலம்பி விட்டு, பதற்றத்தை

எல்லாம் வெளிப்படுத்திவிட்டு, பிறகு படுவதற்கு ஒன்றுமில்லை என்ற இறுதிக் கட்டத்தில் அமைதியடைவது பொறுமை ஆகாது. அதற்கு இறைவனிடம் நன்மையும் கிடைக்காது. ஏனெனில், நாட்கள் கடந்துவிட்டால் துயரம் மறைவதும் அந்த அளவு குறைவதும் இயற்கையாகும். இதில் தனிச்சிறப்பு எதுவும் இல்லை.

துன்பத்தின் ஆரம்பகட்டத்தில் அல்லாஹ்வுக்காக அதை சகித்துக் கொண்டால் அதற்கான நற்கூலியாக, தண்டனை பெறாமல் சொர்க்கம் செல்லும் நற்பேற்றை அல்லாஹ் வழங்குவான் என்பது இதன் பொருளாகும். தண்டனைக்குப் பின் சொர்க்கம் செல்லும் கூட்டத்தாரில் இவர்கள் சேர மாட்டார்கள்.

## சொர்க்கவாசியா? அல்லது நரகவாசியா?

கலீஃபா ஹாரூன் அல்ரஷீத் (ரஹ்) அவர்கள் பேரறிஞர் இமாம் ஷாஃபிஈ (ரஹ்) அவர்களிடம், "நான் சொர்க்கவாசியா? அல்லது நரகவாசியா?" என்று வினவினார். அதற்கு இமாமவர்கள் கலீஃபாவை நோக்கி, " நீங்கள் பாவம் செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தும் அல்லாஹ்வுக்கு அஞ்சி அதை செய்யாமல் விட்டதுண்டா?"

கலீஃபா, "ஆம்! ஒருமுறை நான் ஒரு பெண்மீது வெகு நாட்களாக ஆசை கொண்டிருந்தேன். அவளுடன் உறவு கொள்வதற்கும் முயற்சித்தேன். அவள் எனக்கு இடம் தராமல் விலகிக் கொண்டே இருந்தாள். ஒருநாள் இரவில் அவள் தனிமையில் இருந்தாள். இந்த நேரத்தைப் பயன்படுத்தி அவளை நெருங்கினேன். அவளும் தடை சொல்லவில்லை. அப்போது எனது மனசாட்சி 'ஹாரூனே! நீ மக்களை ஆளும் மன்னனாக இருந்து கொண்டு இந்த தவறான காரியத்தைச் செய்யலாமா? மறுமை நாளில் அல்லாஹ்விடம் இதற்கான கேள்வி உண்டு என்பதை மறந்து விட்டாயா?' என்று பேச ஆரம்பித்தது. அப்போது அல்லாஹ்வுக்கு பயந்து அந்தப் பெண்ணை விட்டும் விலகிவிட்டேன்" என்றுகூறினார்.

இமாமவர்கள், "கலீஃபாவே! நீங்கள் சொர்க்கவாசி தான்" என்று கூறி விட்டு, "**எவன் தன் இறைவனின் சந்நிதியில் [விசாரணைக்காக] நிற்பதைப் [பற்றிப்] பயந்து, [தப்பான] சரீர இச்சையை விட்டும் தன்னைத் தடுத்துக் கொண்டானோ அவன் செல்லுமிடம் நிச்சயமாக சொர்க்கம் தான்.**" (அல்குர்ஆன் – 79 : 40, 41) என்ற திருமறை வசனங்களை ஓதிக்காட்டினார்கள்.

அல்லாஹ்வுக்காக செய்யும் அனைத்து தியாகங்களுக்கும் அழகிய பலன் உண்டு. எனவே, அல்லாஹ்வின் அன்பைப் பெற தியாகங்கள் புரியும் அழகிய பண்பாளர்களாக அல்லாஹு தஆலா நம்மை வாழச் செய்வானாக!

# வீட்டிலுள்ள பொருட்களைக் கொண்டு நோயைக் குணப்படுத்தும் வழிமுறைகள்....

அ. அப்துல் ஹாதி

நோய் வந்துவிட்டாலே உடனே மருத்துவரிடம் ஓடுவதை விட, வீட்டிலுள்ள பொருட்களைக் கொண்டே எளிதாக குணப்படுத்தலாம்.

**நெஞ்சு சளி :** தேங்காய் எண்ணெயில் கற்பூரம் சேர்த்து நன்கு சுட வைத்து, ஆற வைத்து, நெஞ்சில் தடவினால் சளி குணமாகும்.



**தலைவலி :** ஐந்தாறு துளசி இலைகளுடன் ஒரு சிறு துண்டு சுக்கு, 2 இலவங்கம் சேர்த்து நன்கு அரைத்து நெற்றியில் பற்றாகப் போட்டால் தலைவலி குணமாகும்.

பச்சை கொத்துமல்லித் தழைகளை மிக்ஸியில் அரைத்து தினமும் காலையில் எழுந்தவுடன் குடித்துவர தலைவலி நீங்கும்.



**தொண்டை கரகரப்பு :** சுக்கு, பால் மிளகு, திப்பிலி, ஏல அரிசி ஆகியவற்றை வறுத்து பொடி செய்து தேனில் கலந்து சாப்பிட்டால் தொண்டை கரகரப்பு குணமாகும்.

**தொடர் விக்கல் :** நெல்லிக்காயை இடித்து சாறு பிழிந்து, தேனுடன் சேர்த்து சாப்பிட்டால் தொடர் விக்கல் தீரும்.



**அஜீரணம் :** ஒரு டம்ளர் தண்ணீரில் கறிவேப்பிலை, இஞ்சி, சீரகம் மூன்றையும் கொதிக்க வைத்து, ஆற வைத்து வடிகட்டி குடித்தால் அஜீரணம் சரியாகும்.

அல்லது கறிவேப்பிலை, சுக்கு, சீரகம், ஓமம் சேர்த்து துவையல் அரைத்து சாப்பிட்டால் அஜீரணம் சரியாகும். அல்லது வெற்றிலை, 4 மிளகு இவற்றை மென்று தின்றால் அஜீரணக் கோளாறு சரியாகும்.



**வாயுத் தொல்லை :** வேப்பம் பூவை உலர்த்தி, தூளாக வெந்நீரில் உட்கொள்வதினால் வாயுத்தொல்லை நீங்கும். ஆறாத வயிற்றுப்புண் நீங்கும்.



**வயிற்று வலி :** வெந்தயத்தை நெய்யில் வறுத்து, பொடி செய்து, மோரில் கலந்து குடித்தால் வயிற்று வலி நீங்கும்.



**சரும நோய் :** கமலா ஆரஞ்சுத் தோலை வெயிலில் காய வைத்து, பொடி செய்து தினமும் சோப்புக்குப் பதிலாக உடம்பில் தேய்த்து குளித்து வந்தால் சரும நோய் குணமாகும்.

**மூக்கடைப்பு :** ஒரு துண்டு சுக்கை தோல் நீக்கி, ½ லிட்டர் நீரில் போட்டு சுண்டக் காய்ச்சி, பால், சர்க்கரை சேர்த்து காலை, மாலை சாப்பிட்டு வந்தால் மூக்கடைப்பு விரைவில் நீங்கும்.

**கண் எரிச்சல், உடல் சூடு :** வெந்தயத்தை மட்டும் ஊற வைத்து நன்கு அரைத்து தலையின் முடி வேர்க் கால்களில் தடவி வைத்து நன்கு ஊறியபின் தலைமுடியை அலசினால் முடி நன்கு வளருவதுடன் கண் எரிச்சல், உடல் சூடு தணியும்.

**வயிற்றுக் கடுப்பு :** வயிற்றுக் கடுப்பு ஏற்பட்டால் புழுங்கல் அரிசி வடித்த தண்ணீரில் சிறிதளவு உப்பையும், வெண்ணெயையும் கலந்து குடித்து விடுங்கள். சிறிது நேரத்திலேயே குணம் தெரியும்.

**பல் கூச்சம் :** புதினா விதையை வாயில் போட்டு மென்று கொண்டிருந்தால் பல்லில் ஏற்படும் கூச்சம் மறையும். அல்லது புதினா இலையை நிழலில் காய வைத்து, தூள் உப்பு சேர்த்து பல் துலக்கினால் ஓரிரு நாளில் குணமாகும்.

**வாய்ப்புண் :** வாய்ப்புண்ணுக்கு கொப்பரைத் தேங்காயை கசகசாவுடன் சேர்த்துச் சாப்பிட்டால் குணமாகும். அல்லது கடுக்காயை வாயில் ஒதுக்கி வைத்தால் வாய்ப்புண் ஆறும்.

**அஜீரணம் :** ஒரு கப் சாதம் வடித்த நீரில், ¼ ஸ்பூன் மஞ்சள் பொடியைக் கலந்து குடித்தால் வயிற்று உப்புசம், அஜீரணம் மாறும் அல்லது சிறிது சுக்குடன் கருப்பட்டி, 4 மிளகு சேர்த்து



நன்கு பொடி செய்து இரண்டு வேளை சாப்பிட்டால் அஜீரணம் குணமாகி பசி ஏற்படும். ஓமம், கருப்பட்டி இட்டு கசாயம் செய்து பருகினால் அஜீரணம் சரியாகும்.

**இடுப்பு வலி :** சாதம் வடித்த கஞ்சியை எடுத்து ஆற வைத்து ஒரு ஸ்பூன் நெய்யில் கொஞ்சம் சீரகம் கலந்து குடித்தால் இடுப்பு வலி நீங்கும்.

**வியர்வை நாற்றம் :** படிகாரத்தை குளிக்கும் நீரில் கலந்து குளித்தாலும் வியர்வை நாற்றம் மட்டுப்படும்.


**உடம்பு வலி :** சாம்பிராணி, மஞ்சள், சீனி போட்டு கஷாயமாக்கி பாலும், வெல்லமும் சேர்த்து பருகினால் உடம்பு வலி தீரும்.



**ஆறாத புண் :** விரலி மஞ்சளை சுட்டு, பொடி செய்து, தேங்காய் எண்ணெயில் குழப்பி காலையிலும், இரவிலும் ஆறாத புண்களுக்கு மேல் போட்டால் விரைவில் குணமாகிவிடும்.

**கண் நோய்கள் :** பசுவின் பால் 100 மில்லி, தண்ணீரையும் அதே அளவு விட்டு இதில் வெண்தாமரை மலர்களைப் போட்டுக் காய்ச்சி பாத்திரத்தை இறக்கி வைத்து, அதில் வரும் ஆவியைக் கண் வலி போன்ற நோய்கள் வந்த கண்ணில் படும்படி பிடித்தால், கண் நோய்கள் அகலும்.

**மலச்சிக்கல் :** தினமும் குடிநீரைக் காய்ச்சும்போது ஒரு கைப்பிடி சுக்கைத் தட்டிப்போடலாம். தேவைப்பட்டால் குடிநீரை வடிகட்டிக் கொள்ளலாம். மருத்துவ குணங்களைக் கொண்ட இப்பொருள், ஜீரணத்துக்கு உதவும்; வாயுவை அகற்றும். அல்லது இரவில் இரண்டு வாழைப்பழம் சாப்பிடலாம். அதிகாலையில் இலேசான சுடுநீரில் ½ ஸ்பூன் கடுக்காய்ப் பொடி சேர்த்துக் குடித்துவிட்டால் 15 நிமிடங்களில் குடல் சுத்தமாகி விடும்.



**ஏப்பம் :** அடிக்கடி ஏப்பம் வருகிறதா? வேப்பம்பூவை தூள் செய்து, 4 சிட்டிகை எடுத்து, இஞ்சி சாறுடன் கலந்து உட்கொண்டால் குணமாகும்.

**பூச்சிக்கடி வலி :** எறும்புகள் போன்ற பல்வேறு பூச்சிகள் கடித்து, வலி, வீக்கம் போன்றவை ஏற்பட்டால் வெங்காயத்தை நறுக்கி அந்த இடத்தில் தேய்க்கவும்.

**வயிற்றுப்புண் :** பீட்ரூட் கிழங்கின் சாற்றுடன் சிறிது தேனும் கலந்து அருந்தி வந்தால் வயிற்றுப்புண் குணமாகும்.

**வயிற்றுப்போக்கு :** கறிவேப்பிலையை அம்மியில் வைத்து, அதனுடன் தேக்கரண்டியளவு சீரகத்தையும் வைத்து, மை போல அரைத்து, வாயில் போட்டு தண்ணீர் குடித்துவிட்டால் வயிற்றுப்போக்கு நிற்கும்.



**வேனல் கட்டி :** வேனல் கட்டியாக இருந்தால் வலி அதிகமாக இருக்கும். அதற்கு சிறிதளவு சுண்ணாம்பும், சிறிது தேன் அல்லது வெல்லம் குழைத்தால் சூடு பறக்க ஒரு கலவையாக வரும். அதை அந்தக் கட்டியின் மீது போட்டு ஒரு வெற்றிலையை அதன்மீது ஒட்டி விடவும்.

**வேர்க்குரு :** தயிரை உடம்பில் தேய்த்துக் குளித்தால் வேர்க்குருவை விரட்டி அடிக்கலாம்.

**உடல் தளர்ச்சி :** முட்டைக்கோஸுடன் பசுவின் வெண்ணெய் கலந்து பாகு போல் செய்து சாப்பிட்டால் உடல் தளர்ச்சி விலகும்.

**நீர்ச்சுருக்கு / நீர்க்கடுப்பு:** வெயில் காலத்தில் முக்கியமாக பெண்களுக்கு நீர்க்கடுப்பு ஏற்படுகிறது. இதற்குக்காரணம் : வெயில் காலத்தில் அதிகமாகத் தண்ணீர் குடிக்காமல் இருந்தால் நீர்ச்சுருக்கு ஏற்படும். தாராளமாகத் தண்ணீர் குடிக்க வேண்டும். பார்லி அரிசி ஒரு கைப்பிடி எடுத்து 8 டம்ளர் தண்ணீரில் கொதிக்க வைத்து ஆறிய பிறகு குடிப்பது நல்லது. இளநீரில் வெந்தயப் பொடி கலந்து குடிக்கலாம்.



**தாய்ப்பால் சுரக்க :** அரிசியுடன் வெந்தயத்தைச் சேர்த்து கஞ்சியாக காய்ச்சி உண்டு வந்தால் தாய்ப்பால் சுரக்கும்.



**குழந்தை வெளுப்பாகப் பிறக்க :** கர்ப்பிணிப் பெண்கள் அடிக்கடி இளநீர், தர்ப்பூசணி பழம் ஆகியவை சாப்பிட்டால் குழந்தை வெளுப்பாய் பிறக்கும். அழகாகவும் இருக்கும்.

**எரிச்சல், கொப்பளம் :** நெருப்பு, சுடுநீர் பட்ட இடத்தில் பெருங்காயத்தை அரைத்துப் பூசினால் எரிச்சல் குறையும். கொப்பளமும் ஏற்படாது.

"நாணயமும் வாய்மையும் கொண்ட வியாபாரி மறுமையில் ஷஹீதுகளோடு இருப்பார்."

- நபி (ஸல்) அவர்கள்

(நூல் : திர்மிதி)

என்றும் முதலிடம்... எப்போதும் உங்களிடம்...




சீருக்கும்... சிறப்புக்கும்...

சீமாட்டி

பட்டு • ஜவுளி • ரெடிமேட்ஸ்

கும்பகோணம் - திருவாரூர்

தஞ்சாவூர் மெயின்ரோடு, கும்பகோணம் - 612001.

T: +91-435 2431818 - E: seemattikum@gmail.com - W.www.seemattisilks.in

T: +91-435 2432526 - E: seemattiready@gmail.com - W.www.seemattireadymade.com

# மார்க்கக் கலாசாலையின் கட்டம் உருவாக நிதியுதவி செய்யுங்கள்!

"அஸ்அதுல்மில்லத்" அல்லாமா அ.முஹம்மது அஷ்ரஃப் அலி ஹள்ரத் (ரஹ்) அவர்களால் நிறுவப்பட்ட "அல்ஜாமிஅத்துல் அரபிய்யா மஃதினுஸ் ஸஆதா" அரபு கல்லூரி தென் தமிழகத்தின் மார்க்கக் கலாசாலையின் மணி மகுடமாக திகழ்ந்து, கடந்த 40 வருடங்களாக மார்க்கக் கல்வி சேவையில் தனி முத்திரை பதித்து வருகிறது. நம் கல்லூரியில் பட்டை தீட்டப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட ஆலிம்களும், ஹாஃபிழ் களும் உலகெங்கும் பரவி தீன் பணியாற்றி வருகிறார்கள்.

இந்நிலையில், இறையருளால் நம் கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டும் பணியை துவங்கியுள்ளோம். நம் கல்லூரி கட்டடம் முழுமை பெற **சுமார் 4½ கோடி செலவாகும்** என மதிப்பீடு செய்யப் பட்டுள்ளது. எனவே, தீன் பயிர் தழைத்தோங்க ஆணிவேராக உள்ள நம் கல்லூரியின் கட்டடம் நிறைவுபெற தாராளமாக உதவி செய்ய வேண்டுகிறோம். கல்லூரிக்கு பணமாகவோ அல்லது கல்லூரி கட்டடத்திற்கு தேவையான கம்பி, ஜல்லி, மணல், செங்கல், சிமெண்ட் ஆகியவற்றையோ தாராளமாக வழங்க வேண்டுகிறோம்.

**வங்கி விபரம் :**

**Name:** AL JAAMIATHUL ARABIYYA MAHDINUS SAADHA EDUCATION TRUST
**INDIAN BANK :** A/c. No. 429079510
**BRANCH :** Madurai KARUPPAYURANI
**IFSC Code :** IDIB000K136

பணம் அனுப்பிய விபரத்தை கீழ்வரும் செல் நம்பருக்கு Whatsapp அல்லது S.M.S. மூலம் அனுப்பி வையுங்கள்.

# J.M.S.ARABIC COLLEGE

Jaamiyaa Nagar, Sivagangai Highway Road,
MADURAI - 625020.

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| 94430 66539 | 97900 64365 | 99948 57786 |

"இறைவா ! உனையன்றி எங்களை காக்கவோ வலிமை தரவோ வேறு யாருமில்லை"

# AL HUSSAM

## *Travel & Tours India (p) Ltd*

**Specialist in: Haj & Umrah**

ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுங்கள்
அல்குர் ஆன் - 2:196



**Platinum Package**
(31 - 33 DAYS)
HARAM NEAREST 4-5 STAR HOTEL
(MAKKAH : 0-50 MTRS)
(MADINA : 50-150 MTS)

**Platinum Short Package**
(18 - 21 DAYS)
HARAM NEAREST 4-5 STAR HOTEL
(MAKKAH : 0-50 MTRS)
(MADINA : 50-150 MTS)

**Golden Package** (5-10 MINS WALKABLE DISTANCE) STAR HOTEL

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

**Admin Office:** No: 3, 3rd Floor, Balfours Road, Kilpauk, Chennai - 600 010,

**Booking Center**: No: 49-1/25, Sarangapani South Street,
Periya Pallivasal Complex, Kumbakonam - 612 001.

Ph: 7299460725 / 9551004088 / 9941372228 / 9941372229
E-mail: alhussamchennai@gmail.com / alhussamkumbakonam@gmail.com

இங்கு குறிப்பிட்ட முகவரியில் சென்னை, கும்பகோணம் தவிர வேறெங்கும் கிளைகள் கிடையாது.
ஹஜ் மற்றும் உம்ரா சேவையில் முதல் தரம், முதலிடம் அதுவே அல்ஹுஸாமின் தனிச்சிறப்பு...

## எமதருமை வாசக சொந்தங்களே!

தங்களின்

சந்தா மற்றும் ஏஜன்ஸி தொகைகளை

துரிதமாகவும், எளிதாகவும்

குர்ஆனின் குரலுக்கு அனுப்பி வைக்க

கீழ்க்கண்ட எமது **QR Code**–ஐ

பயன்படுத்துங்கள்.

தொடர்-17

# என் நெஞ்சைத் தொட்டவை!

எம்.ஜே.அன்வரி

## மூத்து மாளிகை

கணவருக்குரிய தேவைகள், பணிவிடைகள் அனைத்தையும் மனைவியே செய்ய வேண்டும் தான். பணக்கார வீட்டுப் பெண்ணாக இருந்தாலும் சரி, அல்லது அவர்களின் வீட்டில் பல வேலைக் காரர்கள் இருந்தாலும் சரியே, தமது கணவரின் காரியங்கள் அனைத்தையும் மனைவிதான் கவனித்துச் செய்ய வேண்டும்.

இவ்வாறு தமது அன்புக் கணவருக்குப் பணிவிடை செய்வதால் அந்த மனைவிக்கு இம்மையிலும் மட்டுமல்ல; மறுமையிலும் அளவற்ற பாக்கியங்களை எந்த அளவுக்கு அல்லாஹ் வழங்குகிறான் என்பதை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் நம்மால் காண முடிகிறது.

ஹள்ரத் அன்னை கதீஜா (ரளி) அவர்கள் மிகப் பெரும் செல்வச் சீமாட்டியாக இருந்தும்கூட, பெருமானார் (ஸல்) அவர்களைவிட வயதில் மூத்தவராக இருந்தும்கூட பெருமானார் (ஸல்) அவர்களின் அனைத்துப் பணிகளையும் அந்த அம்மையாரே செய்தார்கள். வீட்டில் பல வேலையாட்கள் இருந்தும்கூட ஹிரா மலைக்குகையில் நாயகம் (ஸல்) அவர்கள் தனித்திருந்து வணக்கம் புரிந்தபோது, அவர்களுக்குரிய உணவைக் கரடுமுரடான மலைப்பாதையில் சிரமத்துடன் நடந்து சென்று போய்க் கொடுத்தார்கள்.

ஒரு நாள் அவ்வாறு உணவு கொண்டு வரும்போது வானவர் ஜிப்ரயீல் (அலை) அவர்கள், பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து அன்னை கதீஜா (ரளி) அவர்களுக்கு நன்மாராயம் சொன்னார்கள் என்பதை ஹதீஸில் காணுகிறோம்.

ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் அறிவிக்கும் அந்த ஹதீஸ் வருமாறு :

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வானவர் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் வந்து "யா ரஸூலல்லாஹ்! இதோ கதீஜா (ரளி) அவர்கள் உங்களுக்காக உணவும், நீரும் பாத்திரத்தில் கொண்டு வருகிறார்கள். அவர்கள் இங்கு உங்களிடம் வரும்போது அல்லாஹ்வின் ஸலாமை அவர்களுக்கு தாங்கள்

சொல்லுங்கள். எனது ஸலாமையும் தெரிவியுங்கள். அத்துடன் சுவனபதியில் முத்துகளால் நிர்மாணிக்கப்பட்ட ஒரு மாளிகையும் அவர்களுக்காகத் தயாராக இருக்கிறது என்ற சுபச் செய்தியையும் அவர்களுக்கு அறிவியுங்கள்" எனக் கூறினார்கள்.

## முல்லா

ஓரிரவு முல்லா தன் வீட்டில் அமர்ந்து கற்பனை உலகில் உலவிக் கொண்டிருந்தார். அப்போது திருடர்கள் அவர் வீட்டின் முகட்டிலேறிக் குதிப்பதைக் கண்டதும் முல்லாவுக்கு தொடை நடுக்கம் ஏற்பட்டது. மெதுவாக அடி மேல் அடியெடுத்து வைத்து நடந்து தம் வீட்டிலிருந்த காலி பீரோவுக்குள் நுழைந்து கொண்டு கதவை மூடிக் கொண்டார் முல்லா. வீட்டிற்குள் நுழைந்த திருடர்கள் அங்கு ஏதாவது கிடைக்குமா என்று தேடிப் பார்த்தார்கள். ஒன்றுமே கிடைக்கவில்லை. இறுதியாக அங்கிருந்த பீரோவைத் திறந்து பார்த்ததும் அங்கு முல்லா ஒய்யாமராகச் சாய்ந்து கொண்டிருப்பதைக் கண்டதும் அவர்களுக்கு சற்று திகைப்பும், நடுக்கமும் ஏற்பட்டன. முல்லாவுக்கும் அப்படியே! எனினும், சமாளித்துக் கொண்டு அவர்கள் முல்லாவை நோக்கி "ஏன் இதற்குள் சாய்ந்து கொண்டு இருக்கிறீர்?" என்று வியப்புடன் வினவினர்.

"என்ன செய்வது? தாங்கள் என் இல்லத்திற்குள் தொப்பென்று குதித்ததும், என்னை ஓர் இனம் தெரியாத நாணம் பிடுங்கி தின்றது. நள்ளிரவில் என் இல்லத்திற்கு அழையா விருந்தினராக வந்த உங்களை வரவேற்று, உபசரிக்க என்னிடம் ஒன்றுமில்லையே என்பதை எண்ணியபோது என் கண்கள் பனித்தன. என் விதியை நொந்து கொண்டேன். உங்கள் கண்களில் விழிக்கவே எனக்கு நாணமாக இருந்தது. எனவே, இங்கு ஒளிந்து கொண்டேன்" என்றார் முல்லா குத்தலாக!

## மது

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லறத் தோழர்களில் ஒருவரும், நற்பதியாம் சுவனபதியைக் கொண்டு நன்மாராயம் கூறப்பட்டிருந்த பத்து பாக்கியவான்களில் ஒருவருமான ஸைய்யிதுனா அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரளி) அவர்கள் ஒரு விருந்து வைபவத்திற்கு ஏற்பாடு செய்து அதில் கலந்து கொள்ள நாயகத் தோழர்களில் சிலரையும் அழைத்திருந்தார்கள். அவர்களும் கலந்து கொண்டார்கள். உணவு பரிமாறப்பட்டது. அக்கால வழக்கப்படி அதில் மது வகைகளும் வைக்கப்பட்டிருந்தன.

விருந்தினர் அதையும் அருந்தி ஆனந்தமடைந்தனர். இதற்கிடையே மக்ரிபு தொழுக்கைக்குரிய நேரமும் வந்துவிட்டது. விருந்தில் கலந்து கொண்ட அனைவரும் தொழுகைக்குத் தயாரானார்கள். அவர்களில் ஒருவர் இமாமாக நின்று தொழ வைத்தபோது போதை தலைக்கேறியிருந்தது. தொழுகையில் சூரத்துல் காஃபிரூன் அதாவது "குல்யா அய்யுஹல் காஃபிரூன்" என்பதை ஓதினார். எப்படி? "காஃபிர்களே! நீங்கள் வணங்கிக் கொண்டிருப்பதை நான் வணங்க மாட்டேன்" என்று ஓத வேண்டியதை, "வணங்கமாட்டேன்" என்பதை "வணங்குவேன்" என்று அந்த சூராவிலுள்ள 'லா' என்ற எழுத்து இல்லாமல் ஓத ஆரம்பித்தார். இந்நேரத்தில் தான் மது விஷயமாக இறக்கப்பட்ட இரண்டாவது வசனம் என்று சொல்லப்படுகின்ற **"ஈமான் கொண்டவர்களே! நீங்கள் போதையாக இருக்கும் நிலையில் தொழுகையின் பக்கம் நெருங்காதீர்கள்"** (4 : 43) என்ற இந்த இறைவசனம் இறங்கியது. "போதையாக இருக்கும்போது தொழாதீர்கள்" என்று மட்டும் தடை விதிக்கப்பட்டிருந்ததால் இஷாத் தொழுகைக்குப்பின் மது அருந்தி விட்டு தூங்கி விடுவர். அதி காலையில் எழுந்திருக்கும் போது போதை தெளிந்து விடும். சுபுஹுத் தொழுகையை முடித்து விட்டு மது அருந்துவர். ளுஹர் தொழுகையின்போது தெளிந்து விடும். இப்படியே கொஞ்ச நாட்கள் செல்கின்றன. இன்னும் மது அருந்துவது தடை செய்யப்படவில்லையே என்று நல்லோர் உள்ளம் ஏங்கியது.

இப்படிப்பட்ட நிலையில், ஒரு நாள் நபித் தோழர்களில் சிலர் குடித்து விட்டு அவரவர்களின் குலப் பெருமையை உயர்த்தியும், மற்றவர்களை இழித்தும் கவிபுனைந்து பாடியதில் ஒருவருக் கொருவர் ஆத்திரம் ஏற்பட்டு அடிதடியில் இறங்கியதில் சிலருக்கு மண்டைக் காயம் ஏற்பட்டு விடுகிறது. வேடிக்கையில் உருவான நிகழ்ச்சி வேதனையில் முடிந்ததை எண்ணி இதற்கொரு முடிவு ஏற்படாதா? என்ற வேதனையோடு நபி (ஸல்) அவர்களிடம் உமர் (ரளி) அவர்கள் முறையிட்டு முடிவினை எதிர்பார்த்து நிற்கிறார்கள்.

ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் விரும்பியபடி சில இறைவசனங்கள், சில சட்டங்கள், சில நேரங்களில் இறங்கியதை நினைவில் கொள்ள வேண்டும்.

முடிவு ஏற்படாதா? தெளிவான தீர்ப்பு கிடைக்காதா? என்று ஏங்கித் தவித்த உமர் (ரளி) அவர்களின் எண்ணப்படி மது விஷயத்தில் நான்கு வசனமாக நல்ல தீர்ப்பு தந்த தெளிவான

சட்டத்தை இக்குவலய மக்களுக்கு எடுத்தோதுவதன் மூலம் தடை உத்தரவைத் தாங்கிய இறைவசனம் இதோ -

“இறை நம்பிக்கையாளர்களே! நிச்சயமாகச் சாராயமும், சூதாட்டமும், விக்கிரக வணக்கமும், குறி கேட்பதும் ஷைத்தானுடைய அருவருக்கத்தக்க செயல்களிலுள்ளவையாகும். ஆகவே, இவற்றிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள். (அதனால்) நீங்கள் வெற்றி பெறுவீர்கள் (5 : 90) என்ற இறை கூற்றின் மூலம் தடை செய்யப்படுகிறது.

ஹிஜ்ரி மூன்றாம் ஆண்டு மது தடை செய்யப்படுகிறது.

மது தடை செய்யப்பட்டுள்ள இச்செய்தி ஊர் முழுவதும் பரவுகிறது. ஊர் விட்டு ஊர் செல்வோர் மூலம் மதீனாவுக்கும் இச்செய்தி எட்டுகிறது. தொண்டைக்குழியில் மது இருந்த போது இச்சட்டத்தைக் கேள்விப்பட்டதும் தொண்டையிலிருந்த மதுவை கொப்பளித்து விட்டு அக்கணமே அப்பழக்கத்தை விட்டொழித்தனர் ஒரு கூட்டத்தினர்.

மது அருந்திக் கொண்டிருந்த மற்றொரு கூட்டத்தார் இச்செய்தியைக் கேட்டதும் விசாரித்த பிறகு இப்பழக்கத்தை விட்டொழிப்போம் என்று கூறுகின்றனர். இல்லை முதலில் சட்டத்திற்குக் கீழ்ப்படிவோம் பின்னர் விசாரிப்போம் என்று கூறி, தமது கைத்தடியால் அங்கிருந்த மதுக் கலயங்களை உடைக்கிறார்கள் பிரிதொரு சாரார்.

யா ரஸூலல்லாஹ்! எங்கள் கைவசமுள்ள மதுவை என்ன செய்வது? என்று தடையுத்தரவு வந்தபின்னர் சஹாபாக்கள் கேட்கிறார்கள். அதனை எவருக்கும் விற்கவும் கூடாது, யாரும் வாங்கவும் கூடாது என்று நபி (ஸல்) அவர்கள் பதிலளிக்க நாயகத்தின் தோழர்கள் தங்களின் இல்லங்களிலிருந்த மது கலயங்களை தெருக்களிலேயே கொண்டு வந்து உடைக்க சிறு வாய்க்கால் போல் மது ஆறு ஓடியது என்றால் அந்த ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த மக்களோடு நம்மை ஒப்பிடத் தகுதி உண்டா?

## துஆவின் சிறப்பு

நபி பெருமானார் (ஸல்) அவர்கள் பாரசீக மன்னன் கிஸ்ராபர்வேஸுக்கு இஸ்லாமிய அழைப்பு விடுத்து ஒரு கடிதம் அனுப்பினார்கள். அவன் அந்த கடிதத்தைப் பெற்று கிழித்தெறிந்து விட்டான். இதனையறிந்த நபி பெருமானார் (ஸல்) அவர்கள் “யா அல்லாஹ்! அவன் தேசத்தையும் துண்டு

## சந்தேகத்தில் சிக்கிக் கொள்ளாதீர்!

“சந்தேகப்படுவது பற்றி நான் உங்களை எச்சரிக்கிறேன். ஏனெனில், சந்தேகம் கொள்வது மிகப் பெரிய பொய்யாகும்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல் : புகாரீ)


வாழ்த்துக்களுடன்....

**ARM**

நம்பிக்கையாளர்களே வெற்றியாளர்கள்

**உங்கள் திட்டம் – எங்கள் பொருட்கள்**
**ஓர் உறுதியான இணைப்பு**

**30க்கும் மேற்பட்ட முதன்மையான பிராண்டு**

**சிமெண்ட் | சானிட்டரிவேர்ஸ்**
**கம்பி | கெமிக்கல்ஸ்**

2154, வடக்குராஜ வீதி,
புதுக்கோட்டை.
செல் : +91 7373 7989 30

233, ECR
கோட்டைப்பட்டினம்.
செல் : +91 7373 7989 11

31, ஏர்போர்ட் ரோடு, திருச்சி.
செல் : +91 7373 7989 45

www.armsons.in

துண்டாக்குவாயாக" என பிரார்த்தித்தார்கள். அதன்படியே அவன் ஆட்சி அழிந்தது. அன்றிலிருந்து இன்று வரை மஜூஸிகள் எவரும் எங்கும் ஆட்சி பீடம் ஏறியதே இல்லை. (புகாரி, முஸ்லிம்)

ஹுதைபிய்யா உடன்படிக்கைக்குப் பிறகு நபி பெருமானார் (ஸல்) அவர்கள் பல தேச மன்னர்களுக்கு இஸ்லாமிய அழைப்பு விடுத்து கடிதங்கள் வரைந்தார்கள். நீதிமிக்க நவ்ஷோவின் மன்னனின் பேரனான கிஸ்ரா பர்வேசுக்கும் ஒரு கடிதம் இவ்விதம் வரைந்தார்கள். பிஸ்மில்லா ஹிர்ரஹ் மானிர் ரஹீம் முஹம்மத் ரஸூலல்லாஹ்வின் புறத்திலிருந்து பாரசீக மன்னர் கிஸ்ராவுக்கு எழுதப்பட்ட கடிதம் என அக்கடிதம் தொடங்கப்பட்டிருந்தது. இதனைக் கண்டு ஆத்திரமடைந்த கிஸ்ரா, எனது பெயரை அவர் தனது பெயருக்குப் பின்னால் எப்படி எழுதலாம் என ஆணவத்துடன் கூறியவாறு அந்தப் புனித கடிதத்தை கிழித்தெறிந்தான்.

நபி பெருமானார் (ஸல்) அவர்களின் மேற்கூறப்பட்ட பிரார்த்தனையால் பல நூற்றாண்டுகளாக பேரும், புகழுடனும் திகழ்ந்த அவரது ஆட்சி அழிந்தொழிந்தது. அதே காலத்தில் கிறிஸ்தவ ஆட்சியின் மன்னனான ஹிர்கல் (ஹெராகுலிஸ்) என்பவருக்கும் நபி பெருமானார் (ஸல்) அவர்கள் கடிதம் வரைந்திருந்தார்கள். அவர் அந்த கடிதத்துக்குப் பெரிதும் கண்ணியமளித்தார். இதனால் அவருடைய சமூகத்தாரின் ஆட்சி நீண்ட நெடிய காலம் நிலைத்திருந்தது. இஸ்லாமிய உலகுக்கு ஏராளமான நபிமொழிகளை (ஹதீஸ்கள்) வழங்கிய ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் கூறுகிறார்கள் :

எனது தாய் விக்கிரக ஆராதனைக்காரராக இருந்தார். நான் அவரை இஸ்லாத்தைத் தழுவும்படி தூண்டி வந்தேன். ஒரு நாள் இவ்விதம் நான் அழைத்தபோது என் தாய் நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறித்து தாறுமாறாக ஏசலானார். எனக்கோ சகிக்க முடியவில்லை. வேதனையால் விம்மினேன். அங்கிருந்து அழுது கொண்டே நபி பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகம் சென்று, "அல்லாஹ்வின் தூதரே! என்னுடைய தாயின் நேர்வழிக்காக (ஹிதாயத்திற்கு) துஆச் செய்யுங்கள்" என்றேன். உடனே நபி (ஸல்) அவர்கள் "யா அல்லாஹ்! அபூஹுரைராவின் அன்னைக்கு நேரான வழியை காட்டுவாயாக! (இஹ்தி உம்ம அபூஹுரைரா)" என துஆச் செய்தார்கள்.

இந்தப் பிரார்த்தனையைக் கேட்டு நான் மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினேன். வீட்டின் கதவு தாழிடப்பட்டிருந்தது. என்னுடைய காலடி சப்தத்தைக் கேட்ட எனது தாயார், நான் வந்திருப்பதை புரிந்து கொண்டு "அபூஹுரைரா! சற்று பொறு! இதோ வந்து விடுகிறேன்" எனக் குரல் கொடுத்தார். நான் தலைவாசலில் நின்று கொண்டிருந்தேன். உள்ளே தண்ணீர் ஊற்றும் சப்தம் கேட்டது. என் அருமைத்தாயார் குளித்து முடித்தவராக கதவைத் திறந்து "அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்" என கலிமா மொழிந்தவராக முஸ்லிமானார்.

எனக்கோ மகிழ்ச்சி தாளவில்லை. என் கண்கள் கண்ணீரைச் சொரிந்தன. ஆனந்தக் கண்ணீர் வடித்துக் கொண்டே நேராக நபி பெருமனார் (ஸல்) அவர்களின் திருச்சமூகம்சென்று இந்த நற்செய்தியைக் கூறினேன். பெருமானார் (ஸல்) அவர்கள் அதிகமதிகம் அல்லாஹ்வைப் புகழ்ந்தார்கள்.

## கேள்வி – கணக்கு

நபி பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனா முனவ்வராவுக்கு வருகை புரிந்தார்கள். அன்ஸாரி ஸஹாபாக்கள் தங்களுடைய உடைமைகள் அனைத்தையும் அர்ப்பணிக்கத் தயாராயிருந்தனர். அர்ப்பணித்துக் கொண்டுமிருந்தனர். ஆயினும், பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வறுமை நிலையில் கழிந்து கொண்டிருந்தது. ஒரு நாள் வீட்டிலிருந்து பசியுடன் வெளியில் கிளம்பினார்கள். அருமை மகளார் ஃபாத்திமாவும் பசியுடன் இருந் தார்கள். வழியில் ஹள்ரத் அபூபக்ர் (ரளி), ஹள்ரத் உமர் (ரளி) ஆகிய இவ்விருவரின் சந்திப்புக் கிடைத்ததும் அல்லாஹ்வின் நேசர்களானஇவ்விருவரும் பசி தாளாமல்தான் வெளியில் கிளம்பி வந்திருப்பதை அறிய முடிந்தது. கூடவே இவ்விரு தோழர் களையும் அழைத்துக் கொண்டு நபி (ஸல்) அவர்கள், ஹள்ரத் அபூ அய்யூபில் அன்சாரீ (ரளி) அவர்களின் இல்லம் சென்றார்கள்.

ஹள்ரத் அபூ அய்யூபில் அன்சாரீ (ரளி) அவர்கள் மிகப் பெரும் பேறு பெற்ற ஸஹாபி. நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் வந்தபின் இந்த ஸஹாபியின் இல்லத்தில்தான் பல மாதங்கள் விருந்தினராகத் தங்கியிருந்தார்கள். நபி பெருமானார் (ஸல்) அவர்கள் எப்போது அவர்கள் இல்லம் சென்றாலும் மிகுந்த மகிழ்ச்சியுடனும், அன்புடனும் உபசரிப்பார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் வருகையை எதிர்பார்த்து வீட்டில் பால் வைத்திருப்பது வழக்கம். அன்றைய தினம் சற்று நேரமாகி

விட்டபடியால் இனி பெருமானார் (ஸல்) அவர்கள் வரமாட்டார்கள் எனக் கருதி பாலை குழந்தைகளுக்கு கொடுத்து விட்டார்கள். எதிர்பாராமல் பெருமானார் (ஸல்) அவர்கள் வந்த சமயம் ஹள்ரத் அபூ அய்யூபில் அன்சாரீ (ரளி) அவர்கள் தமது ஈத்த மரத் தோப்பிற்குச் சென்றிருந்தார்கள். வீட்டிலிருந்த துணைவியார், பெருமானார் (ஸல்) அவர்களை வரவேற்று அமரச் செய்தார்கள்.

அபூ அய்யூப் எங்கே? என வினவும் சப்தம் கேட்டதும் அண்மையில் தோட்டத்திலிருந்த அபூ அய்யூப் (ரளி) விழுந்தடித்து ஓடி வந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் தங்களின் வருகையைப் பற்றி விவரிக்கவே தமது தோப்பில் சென்று ஈத்தம் பழக் குலைகளைப் பறித்துக் கொணர்ந்து கொடுத்து விட்டு இதனை சாப்பிட்டுக் கொண்டிருங்கள். விரைவில் உணவு தயாரித்துக் கொண்டு வருகிறேன் எனக் கூறிச் சென்றார்கள். ஓர் ஆட்டை அறுத்து பாதி இறைச்சியை ஆணமாகவும், பாதி இறைச்சியை பொறித்தும் கொண்டு வந்து கொடுத்தார்கள்.

அண்ணல் நபி (ஸல்)அவர்களுக்கு தமதருமை மகளாரின் நினைவு வந்தது. அவரும் பல நாள் பசியுடன் இருக்கிறார். பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு ரொட்டியில் சிறிது இறைச்சியை எடுத்து வைத்து "இதனை பாத்திமாவுக்கு கொடுத்தனுப்புங்கள்; பாவம் அவரும் பல நாள் பசித்திருக்கிறார். உண்ண ஆகாரம் ஏதும் கிடைக்கவில்லை" என்றார்கள்.

பின்னர் பெருமானார் (ஸல்) அவர்கள் தங்களுடைய ஸஹாபாக் களுடன் அமர்ந்து உணவருந்தினார்கள். உணவு விரிப்பில் பல வகை உணவுகள் இருந்தன. அந்த உணவுகளைக் கண்ட பெருமானார் (ஸல்) அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் மல்கியது. கியாமத்து நாளன்று இவ்வுலகில் அடியார்களுக்கு கிடைத்திருக்கிற (நிஃமத்துகள்) பாக்கியங்கள் குறித்து விசாரணை நடைபெறும் என இறைவன் அருளியிருக்கிறான் அவற்றில் இதுவும் சேரும் என்றார்கள். (ஹிதாயத்துஸ்ஸஹாபா)

## நடுநிலைமையே மேலானது

"நிச்சயமாக இந்த மார்க்கம் எளிதானது. இம்மார்க்கத்தை எவரும் (குமக்கு) சிரமமானதாக ஆக்கினால், அவரை அது மிகைத்து விடும். எனவே, நடுநிலைமையே மேற்கொள்ளுங்கள். இயன்றவற்றைச் செய்யுங்கள்; நற்செய்தியையே சொல்லுங்கள்; காலையிலும் மாலை யிலும் இரவில் சிறிது நேரமும் (அல்லாஹ்விடம்) உதவி தேடுங்கள்" என்று இறைத்தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூ ஹுரைரா (ரளி) அவர்கள். (நூல் : புகாரி)

தொடர் : 2

# நறுமணம் கமழும் நபிகள் கோமான் (ஸல்) அவர்கள்

"தமிழ் மாமணி" அல்ஹாஜ் டாக்டர்
பீ.ஹாமிது அப்துல் ஹை, எம்.பி.பி.எஸ்.,டி.ஸி.ஹெச்.,

## தாயிஃப் பயணம்

நபித்துவத்தின் 10வது ஆண்டு நபி (ஸல்) அவர்கள் தாயிஃப் நகர் சென்றனர். பத்து நாட்கள் தங்கி, தலைவர்களை சந்தித்து இஸ்லாமிய அழைப்பு விடுத்தனர். ஆனால் இஸ்லாத்தை எவரும் ஏற்கவில்லை. அத்துடன்நபி(ஸல்) அவர்களை ஊரை விட்டு வெளியேறுமாறு கூறினர். எனவே, ஊரை விட்டு வெளியே செல்ல முயன்றபோது, வம்பர்களும், அடிமைகளும் அவர்களை ஏசினர். கற்களை எறிந்து புனித உடலைக் காயப்படுத்தி இரத்தம் வழியச் செய்தனர்.

கவலை மீக்குற்ற நபி (ஸல்) அவர்கள் இறைவனிடம் இறைஞ்சினர் :

"அல்லாஹ்வே! எனது ஆற்றல் குறைவையும், எனது திறமைக் குறைவையும், மனிதர்களிடம் நான் மதிப்பின்றி இருப்பதையும் உன்னிடமே முறையிடுகிறேன். கருணையாளர்களிலெல்லாம் மிகப் பெரிய கருணையாளனே! நீ தான் எளியோர்களைக் காப்பவன். நீ தான் என்னைக் காப்பவன். நீ என்னை யாரிடம் ஒப்படைக்கப் போகிறாய்? என்னைக் கண்டு முகம் கடுகடுக்கும் அந்நியனிடமா? அல்லது என்னுடைய காரியத்தை நீ உரிமையாக்கிக் கொடுத்திடும் பகைவனிடமா? உனக்கு என் மீது கோபம் இல்லையானால் (இந்த கஷ்டங்களையெல்லாம்) நான் பொருட்படுத்தவே மாட்டேன். எனினும் நீ வழங்கும் சுகத்தையே நான் எதிர்பார்க்கிறேன். அதுவே எனக்கு மிக விசாலமானது. உனது திரு முகத்தின் ஒளியினால் இருள்கள் அனைத்தும் பிரகாசம் அடைந்தன. இம்மை, மறுமையின் காரணங்கள் சீர் பெற்றன. அத்தகைய உனது திருமுகத்தின் ஒளியின் பொருட்டால், உனது கோபம் என் மீது இறங்குவதிலிருந்தும் அல்லது உனது அதிருப்தி என் மீது இறங்குவதிலிருந்தும் நான் பாதுகாவல் கோருகிறேன். அல்லாஹ்வே! நீயே பொருத்தத்திற்குரியவன். நீ பொருந்திக் கொள்ளும் வரை உன் கோபத்திலிருந்து பாதுகாப்புத் தேடுகிறேன்.

அல்லாஹ்வே! பாவத்திலிருந்து தப்பிப்பதும், நன்மை செய்ய ஆற்றல்பெறுவதும் உனது அருள் இல்லாமல் முடியாது."

வானவர் கோன் ஹள்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களை அழைத்துக் கூறினர். "நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் உங்களது கூட்டத்தாரிடம் பேசியதையும், அவர்கள் உங்களுக்குக் கூறிய பதிலையும் கேட்டுக் கொண்டான். இம்மக்கள் விஷயத்தில் நீங்கள் விரும்பியதை மலக்குல் ஜிபாலுக்கு ஏவ வேண்டும் என்பதற்காக அவரை உங்களிடம் அனுப்பியுள்ளான் என்று கூறினர்." மலக்குல் ஜிபால் (மலைகளின் பொறுப்பாளர்) நபி(ஸல்) அவர்களை அழைத்து, ஸலாம் கூறி, "முஹம்மதே! ஜிப்ரயீல் கூறியவாறே, அல்லாஹ் என்னை உங்களிடம் அனுப்பியுள்ளான். நீங்கள் என்ன விரும்புகிறீர்கள்? நீங்கள் விரும்பினால் இவர்களை இரண்டு மலைகளையும் கொண்டு நசுக்கி விடுகிறேன்" என்றுகூறினர். அதற்குகாருண்ய நபி (ஸல்) அவர்கள் "அதை நான் ஒருக்காலும் விரும்ப மாட்டேன். மாறாக, அவர்களிலிருந்து அல்லாஹ்வை மட்டும் வணங்கி, அவனுக்கு இணை வைக்காதவர்களை உருவாக்குவான் என்று நான் ஆதரவு வைக்கிறேன்" என்று கூறினர்.

## கொலைத்திட்டம்

நபி (ஸல்) அவர்களை கொலை செய்யத் திட்டமிட்டனர் குறைஷியர்கள். பதினொரு மூத்தத் தலைவர்களைத் தேர்வு செய்தனர்.

பொதுவாக, நபி (ஸல்) அவர்கள் இஷா தொழுதபின் முன்னிரவில் தூங்கி, இரவின் நடுநிசிக்குப் பின் எழுந்து, சங்கைமிகு பள்ளிக்குச் சென்று இரவுத் தொழுகைகளைத் தொழுவார்கள்.

அன்றிரவு ஹள்ரத் அலீ (ரளி) அவர்களைத் தனது விரிப்பில் படுத்து, தங்களது யமன் நாட்டு பச்சை நிறப் போர்வையைப் போர்த்திக் கொள்ளுமாறு கட்டளையிட்டனர். எந்த ஆபத்தும் ஏற்படாது என்றும் மாவீரர் அலீ (ரளி) அவர்களிடம் கூறினர்.

## இரவின் அமைதி :

மக்கள் உறங்கி விட்டனர். கொலைகாரர்கள், இரகசியமாக நபி (ஸல்) அவர்களின் வீட்டிற்கு வந்து, அண்ணலாரின் வருகையை எதிர்பார்த்து, வாசலில் நின்று கொண்டனர். "முஹம்மது தூங்குகிறார். அவர் எழுந்து பள்ளிக்குச் செல்லும் போது அவர் மீது பாய்ந்து திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம்" என்று எண்ணியிருந்தனர்.

நபி (ஸல்) அவர்கள், வீட்டிலிருந்து வெளியே வந்து,

ISO 9001-2008 CERTIFIED COMPANY

பக்க விளைவுகள் கிடையாது

# ஜிங்கா கோல்டு

**4 கேப்சூல்ஸ் ரூ.600/- மட்டுமே**

அப்போலோ, மெட்பிளஸ் மற்றும்
அனைத்து மருந்து கடைகளிலும் கிடைக்கும்

**Customer Care - 9962664444**

www.jingagold.com info@jingagold.com

# ஆக்ஸ்போர்டு இங்கிலீஷ் ஸ்கூல் (CBSE)

**OXFORD ENGLISH SCHOOL (CBSE)**

**சிதம்பரம் - 608001.** கடலூர் மாவட்டம்.

**KG to XII Grade**

**NEET, JEE, CA,CPT வகுப்புகள் நடத்தப்படும்.**

★ ஹாஸ்டல் வசதி உண்டு.

- முஸ்லிம் மாணவர்களுக்கு தனியாக அரபி பாடம், தொழும் முறை, இஸ்லாமிய மார்க்க வழிமுறை பயிற்றுவிக்கப்படும்.

அல்ஹாஜ் **Dr.முஹம்மது இல்யாஸ், M.B.A.,M.Sc.,Ph.D.**
Founder & Chairman.

**தொடர்புக்கு :** Email : **oxfordescdm@gmail.com**
Tel : **+91-7373030412, 414, 421.**
WhatsApp : **+91-9566247805** https://oxfordenglishschool.info

கூட்டத்தைப்பிளந்து கொண்டு, தரையிலிருந்து ஒரு பிடி மண்ணையெடுத்து கொலை காரர்கள் தலைமீது தூவி விட்டுச் சென்றனர்.

செல்லும்போது யாஸீன் அத்தியாயம் (36) 9வது திரு வசனத்தை ஓதிக் கொண்டு சென்றனர்.

**"அவர்களுக்கு முன்புறம் ஒருசுவரும்,பின்புறம் ஒருசுவரு மாக ஆக்கி நாம் அவர்களை மூடிவிட்டோம். ஆதலால் அவர்கள் எதனையும் பார்க்க முடியாது"**

- அல்குர்ஆன் (36 : 9)

ஆகவே, எதிரிகள் நபி (ஸல்) அவர்களைப் பார்க்க முடியாதவாறு அல்லாஹ் செய்துவிட்டான்.

## இறைச் செய்தி இறங்கியது :

**"நபியே! உங்களைச் சிறைப் படுத்தவோ அல்லது உங்களை கொலை செய்யவோ அல்லது உங்களை [ஊரை விட்டு] அப் புறப்படுத்தவோ நிராகரிப்பவர் கள் சூழ்ச்சி செய்து கொண்டி ருந்த [நேரத்]தை நினைத்துப் பாருங்கள். அவர்களும் சூழ்ச்சி செய்து கொண்டிருந்தனர். [அவர்களுக்கெதிராக] அல்லாஹ்வும் சூழ்ச்சி செய்து கொண்டிருந்தான். ஆனால், சூழ்ச்சி செய்பவர்களிலெல்லாம் அல்லாஹ்வே மிக மேலானவன்"**

- அல்குர்ஆன் (8 : 30)

## ஹிஜ்ரத் பயணம்

நபித்துவத்தின் 14 ஆம் ஆண்டு ஸஃபர் 27 (கி.பி.622 செப்டம்பர் 12 அல்லது 13) நபி (ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் கட்டளைப்படி உற்ற நண்பர் ஹள்ரத் அபூபக்ர் (ரளி) அவர்கள் உடன் வர, வரலாற்றுச் சிறப்பு மிக்க ஹிஜ்ரத் பயணத்தைத் தொடங்கினர்.

கொலைத்திட்டத்தில் படுதோல்வியடைந்த குறைஷிக் காஃபிர்கள் நபி (ஸல்) அவர் களை மும்முரமாகத் தேட முயற்சிப்பார்கள். மதீனா செல் லும் பாதையைக் கண்காணிப் பார்கள் என்பதால் எதிர்த் திசை யில் யமன் நாட்டை நோக்கிச் செல்லும் பாதையில் நபி (ஸல்) அவர்கள் பயணத் தைத் தொடங்கினர்.

5 மைல் தூரம் கடந்தபின் அங்குள்ள உயர்ந்த மலையின் 'தவ்ர்' குகையை அடைந்து வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று இரவுகள் அதில் தங்கியிருந்தனர்.

எதிரிகள் தேடி அலைந்து, குகைவாசலை அடைந்தபோது, அருமைத் தோழர் அபூபக்ர் (ரளி) அவர்கள் பெரிதும் அச்சமுற்றனர்.

இந்நிலையில், அண்ணல் நபி (ஸல்) அவர்கள் "லாதஹ் ஸன் இன்னல்லாஹ மஅனா" "நீங்கள் கவலைப்படாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ்

நம்முடன் இருக்கின்றான்" என்று கூறினர்.

## திருமறை கூறுகிறது

"[மலைக்] குகையில் இருந்த இருவரில் ஒருவராக அவர் இருந்த [போது எதிரிகள் வந்து சூழ்ந்து கொண்ட] சமயத்தில் தன்னுடன் [குகையில்] இருந்த தோழ(ராகிய அபூபக்)ரை நோக்கி "நீங்கள் கவலைப்படாதீர்கள்! நிச்சயமாக அல்லாஹ் நம்முடன் இருக்கின்றான்" என்று கூறியபோதும் அல்லாஹ் அவருக்குத் தன்னுடைய நிம்மதியை அளித்தான்."

- அல்குர்ஆன் (9 : 40)

## ஒரு வேண்டுகோள்

நபி (ஸல்) அவர்கள் பயணத்தைத் தொடங்கினர்.

நபி (ஸல்) அவர்களைப் பிடித்துக் கொடுப்பவருக்கு தக்க சன்மானம் உண்டு என்று குறைஷித் தலைவர்கள் அறிவித்திருந்தனர்.

சுராக்கா இப்னு மாலிக் என்பவர், நபி (ஸல்) அவர்களைத் தேடி தமது குதிரையில் ஏறி பயணித்து, அண்ணல் நபி (ஸல்) அவர்களை நெருங்கி விட்டார். அப்போது குதிரை தடுமாறவே சுராக்கா குதிரையிலிருந்து கீழே விழுந்து விட்டார். பின்பு எழுந்து தமது அம்புக் கூட்டிலிருந்து ஓர் அம்பை எடுத்து குறிபார்த்தார். அப்போது நபி (ஸல்) அவர்களுக்குத் தீங்கு செய்ய வேண்டாம் என்று அம்பு காட்டியது. அதிருப்தியுற்ற சுராக்கா மீண்டும் குதிரையிலேறி பயணித்தார். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஓதும் சப்தம் கேட்கின்ற அளவில் நெருங்கியபோது, குதிரையின் முன்னங்கால்கள் முழங்கால் வரை தரையில் புதைந்து கொள்ளவே, சுராக்கா கீழே விழுந்தார். எழுந்து, அம்புக் குறி பார்த்தபோது சுராக்கா விரும்பாத அம்பே வந்தது.

ஆகவே, தமக்குப் பாதுகாப்பு வழங்குமாறு கூவி அழைத்தார். நபி (ஸல்) அவர்கள் நின்றுவிட்டார்கள்.

நபி (ஸல்) அவர்களிடம், உங்களை பிடித்துக் கொடுக்க வேண்டும் என்ற வெறியில் குறைஷியர் உள்ளனர் என்று சுராக்கா கூறினார். நூறு ஒட்டகங்கள் பரிசாக வழங்கப்படும் என்றார். மேலும், மக்காவின் நிலவரங்களையும் எடுத்துச் சொன்னார்.

சுராக்கா, தன்னிடமிருந்த உணவுப் பொருட்களை எடுத்து வைத்தார். நபி (ஸல்) அவர்கள் பணிவுடன் ஏற்கமறுத்துவிட்டனர்.

இந்த சந்திப்பை யாரிடமும் கூறாதீர் என்று நபி (ஸல்) அவர்கள் வேண்டிக் கொண்டனர். சுராக்கா அதை ஒப்புக் கொண்டார்.

அப்போது சுராக்கா ஒரு வேண்டுகோளை முன் வைத்தார்.

நபி (ஸல்) அவர்கள் பின்னாட்களில் புகழ்பெற்று, ஆட்சி அதிகாரங்களைக்

கைப்பற்ற நேர்ந்தால், தன்னை எந்தவிதத்திலும் பழிவாங்க மாட்டார்கள் என்ற உறுதிப் பத்திரத்தை வழங்குமாறு வேண்டினார்.

## இரகசியப் பயணம்

இக்கட்டான தருணம் என்ற போதிலும் காருண்ய நபி (ஸல்) அவர்கள் அதை வழங்கினர். இறை வசனங்கள் (வஹீ) இறங்கும்போது, அவற்றை எழுதிக் கொள்வதற்கு எழுது கோல், மை, அட்டை ஆகியன இருந்தன.

உடன் வந்த ஆமிரிப்னு புஹைறாவிடம் எழுதி வழங்குமாறு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டனர். அவர் உறுதிப்பத்திரம் எழுதிக் கொடுத்தார்.

பொன்மனம் கொண்ட பூமான் நபி (ஸல்) அவர்கள், சுரக்காவின் வேண்டுகோளை மறுக்கவில்லை. "ஒரு நாள் குஸ்ரோசின் அரசு ஆபரணங்களை அணியும் பாக்கியம் உனக்குக் கிடைக்கும்" என்று ஆசீர்வதிக்கவும் செய்தனர்.

இதைக் கேட்டு வியப்பு மேலிட்ட சுரக்கா, "எந்த குஸ்ரோஸ்? பாரசீகப் பேரரசன் குஸ்ரோஸ் பின் ஹர்மிட்சா?" என்று கேட்க, நபி (ஸல்) அவர்கள் "ஆம்" என்றனர்.

சுரக்கா மகிழ்ச்சியுற்று நெகிழ்ந்து போனார். திரும்பும் வழியில் அண்ணல் நபி (ஸல்) அவர்களைத் தேடி வந்த சிலரை, திசைத் திருப்பி மக்கா செல்ல வைத்தார் சுரக்கா.

காலையில் நபி (ஸல்) அவர்களை ஒழிக்க வந்த சுரக்கா, மாலையில் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் பாதுகாவலராக மாறிவிட்டார்.

ஹள்ரத் உமர் (ரளி) அவர்களின் ஆட்சியின்போது, பாரஸீகம் வெற்றி கொள்ளப் பட்டு, குஸ்ரோஸின் தங்கக் காப்புகள் மதீனா கொண்டு வரப்பட்டு, ஹள்ரத் சுரக்கா (ரளி) அவர்களின் கைகளில் பொருத்தப்பட்டன.

## மஸ்ஜிதுன் நபவி – நபிப் பள்ளி

மதீனா வந்தடைந்தபின், நபி (ஸல்) அவர்களின் முதல் பணி, இறையில்லம் அமைப்பதாகும்.

நபி (ஸல்) அவர்களின் கஸ்வா ஒட்டகம் முதலாவதாக மண்டியிட்ட இடத்தில்தான் பள்ளிவாசல் கட்டப்பட்டது.

அந்த நிலம் பனூ நஜ்ஜார் கோத்திரத்தைச் சார்ந்த இரண்டு அனாதைகளுக்குச் சொந்தமானது. அவர்களிடமிருந்து விலைக்கு வாங்கி, பள்ளி எழுப்பப்பட்டது. இவர்களின் பெயர் ஸஹல், சுஹைல் என்பதாகும். இடத்தின் விலை 10 திர்ஹம்.

கட்டடப் பணியில் நபி (ஸல்) அவர்களும் ஈடுபட்டனர்.

அல்மஸ்ஜித் அந்நபவி பள்ளியின் நீளம் 150 அடி, அகலம் 150 அடி, கற்கள், மண், பேரீத்த மரங்கள் மற்றும் அவற்றின் கீற்றுகள் கொண்டு அமைக்கப்பட்டது. மண் தரை மணல்விரிப்பாக ஆக்கப்பட்டது.

இப்புனிதப் பள்ளி பன்முகம் கொண்டு வரலாறு படைத்தது.

தொழுமிடம், செயலகம், கல்விக்கூடம், ஆலோசனை மையம், நட்பு மையம், நீதி மன்றம், இராணுவப் பயிற்சிக் கூடம், ஏழைகளின் தங்கும் விடுதி ஆகியன செயல்பட்டன.

பள்ளிக்கட்டி முடித்தபின் அழகும், எளிமையும், நேர்த்தியும் மிக்கதாகக் கண்ட அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மிக்க மகிழ்வுற்றனர்.

இது காலத்தின் வேகத்தைத் தாங்குமா?" என்று நபித்தோழர் வினவினர். நபி (ஸல்) அவர்கள் விடை தந்தனர்.

"ஒரு காலத்தில் இதன் உள்ளே நுழைவதற்கு இலட்சக் கணக்கான மக்கள் காத்து தவம் கிடப்பர்."

இந்நிலையை இன்று நாம் காண்கிறோம்.

## சகோதரத்துவ ஒப்பந்தம்

நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட அடுத்த செயல் உலகறியாத, வரலாறு காணாத ஓர் அற்புதப் பணி - சகோதரத்துவ ஒப்பந்தம்.

ஹிஜ்ரத் மேற்கொண்டு, உடைமைகள் அனைத்தையும் மக்காவில் விட்டு விட்டு, உடுத்திய உடையுடன் மதீனா வந்த நபித்தோழர்களையும், பேருதவி புரிந்த மதீனாத் தோழர்களையும் சகோதரர்களாக ஆக்கும்பணி. முந்தியவர்கள் - முஹாஜிர்கள், பிந்தியவர்கள் - அன்ஸாரிகள் என்று அழைக்கப்படுகின்றனர்.

45 முஹாஜிர்களும், 45 அன்சாரிகளும் ஒருவரோடு, மற்றவர் சகோதரத்துவம் மேற்கொள்வர். நட்பு கொண்டு, அன்பு காட்டுவார்கள்.

அன்சாரித் தோழர்கள், தங்களது சொத்துக்களில் பாதியை வழங்கினர். இரண்டு மனைவிகளிருந்தால் ஒருவரை முஜாஹிர் தோழர் விரும்புபவரை மணவிலக்குச் செய்து, சகோதரருக்கு வழங்க முன் வந்தனர். ஏற்கனவே, இஸ்லாமியச் சகோதரத்துவம் இருசாரா ரிடையே இருந்த போதிலும் தனிப்பட்ட நெருக்கம் ஏற்பட வேண்டும் என்று கருதியே சகோதர ஒப்பந்தம் நிலை நாட்டப்பட்டது.

மேலும், அறியாமைக் கால இனவெறியை ஒழிக்கவும், நிறம், குலம், இனம் ஆகிய பாகுபாடுகள் முற்றிலும் நீக்கப்படவும் இஸ்லாமிய அடிப்படையில் மட்டுமே நட்போ, பகையோ ஏற்பட வேண்டும் என்ற

நோக்கத்தில்தான் சகோதரத்துவ ஒப்பந்தம் செயலாக்கப்பட்டது.

இரு சகோதரர்களிடையே விட்டுக் கொடுத்தல், அன்பு, ஆறுதல் காட்டுதல், பிறருக்கு நன்மை புரிதல் போன்ற உணர்வுகள் பின்னிப் பிணைந்திருந்தன.

இஸ்லாமிய நட்பு ஒப்பந்தம் ஏற்படுத்தி, அறியாமைக்கால மனக்கசப்புகளையும், குரோதங் களையும் நபி (ஸல்) அவர்கள் அகற்றினர். இன வெறி உணர்வு களை அழித்தார்கள். இஸ்லாமிய ஒற்றுமையையும், ஒருமைப் பாட்டையும் நிறுவினர்.

யூதர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் மூலம், முஸ்லிம் அல்லாதவர்களுடன் தங்களது சமூகத் தொடர்புகளை முறைப்படுத்தினர். சுய நோக்கங்களும், இன வெறியும் நிரம்பியிருந்த காலக்கட்டத்தில், எங்கும் காணப்படாத மன்னித் தல், விட்டுக் கொடுத்தல், பெருந்தன்மையுடன் நடத்தல் ஆகியவற்றை அடிப்படை யாகக் கொண்ட சட்டங்களை அமைத்தனர்.

யூதர்களின் செல்வத்திலும், மதத்திலும் முழு சுதந்திரம் அளித் தனர். அவர்களை மதீனாவை விட்டு விரட்டவோ, சொத்து பறி முதல் செய்யவோ நாடவில்லை. செயல்படுத்தவுமில்லை.

உடன்படிக்கையும், ஒப்பந்தமும் உறுதிபெற்ற தால் மதீனாவிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் அமைதியும், ஒற்றுமையும் நிலவின. மதீனா தலைநகரா னது. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நாட்டின் தலை வராகத் திகழ்ந்தனர்.

## பத்ர் போர்

ஹிஜ்ரி 2, பத்ர் போர், குறைஷிப்படையில் வந்த இரண்டு அடிமைகள், பத்ரின் தண்ணீர் உள்ள இடத்திற்கு வந்து தண்ணீர் எடுத்துக் கொண்டிருந்தனர். இவர்களைப் பிடித்து, நபி (ஸல்) அவர் களிடம், தோழர்கள் கொண்டு வந்தனர்.

குறைஷிகளைப் பற்றி கூறுமாறு நபி (ஸல்) அவர்கள் அடிமைகளிடம் கூறினர் :

“நீங்கள் பார்க்கும் பெரிய மேட்டிற்குப்பின் குறைஷிகள் இருக்கின்றனர்” என்றனர்.

“எத்தனை பேர்?” என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கேட்டனர்.

“மிக அதிகமாக இருக் கின்றனர்” என்று அடிமைகள் கூறினர்.

“அவர்களிடம் எப்படிப் பட்ட தயாரிப்புகள் உள்ளன?” என்று நபி (ஸல்) அவர்கள் கேட்டனர்.

“தெரியாது” என்றே பதில் வந்தது.

# தீராத நாள்பட்ட நோய்கள்
# நிரந்தரமாக குணப்படுத்தப்படும்

- ★ வண்டுகடி
- ★ அரிப்பு
- ★ சோரியாஸிஸ்
- ★ ஆறாத புண்
- ★ அலர்ஜி

- ★ மலத்துவாரத்தில் கட்டி
- ★ இரத்தப்போக்கு
- ★ வலி, எரிச்சல், காந்தல்
- ★ அரிப்பு நமைச்சல்
- ★ மலச்சிக்கல்
- ★ அடிக்கடி மலப்போக்கு

- ★ மூட்டு வலி
- ★ வீக்கம், தேய்வு
- ★ இடுப்பு வலி
- ★ தோள்பட்டை வலி
- ★ குதிங்கால் வலி

- ★ ஆண்மை குறைபாடுகள்
- ★ துரித ஸ்கலிதம்
- ★ தாம்பத்தியத்தில் இயலாமை
- ★ தூக்கமின்மை, கனவுகள்
- ★ நரம்புத்தளர்ச்சி, நடுக்கம்
- ★ தூக்கத்தில் ஸ்கலிதம்

தலைமை நிலைய முகவரி :

எங்கு வைத்தியம் செய்தும் குணமாகாத இலட்சக்கணக்கான நோயாளிகளை 36 வருடங்களாக நிரந்தரமாக குணப்படுத்திய உலகின் ஒரே சாதனையாளரின் சிகிச்சையை பெற அணுகவும்

யூனானி மூலிகை டாக்டர்.

ஹக்கீமுல் மில்லத் **M. முகமது மீரான்** MD (AM)

அரசு அங்கீகாரம் பெற்ற யூனானி மூலிகை மருத்துவர்

## ரஹ்மான் யூனானி மெடிக்கல் சென்டர்

செந்துறை ரோடு, நத்தம் – 624 401. திண்டுக்கல் மாவட்டம்.

தினசரி வேலை நேரம் : காலை 11 To 1, மாலை 6 To 8

முன்பதிவிற்கு : **97919 05074**

குறிப்பு : Dhanwanthiri Media Youtube சேனலை பார்க்கவும்

பத்தியம் இல்லை | பக்க விளைவுகள் இல்லை

குறிப்பு : மாதந்தோறும் ரூ. 1 இலட்சம் முதல் 3 இலட்சம் வரை வருமான வாய்ப்பு தரும் எங்களது ஆயுர்வேதா மெடிக்கல் கிளைகள் உங்களது பகுதியில் அமைக்க விருப்பமுள்ளவர்கள் அணுகவும்.

ஆகவே, நபி (ஸல்) அவர்கள் "ஒவ்வொரு நாளும் ஒரு நேர உணவுக்கு எத்தனை ஒட்டகங்கள் அறுக்கிறார்கள்?" என்று வினவினார்.

"ஒரு நாள் ஒன்பது, மறு நாள் பத்து ஒட்டகங்கள் அறுக்கிறார்கள்" என்று பதில் கூறினார்.

அப்போது நபி (ஸல்) அவர்கள், தொள்ளாயிரத்திலிருந்து ஆயிரம் நபர்கள் வரை இருக்கலாம் என்று கணித்தனர். ஆம்! எதிரிப்படையினர் மொத்தம் 950 பேர்.

நபி (ஸல்) அவர்கள் தங்களது படையை ஒழுங்குபடுத்தினர். போர் நடைபெறவுள்ள மைதானத்தில் நடந்து சென்று, இன்ஷா அல்லாஹ் நாளை இன்னார் கொல்லப்படும் இடம் இது. இன்ஷா அல்லாஹ்! நாளை இன்னார் கொல்லப்படும் இடம் இது என்று தங்களது விரலால் காட்டினர். மறுநாள் போரில், குறைஷித் தலைவர்கள் அவ்விதமே கொல்லப்பட்டுக் கிடந்தனர்.

இவர்களின் சடலங்கள் நாற்றம் அடித்ததால் கிணற்றில் வீசியெறியும்படி நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டனர்.

போரில் வெற்றி பெற்றால் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அவ்விடத்தில் மூன்று நாட்கள் தங்குவார்கள்.

பத்ர் போர் முடிந்து, மூன்றாவது நாள் தங்களது தோழர்களுடன் எதிரிகளின் சடலங்கள் போடப்பட்ட கிணற்றின் அருகே நின்று, சடலங்கள் ஒவ்வொன்றின் பெயர்களை அவர்களது தந்தையின் பெயர்களுடன் அழைத்து "இன்னாரின் மகனே! முன்பே அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும் கட்டுப்பட்டிருந்தால் இப்போது நீங்கள் மகிழ்ச்சியாக இருந்திருக்கலாமே! நிச்சயமாக எங்களது இறைவன் எங்களுக்கு வாக்களித்ததை நாங்கள் உண்மையாகப் பெற்றோம். உங்களது இறைவன் உங்களுக்கு வாக்களித்ததை உண்மையாக நீங்கள் பெற்றீர்களா?" என்றனர்.

அப்போது ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதரே! உயிரற்ற சடலங்களிடம் என்ன பேசுகிறீர்கள்?" என்று கேட்டனர்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள் "முஹம்மதின் உயிர் எவன் கைவசம் இருக்கிறதோ அவன் மீது ஆணையாக! நான் கூறுவதை அவர்களை விட நீங்கள் அதிகம் கேட்கும் திறனுள்ளவர்களாக இல்லை" என்றனர்.

"அவர்களை விட நீங்கள் கேட்கும்திறன் அதிகமுடையவர்களாக இல்லை. ஆனால், அவர்களால் பதில் தர முடியாது" என்றனர்.

(ஸஹீஹுல் புகாரி,
ஸஹீஹு முஸ்லிம்)

(தொடரும்)

# சொர்க்கத்திற்கு 'நான்' போனால் போகலாம்!

மவ்லவி **பி.எம்.கலீலுர் ரஹ்மான்** மன்பயீ எம்.ஏ., எம்.ஃபில்.,

ஒரு பள்ளிவாசலில் பேசிக் கொண்டிருந்த இருவர் "சொர்க்கத்திற்கு நான் போவேன்" என்று ஒருவர் கூற, மற்றவர் "இல்லை இல்லை, நான்தான் போவேன்" என்று கூறினார்.

இவ்வாறு இருவரும் விவாதம் செய்து கொண்டிருக்கையில், அவ்வழியாக தண்ணீர் எடுத்துச் சென்ற ஒரு பெண்மணி இவர்கள் இருவரும் கேட்கும் வண்ணம் "சொர்க்கத்திற்கு நான்போனால் போகலாம்" என்று சொல்லிக் கொண்டு சென்றார்.

அப்பெண்ணின் பேச்சைக் கேட்ட இருவரும் மிக்க வெட்கமும், வியப்பும் அடைந்து, அப்பெண்ணை பின் தொடர்ந்து சென்றனர். அப்பெண் தன் வீட்டிற்குள் சென்று விட்டார். வந்திருந்த இருவரும் உரத்த குரலில் ஸலாம் சொன்னார்கள். "அம்மா! நாங்கள் இருவரும் பல வருடங்களாக தனிமையில் தியானம் செய்தும் எங்களில் யார் சொர்க்கத்திற்குச் செல்வோமென்று தெரியாமல் இருக்கின்றோம். அப்படியிருக்க, 'தாங்கள் போகலாம்' என்று கூறியது எப்படி?" என்று கேட்டனர்.

அப்போது அப்பெண் கூறினார் : "சொர்க்கத்திற்கு நான் போனால் போகலாம்" என்று நான் கூறிய வார்த்தையில், 'நான்' என்பதற்குப் பொருள் 'தான்' என்பதல்ல. அதாவது "நான் வேண்டுமானால் போகலாம்" என்று கூறவில்லை. மாறாக, "நான் போனால்" என்ற சொற்றொடருக்கு "நான் என்கிற அகங்காரம் ஒழிந்தால்" என்பதே பொருளாகும்."

'நான்' என்ற அகங்காரம் இல்லாத மனிதனே இல்லை. நான் என்ற அகங்காரத்தை அழித்தால் அல்லாஹ்வை அடையவும், அவன் அளிக்கும் இன்பங்களை பெறவும் முடியும்" என்று கூறினாள்.

## நான், நான் தான்

உலகில் மனிதன் கடைபிடிக்க வேண்டிய செயல்கள் எவ்வளவோ இருக்கின்றன. அவற்றில் முதன்மையானது 'நான்' என்ற எண்ணத்தை விடுவதாகும்.

அகந்தை, செருக்கு என்ற சொற்கள் ஆணவத்தைக் குறிக்

கும். ஆணவம் கொண்டவர்களை தலைக்கனம் பிடித்தவர்கள் என்றும் கூறுவார்கள். அதாவது 'நான்' என்ற எண்ணம் அதிகமாக உள்ளவர்கள்" என்றும் கூறுவார்கள். ஆணவ எண்ணம் கொண்டவர்கள் தங்கள் ஆணவப் போக்கை அகற்றிக் கொள்ளவில்லையென்றால் பல இன்னல்களை அடைய நேரிடும். 'நான் தான்' என்ற எண்ணத்தை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும்.

'நான்', 'எனது' என்பது அறியாமை...

'நாம்', 'நம்முடையது' என்பது அறிவுடைமை.

தனக்கு எல்லாம் தெரியும் என்பதில் எந்த அகங்காரமும் இல்லை.

தனக்குத்தான் எல்லாம் தெரியும் என்பதில்தான் அகங்காரம் இருக்கிறது.

எப்போது ஒருவன் தனக்குத் தான் எல்லாம் தெரியும் என்று சொல்கிறானோ அப்பொழுது அவன் தன்னைச்சார்ந்தவர்களை யெல்லாம் முட்டாளாகவே பார்க்கின்றான்.

இவ்வாறு தன்னை உயர்த்திக்கொண்டு பிறரை தாழ்வாக நினைப்பதுதான் அகங்காரம்.

## 'நான்' என்பதன் பொருள் என்ன?

ஓர் அரசன், சூஃபி ஒருவரிடம் ஞானம் அடைய விரும்பி, சந்திக்கச் சென்று, அவர் குடிசை கதவை தட்டினார். ஞானி, "யாரது?" எனக் கேட்டார். அரசன் "நான் இந்த தேசத்து அரசன் வந்திருக்கிறேன்" என்றான். அதற்கு ஞானி, "நான் செத்த பிறகு வா" என்றார். இப்படியே அரசன் பல முறை வந்தபோதும் அவர் அதே பதிலை கூறினார். ஒரு நாள் அரசன் புரிந்து கொண்டு கதவைத் தட்டினார். ஞானி "யார்?" எனக் கேட்க, "தங்கள் சீடனாக வந்திருக்கிறேன்" எனக் கூறினான் மன்னன். அப்போதுதான் ஞானி, "உள்ளே வா" என்றார்

நான் என்ற அகந்தை கர்வம் எப்போது ஒருவனிடத்தில் இல்லாமல் போகிறதோ அப்போதே அவன் ஞானியாகிறான்.

அல்லாஹ் படைத்த உயிர் என்றும் அழியாதது. 'நான் அழியாமல் எப்போதும் இருக்க வேண்டும்' என்ற ஆசை நம் மனதில் இருப்பதற்கு உண்மையில் 'நான் அழியாதவன்' என்று அறியாமல் இருப்பதுதான். மரணமடைவது வெறும் உடல் மட்டுமே. இறைவன் படைத்த உயிர் மரணத்திற்கு அப்பாற்பட்டது. இந்த உண்மையை மனிதனுக்கு உணர்த்தவே, ஒவ்வொருவரும் வாழும் போதே அல்லாஹ்வை அறிய முயற்சிக்க வேண்டும்.

'நான்' என்ற எண்ணத்தின் உண்மையான பொருள் அல்லாஹ். இதை அறியாமல்,

உடல், மனம், உடல்-மனம் சேர்ந்த கலவை என்று வெவ் வேறு பொருள்களை வெவ் வேறு சமயங்களில் 'நான்' என்ற சொல்லால் குறிப்பிடுகிறோம்.

இந்த அறியாமையால் ஏற் படும் விளைவுகளை இப்போது பார்க்கலாம். 'நான் வருகிறேன்' என்ற நமது உடம்பை 'நான்' என்ற பொருளில் சில சமயம் குறிப்பிடுகிறோம்.

சில சமயம் 'என் உடம்பு சரியில்லை' என உடம்பை நமது உடைமையாகக் குறிப்பிடு கிறோம். அதாவது 'நான்' ஆக குறிப்பிடுகிறோம்.

சில சமயம் 'என்னுடைய மனது சரியில்லை' என்று கூறும்போது, 'நான் வேறு, என் மனது வேறு' என்று முடிவு செய்து கொண்டு, 'நான்' என்பது மனதைக் குறிப்பதாகவே நினைத்துச் சொல்கிறோம்.

இதனால் மனதின் துன்பங் களை நமது துன்பம் என்று கருதி வருத்தப்படுகிறோம்.

ஹள்ரத் இப்னு ஹஜர் அஸ்கலானி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு நண்பருடன் அவர் தோட்டத்துப் பாதையில் சென்று கொண்டிருந்தேன். அப்போது, வழியில் தென் பட்ட நிலத்தில் பயிர்கள் நன்றாக விளைந்திருந்தன.

அது, அவருடைய நிலம் என்பதால், 'பயிர்கள் நன்றாக செழித்து வளர்ந்திருக்கிறதே...' என்றேன்.

உடனே அவர், 'நாசமாகப் போக, மூணு மாசத்துக்கு முன் னால தான் இந்த நிலத்த வித் தேன்; இப்ப இது விளைஞ்சா என்ன? விளையாட்டி என்ன...?' என்றார் கடுப்புடன்.

அந்த நிலத்தை அவர் நல்ல விலைக்குத் தான் விற்று இருக்கிறார்; இருந்தாலும், நிலத்து மேல் இருந்த பற்று, கோபமாக வெளிப்பட்டு விட்டது.

ஏனென்றால் எப்பொழுதும் போல் இந்த நிலம் இன்றும் நன்கு விளைந்திருக்கிறது. ஆனால் அன்று இந்த நிலம் அவருடையதாக இருந்தது. இன்று இவருடையதாக இல்லை என்கிற காரணத்தினாலே இவர் சலிப்படைகிறார்.

சொத்து நம்முடையதாக இல்லாததுபோல், 'நான்', 'எனது' என்கிற எண்ணம் நம்மில் உருவாகாமல் இருந்தால், நிம்மதி நிரந்தரமாக இருக்கும்.

சிறுபிராயம் முதல் முதுமை வரை ஒவ்வொருவருக்கும் 'நான்' என்ற எண்ணம் தொடர்ந்து இருந்து வருகிறது.

முதுமையில் இருக்கும் ஒருவரைப் பார்த்து 'நீ கொஞ்சம் கூட மாறவில்லை, அப்படியேதான் இருக்கிறாய்' என்று சொன்னதும் அவர் சந்தோஷம் அடைகிறார். அவர், 'நான்' என்ற சொல்லுக்கு உடலைப் பொரு ளாகக்

கொண்டு அது மாறாமல் இளமையுடன் இருப்பதாக விளங்கிக் கொண்டதே காரணம்.

அகங்காரம் இல்லாத ஒரு வயதுக் குழந்தை எப்பொழுதும் ஆனந்தமாய் இருக்கிறது. மேலும் எப்பொழுதெல்லாம் தன்னை மறந்து நாம் இருக்கிறோமோ அப்பொழுதெல்லாம் நாம் இன்பமாயிருக்கிறோம்.

என்னால் மட்டும் தான் இதை செய்ய முடியும் என்று எண்ணினால் 'தன் முனைப்பு' வந்துவிட்டது என்று பொருள். தன் முனைப்பு என்பதை ஆங்கிலத்தில் ஈகோ (Ego) என்று கூறுவார்கள். அதனை தலைக்கனம் என்றும் கூறலாம்.

ஆன்மிக வாழ்வில் "நான்" என்ற எண்ணமே இறைவனை காண்பதற்கு எப்பொழுதும் தடையாக இருக்கிறது. இந்த எண்ணத் திரையை நீக்க வேண்டுமானால் அண்டத்தைப் பற்றியும், நம்மைப் பற்றியும் ஆய்ந்தறியும்போது இறைவனை யும், நம்மையும் உணர முடியும்.

இதனால் நான் என்ற அகங்காரத்தை நம்மில் இருந்து அகற்ற முடியும்.

பொதுவாக "நான் அகந்தையை விட்டுவிட்டேன்" என்றும், "என்னிடம் அகந்தை சிறிதளவும் இல்லை" என்று சொன்னாலும் அதிலும் அகந்தை வெளிப்படவே செய்கிறது.

ஒரு முறை, இரண்டு வேடர்கள் சில ஆமைகளை பிடிப்பதற்கு திட்டம் போட்டுக் கொண்டிருந்தனர். அதிகமாகப் பேசும் ஓர் ஆமையின் காதில் இது விழுந்தது. இந்த சதித் திட்டத்தை எப்படியாவது முறியடிப்பதற்காக, இந்த ஆமை இரண்டு கொக்குகளின் உதவியை நாடியது. அந்த இரண்டு கொக்குகளும், ஒரு நீளமான குச்சியின் இரண்டு ஓரங்களை தங்களின் அலகில் பிடித்துக் கொண்டு பறப்பது தான் திட்டம்.

கொக்குகள் பறக்கும் போது, இந்த ஆமை தன் வாயால் குச்சியை கவ்விப் பிடித்துக் கொண்டு வெகுதூரம் சென்று விடலாம் என்று நினைத்தது.

இந்தத் திட்டத்திற்கு கொக்குகள் ஒப்புக் கொண்டு, ஆமையிடம் குச்சியை கெட்டியாக பிடிக்குமாறு கூறின. ஆமையும் அவ்வாறே செய்தது. இவ்வாறு பறந்து கொண்டிருக்கும் பறவைகளைக் கண்ட மனிதர்கள் இந்த அதிசயத்தைப் பார்த்து வியப்படைந்தனர்.

அவர்கள், "சாமர்த்தியமான பறவைகள். ஆமையை தூக்கிச் செல்ல பிரமாதமான வழி" என்று சொல்லி வியப்படைந்தனர்.

தன்னைப் பற்றியே பெருமையாக நினைத்த ஆமை "இது என் திட்டம் தான்" என்று கூற, மேலிருந்து கீழே விழுந்தது.

வாய் மணக்க
தாம்பூலம் சிறக்க...!!

NIZAM BETELNUT

# நிஜாம் பாக்கு

உரிமையாளர் :

**S.A.சபியுல்லா & கோ**
தபால் பெட்டி எண் : 14,
புதுக்கோட்டை - 622 003. தமிழ்நாடு.

ஆமையிடம் 'நான்' என்ற அகம்பாவம் இருந்ததால் அது கீழே விழுந்து அழிந்தது.

தேனில் மூழ்கி, இறக்கும் வண்டைப் போல், 'தான்' என்கிற மனம் கொண்டவன் தன்னுடைய அழிவைத் தானே தேடிக் கொள்கிறான்.

மேலும், ஆசை வயப்பட்ட மனமானது, பற்றுதலில் சிக்குண்டு, ஏமாற்றத்தை எதிர் கொள்ளும் போது, வன்மத்தை யும், வெறுப்பையும் பிரதிபலிக்கிறது.

ஒரு நாட்டின் அரசன் "நான் தான் பெரியவன்" என்ற அகங்காரத்தோடு இருப்பவன். ஒரு நாள் அந்த அரசன் வேட்டையாட காட்டுக்குச் சென்றான். அப்போது அவன் தியானம் செய்து கொண்டிருந்த ஒரு துறவியைப் பார்த்தான். துறவி கண்ணை மூடி தியானம் செய்யும்போது அவரிடம் சென்று "நான் பல நாடுகளை வென்று என் நாட்டோடு இணைத்திருக்கிறேன். நான் வென்று வந்த செல்வத்தால் என் கஜானா நிரம்பி வழிகிறது. மேலும் அந்தப்புரம் முழுவதும் நான் கவர்ந்து வந்த அழகிகள் இருக்கின்றனர். இருப்பினும் நான் சந்தோஷமாக இல்லை. எனக்கு எப்போது சந்தோஷம் கிடைக்கும்?" என்று கேட்டான்.

தியானம் செய்து கொண்டி ருந்த துறவி, தியானம் கலைந்த தால் சற்று கோபமாக, "நான் செத்தால் உனக்கு சந்தோஷம் கிடைக்கும்" என்று சொல்லி விட்டு, மறுபடியும் தியானத்தில் ஆழ்ந்தார். அதைக் கேட்ட அரசன் "நான் எவ்வளவு பெரிய அரசன். என்னையே அவமானப் படுத்துகிறாயா?" என்று சொல்லி, துறவியை கொல்ல, தன் இடுப்பில் இருந்த கத்தியை உருவினான்.

அப்போது அந்த துறவி "அட மூடனே! நான் என்றால் என்னை சொல்லவில்லை. "நான்" என்ற அகங்காரம் செத் தால் தான் உனக்கு சந்தோஷம் கிடைக்கும்" என்று சொல்லி விளக்கினார்.

இதிலிருந்து என்ன தெரிகிற தென்றால், "தேங்காயின் கடுமையான ஓடு உடைந்தால் எப்படி சுவையான இளநீர் கிடைக்கிறதோ, அதேபோல் நம்மிடம் இருக்கும் அகங்காரம் எனப்படும் ஈகோ உடைந்தால் சந்தோஷம் வெளிப்படும்" என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆணவம், திமிர், செருக்கு, அகந்தை என்றெல்லாம் பேசப் படும் இந்த தீய குணங்களை மனிதர்களாக வாழ நினைக்கும் ஒவ்வொருவரும் தனக்குள் சற்றும் வளர விடாமல் ஆரம்பத்திலேயே அகற்ற வேண்டிய ஒன்று.

ஹள்ரத் ஹஸனுல் பஸரீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் :

"(ஒருவன் லட்சாதிபதியாக இருக்கிறான். அவனால் பற்றற்ற வாழ்வு வாழ முடியுமா? என இமாம் அஹ்மத் பின் ஹம்பலிடம் கேட்கப்பட்டபோது, "ஆம்முடியும்; என்னவென்றால் அத்துணை கோடிகளும் அழியும் போது அவன் துக்கப்படாவிட்டால், அல்லது அத்துணை கோடிகளும் பல மடங்காக அதிகரிக்கும்போது, நான்என்ற ஆணவம் கொள்ளாமல் இருந்தால் அவன் பற்றற்ற வாழ்வு வாழும் ஒரு துறவியே"என பதிலளித்தார்கள்.

'பற்றற்ற வாழ்வு என்பது மறுமையில் பயனளிக்காதவற்றை உலகில் துறந்து வாழ்வதாகும்.'

## 'நான்' என்ற அகங்காரம் தந்திரமானது

ஒருவனுக்கு மார்க்கத்தின் மீது பற்றுதலும், பக்தியும் ஏற்பட்டதாலேயே நான்என்ற அகங்காரம் போய்விட்டது என்று பொருள் அல்ல. காரணம் நான் என்ற அகங்காரம் மிகவும் தந்திரமானது. வஞ்சனையானது. காத்திருந்து காலம் பார்த்து நுழையும் கலைகள் அறிந்தது. "அகங்காரம் அழிதல்" அவ்வளவு எளிய விஷயமல்ல.

அணுகுண்டுகள் வீசப்பட்ட பிரதேசங்களில் கூட 'கரப்பான் பூச்சிகள் மட்டும் அழியவில்லை' என்கிறார்கள். அது எதையோ ஆதாரமாய்ப் பிடித்துக்கொண்டு உயிர் வாழ்ந்து கொண்டே இருக்கிறது.

அதேபோன்று அகங்காரமும் எது கிடைக்கிறதோ அதையே ஆதாரமாகக் கொண்டு உயிர் பிழைத்துக் கொள்கிறது.

சிலர் எது கிடைக்கிறதோ அதைக் கொண்டு தம் வயிற்றை நிரப்பிக் கொண்டு விடுவார்கள். அதுபோல செல்வம் கிடைத்தால் "நான் எவ்வளவு செல்வம் சேர்த்திருக்கிறேன் பார்" என்கிறது அகங்காரம்.

ஞானத்தின் பாதையில் போனாலும் "நான் எவ்வளவு ஞானம் குவித்திருக்கிறேன் பார்" என்று கொக்கரிக்கிறது.

தியாகமோ, தியானமோ செய்தாலும் கூட "நான் எவ்வளவு பெரிய தியாகி பார்; நான் தியானிப்பது போல தியானிக்க யாரால் முடியும்?" என்று கேள்வி எழுப்பி எப்போதும் அகங்காரம் எப்படி எப்படியோ புதுப்புது வடிவங்களில் பிழைத்து வருகிறது.

ஹள்ரத் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களின் (ஆசிரமம்) காங்காவில் அதிகாலை நேரத்தில் ஹள்ரத் ஜீலானி (ரஹ்) அவர்களின் முன்பு நின்றபடியே ஒரு மாணவர் கேட்டார். "யா ஷைஹ்! 'மனிதன் மகானாக உயர்வது எப்படி?' என்று இன்று பாடம் நடத்துவதாக கூறியிருந்தீர்களே! இன்றைய

பாடத்தைக் கேட்க எனக்கு மிகவும் ஆர்வமாக இருக்கிறது. எனவே விடியற்காலையிலேயே விழித்து, என் கடமைகளையெல்லாம் முடித்து விட்டேன். மற்ற மூன்று சகமாணவர்கள் இன்னும் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த காங்காவில் நான்கு சீடர்களில் நன்கு படிப்பவா என்று அவா பெயர் எடுத்திருந்தார். அதனால் ஷைகுவின் அன்பையும் அவர் பெற்றிருந்தார். இதன் காரணமாக ஆணவமும், அடுத்தவர்களை ஒரு பொருட்டாக மதிக்காத போக்கும் அவரிடம் அதிகரித்து வந்தன.

'காலை ஆறு மணிக்குத் தானே அனைவரையும் பாடம் கேட்க வரச் சொல்லியிருந்தேன். நீயும் சிறிது நேரம் கூடுதலாக தூங்கியிருக்கலாமே!' என்றார் ஹள்ரத் ஜீலானி (ரஹ்) அவர்கள்.

மாணவருக்குத்தூக்கி வாரிப் போட்டது. 'உதயத்திலேயே உறக்கம் கலைந்து அன்றாட கடமைகளைத் துவக்குவது நல்லது தானே' என்றார் மாணவர்.

'நான் அதைக் குறிப்பிடவில்லை. நீயும் தூங்கிக் கொண்டிருந்தால் அவர்களைப் பற்றி அதிகாலையிலேயே குறைகூற மாட்டாய் அல்லவா?'

ஷைகுவின் பதில் அவரைக் கூனி குறுக வைத்தது. ஒவ்வொரு வருக்கும் தன்னைப் பற்றிய சுய மதிப்பீடு தேவையான ஒன்றுதான். ஆனால் அதுவே அடுத்தவர்களை மதிக்காத போக்காக, நான் என்ற ஆணவமாக மாறிவிட அனுமதித்து விடக் கூடாது. 'நான்', 'எனது' என்னும் தீய குணத்தை ஆரம்பத்திலேயே இனம் கண்டு அதை வேரும், வேரடி மண்ணுமாகக் களைந்தால் தான் மனிதன் மகானாக உயர முடியும்.

நான் என்ற அகங்காரத்தை முற்றிலுமாக இழக்காதவரைக்கும் முழுமையாக இறைவனை அடைய வாய்ப்பில்லை.

நான் என்ற எண்ணம் நம்மில் எப்படி இருக்கிறது என்று உணர்வது கஷ்டம். எங்கு பணிவு, துணிவு, கண்ணீர், அடக்கம், தொண்டுள்ளம், இரக்கம் இவையெல்லாம் குடியிருக்கின்றனவோ, எங்கு கோபம் ஆத்திரம், பகை இவை இல்லையோ அங்கு நான் என்ற எண்ணம் இருப்பதில்லை என்று ஓரளவு நம்பலாம்.

உங்களில் உள்ள 'நான்' என்பதை அழித்து நீங்கள் வாழ முற்படுங்கள்.

**நிறைவுபெற்ற உங்களின் சந்தாக்களை புதுப்பித்து விட்டீர்களா?**

# மிஸ்வாக்

மவ்லானா முஃப்தீ அஹ்மதுல்லாஹ் காஷிஃபீ காஸிமீ

## பெண்களின் மிஸ்வாக்

மிஸ்வாக் செய்வதின் சிறப்பு விஷயத்தில் ஆண், பெண் இருவரும் சமம்.

★ ஹள்ரத் மைமூனா (ரளி) அவர்களின் மிஸ்வாக் எப்போதும் பாத்திரத்தில் வைக்கப்பட்டிருக்கும். தொழுகை அல்லது ஏதேனும் வேலையில் ஈடுபடாமலிருந்தால் மிஸ்வாக் செய்து கொள்வார்கள். அறிவிப்பாளர் : ஹள்ரத் யஜீத் (ரளி) அவர்கள் (நூல் : மஜ்மஉஜ்ஜவாயித் 2572)

★ நபி (ஸல்) அவர்கள் மிஸ்வாக் செய்தபின் கழுவுவதற்காக என்னிடத்தில் கொடுப்பார்கள். நான் அதன் மூலம் முதலில் மிஸ்வாக் செய்துவிட்டு பின்பு கழுவி நபி (ஸல்) அவர்களிடம் கொடுப்பேன் என ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் கூறுகிறார்கள். (நூல் : அபூதாவூது 52, பாகம் - 1, பக்கம் - 6; சுனனே குப்ரா, பாகம் - 1; பக்கம் - 39)

ஆனால், பெண்களுக்கு மிஸ்வாக் செய்வது கட்டாயமில்லை. மாறாக மிஸ்வாக் செய்வதின் நிய்யத்தோடு தேவதாரு (Deodar) போன்ற மரத்தின் பசையை மெல்வது மிஸ்வாக் செய்வது போன்றதாகும். அதனால், மிஸ்வாக் செய்வதின் நன்மையும் கிடைக்கும். பற்களும் உறுதியடையும். (நூல் : மராகில் ஃபலாஹ், பக்கம் - 38, தஹ்தாவீ, பஹ்ருர் ராயிக் பாகம் - 1; பக்கம் - 21)

## மிஸ்வாக் சம்பந்தமான சில ஒழுக்கங்கள்

1. மிஸ்வாக் குச்சியை கழுவிய பின் மிஸ்வாக் செய்ய வேண்டும்.
2. முதலில் வலதுபுற மேற்பற்களையும் பின்பு அதன் கீழ் பற்களையும் பின்பு இடது புற மேற்பற்களையும் பிறகு கீழ்பற்களையும் அதன் பின் நடுவில் உள்ள மற்ற பற்களையும் மிஸ்வாக் செய்ய வேண்டும். அல்லது வலது இடது புற மேற்பற்களையும், பின்பு இருபுறத்தின் கீழ் பற்களையும் மிஸ்வாக் செய்யலாம். (நூல் : பஹ்ருர் ராயிக் பாகம் - 1; பக்கம் - 21)

   உள்வாயின் மேல் முரசிலும் மிஸ்வாக் செய்ய வேண்டும். (நூல் : ஷர்ஹுஸ்ஸுன்னா)
3. நபி (ஸல்) அவர்கள் பற்களின் அகல வாக்கில் மிஸ்வாக் செய்வார்கள். (நூல் : அபூதாவூது 8)

நாக்கின் மீது நீளவாக்கில் மிஸ்வாக் செய்ய வேண்டும். பற்களில் நீள வாக்கிலும் நபி (ஸல்) அவர்கள் மிஸ்வாக் செய்திருக்கிறார்கள்.

4. மூன்று தடவை மிஸ்வாக் செய்ய வேண்டும். ஒவ்வொரு தடவையும் புதிய தண்ணீரால் கழுவ வேண்டும்.
(நூல் : தஃலீமுல் இஸ்லாம், பாகம் - 3, பக்கம் - 27)

5. மிஸ்வாக் செய்தபின் கழுவி சுத்தமான இடத்தில் வைக்க வேண்டும். (நூல் : தஹ்தாவீ, பக்கம் - 68)

6. படுத்துக் கொண்டு மிஸ்வாக் செய்ய வேண்டாம்.

7. மிஸ்வாக்கை முழு உள்ளங்கையைக் கொண்டு பிடிக்க வேண்டாம். (நூல் : தஹ்தாவீ, பக்கம் - 68)

8. மிஸ்வாக்கை தரை அல்லது மேஜையில் படுக்க வைக்காமல் நிற்க வைக்க வேண்டும்.
(நூல் : ஃகாயதுல் அவ்தார், பாகம் - 1, பக்கம் - 53)

9. முடிந்தவரை நாவின் இறுதிவரை மிஸ்வாக்கை கொண்டு செல்ல வேண்டும். (நூல் : ஹுஜ்ஜதுல்லாஹில் பாலிஃகா)

10. மிஸ்வாக் விரலை விட பருமனாக இருக்கக்கூடாது.
(நூல் : தஹ்தாவீ, பக்கம் - 67)
சிறுவிரலின் அளவு இருப்பது சிறந்தது. (நூல்: உம்ததுல்காரி)

11. விரல் மூலம் மிஸ்வாக் செய்தால் வாயின் வலது பக்கம் கட்டை விரல் மூலம் இடது பக்கம் கலிமா விரல் மூலம் மேலும் கீழுமாக மிஸ்வாக் செய்ய வேண்டும். (நூல் : தஹ்தாவீ, பக்கம் - 68)

12. கணவன், மனைவி ஒருவர் மற்றவரின் மிஸ்வாக்கைப் பயன்படுத்தலாம். (நூல்: அபூதாவூது பாகம் - 1, பக்கம் - 6)

13. பற்களின் உள்பகுதி, வெளிப்பகுதி, மேல், கீழ்தாடை மற்றும் சுற்றியுள்ள இடத்தையும் மிஸ்வாக் மூலம் சுத்தம் செய்ய வேண்டும்.
(நூல் : தஹ்தாவீ, பக்கம் - 69; அபூதாவூது 49; பக்கம் - 7)

14. மிஸ்வாக்கை எப்பொழுதும் தன்னுடன் வைத்திருக்க வேண்டும். நபி (ஸல்) அவர்கள் மிஸ்வாக்கை எழுத்தாளர்கள் காதுகளுக்கு மேல் பேணாவை வைக்குமிடத்தில் வைத்திருப்பார்கள்.
அறிவிப்பாளர் : ஹள்ரத் ஜாபிர் (ரளி) அவர்கள்

ஹள்ரத் ஜைத் இப்னு காலித் (ரளி) அவர்களும் இவ்வாறே செய்வார்கள். ஸஹாபாக்களின் வழக்கமும் இதுவாகவே இருந்தது.
அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்
(நூல் : அபூதாவூது 47 பாகம் - 1, பக்கம் - 8)

(தொடரும்)

# கோமாளியாக்கப்பட்ட கோமான் முஹம்மது பின் துக்ளக்

வரலாற்றுப் பேரறிஞர் "தாரீகுல் மில்லத்"
செ.திவான் M.A.,M.Phil.,

**டிமிட்ரி**

ரஷ்யாவில் மங்கோலியர்களை முதன் முதலில் தைரியமாகஎதிர்த்து வெற்றி கண்டவன் டிமிட்ரி (Dimtri). ரஷ்ய சரித்திரத்தில் மாஸ்கோ (Moscow) என்ற பெயர் கி.பி.1147இல் தான் வருகிறது.

**விளாடிமீர்மோனாமாக்**

விளாடிமீர்மோனாமாக் சுத்த வீரன்; யாரஸ்லாவின் பேரன்; இங்கிலாந்து அரச குமாரியை மணந்தவன். சீவ் நகரத்தை 1113 - 1125 வரை ஆட்சி புரிந்தவன். Book of Instructions எனும் நூலின் ஆசிரியன். தனது ராஜ்ஜியத்தை தன் ஏழு பிள்ளைகளுக்கும் பிரித்துக் கொடுத்தான். ஜார்ஜ் என்ற பிள்ளைக்கு சூஸ்டால் என்ற பிரதேசம் கிடைத்தது.

**மாஸ்க்வி**

மாஸ்க்வி (Moskva) நதிக் கரையில் தனது சுகவாசநிமித்தம் ஒரு வீட்டை ஜார்ஜ் நிர்மாணித்தார். அந்த இடம் இப்போதைய க்ரெம்ளின் அரண்மனை (Kremlin) இருக்கிற இடம். இந்த இடம் மெல்ல வளர்ந்தது. சூஸ்டால் அரச பரம்பரையில் அலெக்ஸாண்டர் நெவ்ஸ்க்கி (Alexander Nevski 1236 - 1263) தனதுகடைசிமகன்டேனியலுக்கு (Daniel) மாஸ்கோவையும், அதைச்சுற்றியுள்ள500சதுரமைல் பிரதேசத்தையும் கொடுத்தார். கி.பி.1263இல் மாஸ்கோவின் வளர்பிறை வாழ்வு தொடங்கியது என்பார் வெ. சாமிநாதசர்மா.

**நெவா ஆற்றின் கரையில்**

கரேலியப் பகுதியில் நெவா ஆற்றின் முகத்துவாரத்தில் கட்டப்பட்டது செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் நகரம். பால்டிக் கடலின் கிழக்குக் கரையிலுள்ள அந்நகரம், மேற்கு நாடுகளை நோக்கிய ஜன்னல் (Window of the West) எனப்பட்டது. மேற்கு நாடுகளோடு தொடர்பு கொள்ள வேண்டும் என்ற ஆசையில் அந்நகரம் அமைந்திருந்தது.

**கி.பி. 1703**

கி.பி. 1703இல் வேட்டையாட வந்தபோது மகா பீட்டர் தங்கிட போர் வீரர்களால் மூன்று அறைகளைக் கொண்ட மர வீடு அமைக்கப்பட்டது. அந்தவீட்டில் ஐந்து ஆண்டுகள் தங்கிட, மகா பீட்டர், பீட்டர்ஸ்பர்க் நகரத்தை நிர்மாணித்தார். சதுப்பு நிலமாக

வெள்ளத்தால் பாதிக்கப்படக் கூடியதாக நாட்டின் ஓர் ஓரத்தில் அந்நகர் அமைந்தது. பீட்டர்ஸ்பர்க் தலைநகரானது.

**3.3.1918**

கி.பி. 3-3-1918இல் ரஷ்யப் பிரதிநிதிகளும், ஜெர்மனியப் பிரதிநிதிகளும் சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்கள். 16-3-1918இல் நான்காவது சோவியத் காங்கிரஸில் அது ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

**ப்ரெஸ்ட் - லிடோவ்ஸ்க் ஒப்பந்தம்**

ப்ரெஸ்ட் லிடோவ்ஸ்க் நகரத்தில் இந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்று முடிந்ததால் அதற்கு ப்ரெஸ்ட் - லிடோவ்ஸ்க் ஒப்பந்தம் என்று பெயர் (Treaty of Brest Litovsk)

போலந்து, லிதுவேனியா, கூர்லாந்து, லிவோனியா, எஸ்தோனியா, பெஸ்ஸரேபியா, பைலோரஷ்யா ஆகிய பகுதிகளை ரஷ்யா இழந்தது.

பின்லாந்து, உக்ரைன் (Ukraine) பகுதிகளின் விடுதலையை ரஷ்யா அங்கீகரித்தது. பாதும், எரிவன், கார்ஸ் பகுதிகளை ரஷ்யா துருக்கிக்கு கொடுத்தது. ரஷ்யா உக்ரைன் உட்பட பலவற்றை இழந்தது.

**13 இலட்சம் சதுர மைல்**

ரஷ்யா மொத்தத்தில் 13 இலட்சம் சதுர மைல் நிலப்பரப்பை இழந்தது. 6.5 கோடி மக்களைக் கொண்ட அப்பகுதிகள் ஜெர்மனியைப் போல இருமடங்கானவை.

ரஷ்யா தொழிற்சாலைகளில் 37 சதவீதத்தையும், நிலக்கரி வயல்களில் 75 சதவீதத்தையும், இரும்புச் சுரங்கங்களில் 73 சதவீதத்தையும் அப்போது இழந்தது.

**பெட்ரோ கிராடு**

செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் என்றிருந்த பெயர் பெட்ரோ கிராடு (Petrograd) என மாற்றப்பட்டிருந்தது.

**12.3.1918**

உலகின் முதலாவது தொழிலாளர் விவசாயிகள் அரசின் தலைமையிடம் பெட்ரோ கிராட்டிலிருந்து மாஸ்கோவிற்கு மாறியது. ரஷ்யாவின் தலைநகரமாக மாஸ்கோ 12.3.1918இல் மாறியது.

ரஷ்யாவின் தலைநகரம் மாஸ்கோ பீட்டர்ஸ்பர்க் மறுபடியும் மாஸ்கோ என்று மாற்றப்பட்டது வரலாறாகும்.

**காதல் காவியங்கள்**

அந்தோணியும், கிளியோபட்ராவும் ஷேக்ஸ்பியரின் நாடகத்தில் வரும் புகழ்பெற்ற காதலர்கள் ஆவர். அந்தோணியும், கிளியோபட்ராவும் சந்தித்த இடம் டாரஸ். புனித பால் பிறந்தது இங்குதான். ஹோமரின் இலியட், ஒடிஸி, வெர்ஜிலின் இலியட் காவியங்களில் வரும் கனவுக்கன்னி ஹெலன் வாழ்ந்த இடம் ட்ராய்.

## வரலாற்றின் தந்தை

வரலாற்றின் தந்தை ஹெரோடட்டஸ்பிறந்தது ஹலி கார்னாசஸ். புனித பிலிப் உயிர்த் தியாகம் செய்த இடம் ஹைறபோலிஸ்.

## கிறிஸ்துமஸ் தாத்தா

கிறிஸ்துமஸ் தாத்தா சான்டாக்ளாஸ் என்ற புனித நிக்கோலஸ்பிறந்த இடம்டெம்ரா.

## மவ்லானா ரூமி

பாரசீக ஷேக்ஸ்பியர் என்று அழைக்கப்படும் சூஃபி ஞானி மவ்லானா ரூமி காலமானது கென்யா. இந்த இடங்களெல் லாம் துருக்கியில்தான் உள்ளன.

## துருக்கியர்கள்

அனடோலியா (Anatolia) ஆசியா மைனர் (Asia Minor) என்றழைக்கப்பட்ட நாடு துருக்கி. எஃகுத் தொப்பி போன்றதொரு வடிவுடைய மலை மீது மங்கோலியாவிலிருந்து வந்தவர்கள் குடியேறினர். "எஃகுத் தொப்பி" என்ற சொல்லுக்கு "தூர்க்" என்றுபெயர். இவர்கள் தங்களை துருக்கியர்கள் என்றழைத்துக் கொண்டனர்.

## கான்ஸ்டான்டி நோபிள்

துருக்கியின் தலைநகரம் கான்ஸ்டான்டி நோபிளாக இருந்தது.

## அங்கோரா

அஞ்சா நெஞ்சர் முஸ்தபா கமால் 16.3.1920இல் இஸ்தான்புலிலிருந்து தப்பி வந்து, தேசியத் தலைவர்கள் அடங்கிய பார்லிமெண்ட்டை அங்கோரா நகரில்ஏற்படுத்தினார்.

## லாஸேஸில் சமாதான மாநாடு

21.11.1922இல் துவங்கிய லாஸேஸன் சமாதான மாநாடு மூன்று மாதங்கள் நடைபெற் றும் பலன் தரவில்லை. 1923 பிப்ரவரியில் முறிந்துபோனது. 9.4.1923இல் மீண்டும் கூடியது. 24.6.1923 வரை நடைபெற்றது. உடன்படிக்கை ஏற்பட்டது. 2.10.1923இல் துருக்கி யிலிருந்த அந்நியப் படைகள் அனைத்தும் அகற்றப்பட்டன.

## 13.10.1923

13.10.1923இல் துருக்கி யின் தலைநகராக அங்காரா பிரகடனப்படுத்தப்பட்டது.

## 29.10.1923

துருக்கிய ஜனநாயக அரசாங்கம் 29.10.1923இல் அங்கோரா (Angora - அங்கிரா) என்னும் நகரைத் தன்னுடைய தலைநகராய் கொண்டது. துருக்கியின் தலைநகர் ஆங்க்ரா. துருக்கியின் மிகப்பெரிய நகர் இஸ்தான்புல். Mustafa Kamal Proclaimed on Oct. 29, 1923 a Turkish Republic.

## தேசிய விடுமுறை

29.10.1923 அன்று அங்கோரா தலைநகராக அறி விக்கப்பட்டது. அந்த அக்டோபர் தினத்தை துருக்கியில் தேசிய

விடுமுறையாகக் கொண்டாடுகிறார்கள்.

**அறுபது இலட்சம் - இஸ்தான்புல்**

மக்கள் தொகையில் பெரியது இஸ்தான்புல் (ஏறத்தாழ 60 இலட்சம்). தலைநகர் அங்காராவில் மக்கள் தொகை (ஏறத்தாழ 40 இலட்சம்); இருபது இலட்சம் மக்கள் தொகைவித்தியாசமுள்ள அங்காரா தான் துருக்கியின் தலைநகரம்.

இஸ்தான்புல்லை மாற்றிவிட்டு அங்காராவை துருக்கியின் தலைநகராக அறிவித்த தீரன் முஸ்தபா கமால் பாட்சா வரலாற்றில் போற்றப்படுகிறார்.

செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கை மாற்றி, மாஸ்கோவை ரஷ்யாவின் தலைநகராக அறிவித்த மாமேதை லெனின் போற்றப்படுகிறார்.

டெல்லியிலிருந்து தேவகிரிக்கு இரண்டாவது தலைநகரை உருவாக்க முயன்ற முஹம்மது பின் துக்ளக் தூற்றப்படுவது சரியா?

**400 சீடர்கள்**

ஹள்ரத் ஷாஹ் நிஜாமுத்தீன் அவ்லியா என்னும் இறைநேசர், தமது டெல்லி சீடர்களில் தலைசிறந்த 400 பேர்களை தேவகிரிக்கு அனுப்பி வைத்தார்கள்.

**ஹள்ரத் ஷைகு புர்ஹானுத்தீன்**

மவ்லானா புர்ஹானுத்தீன் தலைமையில் (Moulana Burhanuddin Gharib) இறைநேசர்கள் தேவகிரிக்குச் சென்றார்கள்.

ஷைகு புர்ஹானுத்தீன் தேவகிரிக்குச் சென்று சிறப்பான கடமையாற்றினார்கள். சில நூல்களை எழுதினார்கள். தௌலதாபாத்திலே வாழ்ந்து அங்கேயே மறைந்தபின் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

**மவ்லானா பக்ருதீன்**

மவ்லானா பக்ருதீன் (Moulana Fakhir-uddin Zaradi) தனது மக்கா (ஹஜ்) யாத்திரையை முடித்துவிட்டு, தௌலதாபாத் சென்றார்கள். அங்கு இறைப்பணிபுரிந்தார்கள்.

(தொடரும்)

## நாய்கள் ஜாக்கிரதை

“நாய் வைத்திருப்பவரின் நற்செயல்களிலிருந்து ஒவ்வொரு நாளும் ஒரு கீராத் அளவிற்கு (அவனது நன்மைகள்) குறைந்து போய்விடும்; விவசாயப் பண்ணையையோ, கால்நடைகளையோ (திருடு போய் விடாமல்) பாதுகாப்பதற்காக வைத்திருக்கும் நாய்களைத் தவிர” என்று இறைத்தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி – 2322)

தொடர் : 4

# ஹஜ் பயண வரலாறு

பேராசிரியர் வி.ஏ.எம்.யாஸீன்,
எம்.ஏ.,பி.எல்.,எம்.பி.ஏ.,எம்.ஃபில்.,

டமாஸ்கஸ் நகரத்திலிருந்து செயின்ட் ஜான் டி ஏக்ர் (அக்கா) எனப்படும் மத்திய தரைக்கடல் துறைமுகத்தில் கப்பலில் ஏறி அவர் கடல் பயணத்தை தொடர்ந்தபோது, சிசிலியில் உள்ள மெசினா ஜலசந்தி என்ற இடத்தில் புயல் காற்றினால் அவருடைய கப்பல் உடைந்து போய்விட்டது. அப்போது இத்தாலி நாட்டைச் சார்ந்த மத்திய தரை கடலில் இருக்கும் சிசிலி என்ற தீவின் மன்னர் இரண்டாம் வில்லியம், இப்னு ஜுபைருக்கு அன்புடன் அடைக்கலம் கொடுத்தார். மன்னர் வில்லியம் அரபு மொழியில் சரளமாக பேசத் தெரிந்தவர். ஆகவே இப்னு ஜுபைருடன் நட்புடன் அளவளாவிக் கொண்டிருந்தார். மன்னர் வில்லியம் இப்னு ஜுபைரை அரசவைக்கு அழைத்துச் சென்று இராஜ பிரதானிகளுக்கு அவரை அறிமுகம் செய்து வைத்தார். மன்னர் வில்லியம் இராஜ மாளிகையில் நான்கு மாதங்கள் தங்கிய பின் இப்னு ஜுபைர் அங்கிருந்து புறப்பட்டு ஏப்ரல் 1185ஆம் ஆண்டு தன்னுடைய நாட்டிற்கு திரும்பி வந்தார்.

1580ஆம் ஆண்டிலிருந்து 1600ஆம் ஆண்டு வரை பீஜப்பூர் நகரை ஆட்சி செய்த அரசி சுல்தானா சாந்த் பீபி போர் வீராங்கனை ராணி என்று அழைக்கப்பட்டார். இவர் பாரசீகம், உருது, அரபு, தெலுங்கு கன்னடம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்று இருந்தார். இவர் தன்னுடைய நாற்பதாவது வயதில் ஹஜ் கடமையை நிறைவேற்றினார்.

1860ஆம் ஆண்டிலிருந்து 1868ஆம் ஆண்டு வரை போபால் நகரை ஆட்சி செய்த நவாப் சிக்கந்தர் பேகம் 1863ஆம் ஆண்டில் தன்னுடைய 46-வது வயதில் ஹஜ் கடமையை நிறைவேற்றினார். இவர் தன்னுடன் 1,500 பெண்களை அழைத்துச் சென்றார். அந்தப் பெண்கள் அனைவரும் ஏழைகள். ஏழைப் பெண்களுக்கும் ஹஜ் கடமையை நிறைவேற்றும் பாக்கியம் கிடைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன்

அவர்களை தன்னுடைய சொந்த செலவில் மக்கா நகருக்கு அழைத்துச் சென்றார்.

1901ஆம் ஆண்டிலிருந்து 1926ஆம் ஆண்டு வரை போபால் நகரை ஆட்சி செய்த நவாப் சுல்தானா கைகுஸ்ரவ் ஜஹான்பேகம் 1903ஆம் ஆண்டில் தன்னுடைய 45-வது வயதில் ஹஜ்கடமையை நிறைவேற்றினார். இவர் தன்னுடன் 300 ஏழைப் பெண்களை அழைத்துச் சென்றார். இவர் முதலில் மதீனா நகருக்குச் சென்று, அங்கிருந்து மக்கா நகர் சென்று ஹஜ் கடமையை நிறைவேற்றி விட்டு 1904ஆம் ஆண்டில் இந்தியா வுக்கு திரும்பினார். 1865ஆம் ஆண்டிலிருந்து 1887ஆம் ஆண்டு வரை ராம்பூர் நகரை ஆட்சி செய்த நவாப் கல்ப் ஏ அலீ கான்பகதூர் தன் னுடைய 40-வது வயதில் ஹஜ் கடமையை நிறைவேற்றினார். இவர் இந்தியவுக்கு திரும்பி வரும் போது ஹள்ரத் அலீ (ரளி) அவர்களின் காலத்தில் தோலில் கையால் எழுதப் பட்ட திருமறை பிரதிகளை தன்னுடன் கொண்டுவந்தார்.

மைசூரை ஆண்ட திப்பு சுல்தான் ஹஜ் கடமையை நிறைவேற்ற விரும்பினார். ஆனால், ஆங்கிலேயர்களுடன் அவர் தொடர்ந்து போர் புரிந்து வந்ததால் அவரால் ஹஜ் பயணத்தை மேற்கொள்ள முடியாதவராகினார்.

லேடி ஈவெலின் கோபால்ட் என்ற பிரிட்டிஷ் பெண்மணி தன்னுடைய சிறிய வயதில் எகிப்து நாட்டின் தலைநகர மான கெய்ரோவில் இருந்த போது அல்ஜீரிய நாட்டு தோழி களுடன் மஸ்ஜிதுகளுக்குச் சென்று வந்து அரபு மொழியை கற்றுக் கொண்டார். இஸ்லாத் தின் மீது பற்று கொண்டார். தன்னுடைய 23ஆம் வயதில் இஸ்லாத்தை தழுவி லேடி ஈவெலின் கோபால்ட் என்ற தன்னுடைய பெயரை ஜைனப் என்று மாற்றிக்கொண்டார். லேடி ஈவெலின் கோபால்ட் (ஜைனப்) தன்னுடைய 66-வது வயதில் ஹஜ் கடமையை நிறைவேற்ற தீர்மானித்துக் கொண்டு அப் போது இலண்டனிலிருந்த சவூதி அரேபியா அமைச்சர் ஹாஃபிஸ் வஹ்பா என்பவரிடம் மக்கா நகருக்குள் பிரவேசிக்க அனுமதி கேட்டார். அமைச்சர் ஹாஃபிஸ் வஹ்பா அன்றைய சவூதி அரேபியாவின் முதல் மன்னர் அப்துல் அஜீஸ் பின் அப்துல் ரஹ்மான் அல் சஊத் என்பவருக்கு கடிதம் எழுதி அனுமதி பெற்றார். 1933ஆம் ஆண்டில் லேடி ஈவெலின் கோபால்ட் (ஜைனப்) ஹஜ் கடமையை நிறைவேற்றினார். தன்னுடைய ஹஜ் பயண அனுபவங்களை எழுதி ஒரு புத்தகமாக வெளியிட்டார். அந்தப் புத்தகத்தின் பிரதி இப்

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் மாபெரும் பேரருளால்... லப்பைக்! அல்லாஹும்ம லப்பைக்!!

# அல்-பஷாரத் ஹஜ் & உம்ரா சர்வீஸ்

LALPET

லால்பேட்டை | சென்னை | இளையாங்குடி

IATA

LALPET OFF : No. 1, Quaid-e-Millath Salai, Opp. to Mubarak Jumma Masjid, Lalpet - 608 303, Cuddalore Dist. Ph : 041 44268114.
CHENNAI OFF: No. 37/77, Krishnan Koil Street, Mannadi, Chennai - 600 001. Ph: 044-66686742, Mob. +91 95669 92919 / 99942 54304.

**99942 54304 | 95669 92919**

## மாதம் தோறும் புனித உம்ரா பயணம் 2024

| எக்கானமி | டீலக்ஸ் | சூப்பர் டீலக்ஸ் | ஹில்டன் | டீலக்ஸ் 30 நாட்கள் |
|---|---|---|---|---|
| ₹. 85,000/- | ₹. 98,000/- | ₹. 1,08,000/- | ₹. 1,35,000/- | ₹. 1,25,000/- |

| மாதம் | புறப்படும் நாள் | கிழமை | திரும்பும் நாள் | கிழமை | நாட்கள் |
|---|---|---|---|---|---|
| ஜூலை | 25-07-2024 | வியாழன் | 08-08-2024 | வியாழன் | 15 நாள் |
| ஜூலை | 25-07-2024 | வியாழன் | 23-08-2024 | வெள்ளி | 30 நாள் |
| ஆகஸ்ட் | 08-08-2024 | வியாழன் | 22-08-2024 | வியாழன் | 15 நாள் |
| ஆகஸ்ட் | 21-08-2024 | புதன் | 04-09-2024 | புதன் | 15 நாள் |
| செப்டம்பர் | 01-09-2024 | ஞாயிறு | 15-09-2024 | ஞாயிறு | 15 நாள் |
| செப்டம்பர் | 12-09-2024 | வியாழன் | 26-09-2024 | வியாழன் | 15 நாள் |
| செப்டம்பர் | 28-09-2024 | சனி | 12-10-2024 | சனி | 15 நாள் |
| அக்டோபர் | 10-10-2024 | வியாழன் | 24-10-2024 | வியாழன் | 15 நாள் |
| அக்டோபர் | 13-10-2024 | ஞாயிறு | 27-10-2024 | ஞாயிறு | 15 நாள் |
| அக்டோபர் | 13-10-2024 | ஞாயிறு | 11-11-2024 | திங்கள் | 30 நாள் |

| மாதம் | புறப்படும் நாள் | கிழமை | திரும்பும் நாள் | கிழமை | நாட்கள் |
|---|---|---|---|---|---|
| அக்டோபர் | 31-10-2024 | வியாழன் | 14-11-2024 | வியாழன் | 15 நாள் |
| நவம்பர் | 10-11-2024 | ஞாயிறு | 24-11-2024 | ஞாயிறு | 15 நாள் |
| நவம்பர் | 16-11-2024 | சனி | 30-11-2024 | சனி | 15 நாள் |
| நவம்பர் | 16-11-2024 | சனி | 15-12-2024 | ஞாயிறு | 30 நாள் |
| டிசம்பர் | 05-12-2024 | வியாழன் | 19-12-2024 | வியாழன் | 15 நாள் |
| டிசம்பர் | 24-12-2024 | செவ்வாய் | 07-01-2025 | செவ்வாய் | 15 நாள் |

உம்ரா விசா, தனிநபர் மற்றும் குரூப் விசா, விசிட்டிங் விசா, துபாய், சிங்கப்பூர், மலேசியா மற்றும் அனைத்து நாடுகளுக்கும் விமான டிக்கெட் எடுத்து தரப்படும். பஸ், ட்ரெயின் டிக்கெட் மற்றும் தூதரக சேவைகள் செய்து தரப்படும்.

விபரங்களுக்கு: உரிமையாளர். அல்ஹாஜ். **O.M. முஹம்மது சுஹைபு** செல்: **9994254304**

போது கிடைக்கவில்லை. இவர் 96-வது வயதில் மரணித்தார். அவருடைய விருப்பப்படி **"அல்லாஹ், வானங்கள் இன்னும் பூமியின் பிரகாசமாக இருக்கிறான்."** என்ற திரு மறை (24: 35) வசனம் அவருடைய மண்ணறையின் தலை கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது.

கான்ஸ்டான்டிநோபிள் என்பது இன்றைய துருக்கியில் உள்ள ஒரு பழமையான நகரமாகும். அது இப்போது இஸ்தான்புல் என்றழைக்கப்படுகிறது. இந்த நகரத்தை உதுமானிய பேரரசை சேர்ந்த இரண்டாம் அப்துல் ஹமீத் என்ற சுல்தான் 1876ஆம் ஆண்டு முதல் 1909ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்து வந்தார்.

இவர் இஸ்தான்புல்லில் இருந்து மக்கா நகருக்கு இரயில் பாதை அமைத்து புகை வண்டிகளை இயக்க முடிவு செய்தார்.

ஒட்டகங்களின் மீது இரண்டு மாதங்கள் பயணம் செய்யும் ஹஜ் பயணிகள் இரயில் பயணத்தில் சிரமங்கள் இல்லாமல் விரைவாக மக்கா நகரை அடைய வேண்டும் என்று விரும்பினார். இந்த முடிவை இஸ்லாமிய உலகம் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டது. ஆனால் ஐரோப்பியர்கள் இந்தத் திட்டம் (project) செயல் படுத்த முடியாத ஒன்று என்று கருதினர். ஏனென்றால் அப்போது உதுமானிய பேரரசுக்கு பல விதமான பொருளாதார சிக்கல்கள் இருந்தன. அரசாங்கத்தில் பணி புரியும் அலுவலர்களுக்கே ஊதியம் கொடுக்க திணறும் சுல்தான் அப்துல் ஹமீத் எவ்வாறு பல கோடிக் கணக்கான பணம் தேவைப்படுகின்ற இந்த இரயில் திட்டத்தை செயல் படுத்துவார் என்று ஐரோப்பியர்கள் கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தனர். இந்த இரயில் திட்டத்தை நிறைவேற்ற இன்றைய பண மதிப்பின்படி 6,000 கோடி ரூபாய் தேவைப்பட்டது. இந்த இக்கட்டான காலக்கட்டத்தில் இஸ்லாமிய உலகம் உதவி செய்திட முன் வந்தது. பல நாடுகளில் வாழும் முஸ்லிம்கள் உதுமானிய தூதரகங்கள் மூலம் பெரும் நன்கொடைகளை வழங்கத் தொடங்கினர். மொராக்கோ, எகிப்து, இந்தியா தென்னாப்பிரிக்கா மற்றும் சூடான் ஆகிய நாடுகளில் வாழ்ந்த தனவந்தர்கள், வணிகர்கள், ஜமீன்தார்கள் மற்றும் சாதாரண தொழில் செய்பவர்களும் நன்கொடைகளை வாரி வாரி வழங்கினர். எகிப்து நாட்டின் மன்னர்கள், ஈரான் நாட்டின் அதிபதி மொசாஃபர் அட்-தின் ஷா கஜர் மற்றும் ஹைதராபாத் நிஜாம் மீர் மஹ்பூப் அலீ கான் ஆகியோர் இந்த நோக்கத்திற்காக பெரும் தொகைகளை நன்கொடைகளாக குவித்தனர். திட்டத்திற்கு தேவைப்

பட்ட தொகையை விட அதிக அளவில் நன்கொடைகள் வந்து குவிந்தன. இஸ்லாமிய உலகத்தின் ஒற்றுமையை கண்டு ஐரோப்பா நாடுகள் வியப்படைந்தன. உதுமானிய பேரரசில் வாழ்ந்த முஸ்லிம் அல்லாதவர்களும் நன்கொடை கொடுக்கத் தவறவில்லை.

இரயில்வே கட்டுமானத்திற்காக சுல்தான் அப்துல் ஹமீது அவர்களின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. ஐரோப்பா மற்றும் அமெரிக்காவிலிருந்து பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. ஆயிரக்கணக்கான வீரர்கள் மற்றும் உள்ளூர் கட்டுமான தொழிலாளர்கள் கட்டுமானத்தில் பணிபுரிந்தனர். அரசாங்க பொறியாளர்கள் மற்றும் தொழில் நுட்ப வல்லுநர்கள் பெரும்பாலான திட்டங்களில் ஈடுபட்டனர். டமாஸ்கஸ் நகரத்தின் வழியாக இஸ்தான்புல்லை மதீனா, மக்கா மற்றும் ஏமனை இணைக்கும் ஹிஜாஸ் ரயில் பாதையின் கட்டுமானம் டமாஸ்கஸில் 1900ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ஆயிரக்கணக்கான பாலங்கள், மதகுகள், ஏரிகள், சுரங்கங்கள், தொழிற்சாலைகள், உற்பத்தி ஆலைகள், கிடங்குகள், சுத்திகரிப்பு நிலையங்கள், தொழிலாளர்களுக்கான தங்குமிடங்கள், மருத்துவமனைகள், தண்ணீர் தொட்டிகள் மற்றும் இரயில் நிலையங்கள் என ஒவ்வொரு நகரத்திலும் கட்டப்பட்டன. எட்டாண்டுகள் கடினமான உழைப்பினால் ஹிஜாஸ் ரயில் தண்டவாள வழித்தடம் 1908ஆம் ஆண்டில் மதீனாவை அடைந்தது. 1,464 கிலோ மீட்டர் நீளமுள்ள இந்த இரயில் திட்டம் இன்றைய பண மதிப்பின்படி 5,200 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டது.

1908ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27ஆம் தேதியன்று இஸ்தான்புல் நகரைச் சேர்ந்த விருந்தினர்களுடன் முதல் இரயில் டமாஸ்கஸிலிருந்து மதீனா நோக்கி புறப்பட்டது. இந்த இரயிலில் தொழுகைக்காக ஒரு தனிப் பெட்டி இணைக்கப்பட்டது. இந்த இரயில் மணிக்கு 40 முதல் 60 கிலோ மீட்டர் வேகத்தில் சென்றது. ஒட்டகங்களில் பயணம் செய்து கொண்டிருந்த அந்தக் காலத்தில் இந்த இரயிலின் வேகம் நினைத்து கூட பார்க்க முடியாததாக இருந்தது. தொழுகைக்காகவும் மற்றும் எரிபொருள் நிரப்புவதற்காகவும் மட்டுமே இரயில் ஆங்காங்கே நிறுத்தப்பட்டது. பயணிகள் பாலைவனத்தில் தொழுதனர்.

மூன்று நாட்கள் பயணம் செய்த பின்னர், ரயில் மதீனா நகருக்கு வந்து சேர்ந்தது. வாரத்தில் மூன்று நாட்கள் இரயில் டமாஸ்கஸிலிருந்து மதீனா நகருக்கு சென்று வந்தது.

(தொடரும்)

துவக்கம் : 1958

நம்பர் 1 மாத இதழ்

# குர்ஆனின் குரல்


நிறுவனர்கள் :

அல்லாமா அ.மு. அப்துல் ஜப்பார் பாகவி ஹஸ்ரத் (ரஹ்)

அல்லாமா "அஸ்அதுல் மில்லத்" அ. முஹம்மது அஷ்ரஃப் அலி மன்பயீ ஹஸ்ரத் (ரஹ்)

பொறுப்பாசிரியர் :

மவ்லானா முஃப்தீ மு.முஹம்மது இஸ்மாயீல்

காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஜலாலாபாதீ ஹஸ்ரத்

**குர்ஆனின் குரல்** தபால் பெட்டி எண் : 45,

4/25, எழில் நகர், மேலமடை, **மதுரை-625020.**

அலுவலக அலைபேசி எண்: **94420 56547**

E.mail : quraaninkural@gmail.com ★ web : www.quraaninkural.com


**ஓராண்டு சந்தா ரூ.300/- ⬟ தனி இதழ் ரூ.25/-**

**விளம்பரம் மற்றும் ஏஜன்ஸீ தொகை செலுத்துபவர்களுக்கு :**

Our Bankers : M/s. INDIAN BANK, Madurai Tallakulam Branch,

**M.MOHAMED ISMAIL**

S.B. A/c No. **6851528029** IFSC Code : IDIB000T003

**சந்தா தொகை செலுத்துபவர்களுக்கு :**

M/s. INDIAN OVERSEAS BANK, Madurai Meenakshi College Branch,

**M.MOHAMED ISMAIL**

S.B. A/c No. **17570100003467** IFSC Code : IOBA0001757

Google Pay Name: QURANIN KURAL Google Pay No. : 9486729192

QURAANIN KURAL GSTIN : 33BCZPM4763Q1ZH

குர்ஆனின் குரலில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத்தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.

# இளைஞர் எனும் சக்தி

கம்பம் மவ்லானா
**பி.எம். பீர் முஹம்மது பாகவி ஹஸ்ரத்**

எழுச்சியும், உணர்ச்சியும், வீரமும், வேகமும் ததும்பிநிற்கும் வீரியமிக்க பருவம் இளைஞர் பருவமாகும். இந்தப் பருவம் எதையும் செய்யும் - செய்யத் துடிக்கும் துணிச்சல் மிக்கப் பருவமாகும். இந்தப் பருவத்தை இலட்சிய வேட்கை யுடன் முன்னேற்றப்பாதையில் பயன்படுத்துவோர் மிக அரிது. பாவத்திற்கும், பகைமைக்கும், தீமைக்கும், கொடுமைக்கும் துணை போகின்றவர்களே அதிகம். இவற்றைச் செய்ய வெறியூட்டப்பட்டு அடிமை யாகிக்கிடப்பவர்களே ஏராளம்.... ஏராளம்.... மதுவும், புகையும், போதை மருந்துகளும் இவர் களுக்குப் பெரும் பலமாக இருந்து ஆட்டி வைக்கின்றன.

பணத்துக்காக ஆட்களைக் கடத்துவது, பிள்ளைகளைக் கொண்டு செல்வது, திருடுவது, கொள்ளையடிப்பது, கொலை செய்வது போன்ற சமூக விரோதச் செயல்களில் ஈடுபடு வதும், இரக்கமற்ற வெறித் தனங்களைச் செய்வதும் பல இளைஞர்களின் தொழிலாக இருக்கின்ற இவர்களால் நாட்டிற்கும், பெற்றோருக்கும், சமூகத்திற்கும், இனத்திற்கும், மனித நேயத்திற்கும் பெருத்த அவமானமாகும்; அவலமுமாகும்.

ஆனால், அந்த இளைஞர் களின் எண்ணமும், போராட்ட மும் புனிதமானவை. தூய இலட்சியத்திற்காகவே அவர்கள் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள். சுதந்திரமான சிந்தனை - உண்மையை ஏற்கும் உரிமைக்காகவே அவர்கள் ஆயுதம் தாங்கினார்கள். ஒன்று சேர்ந்த அவர்கள் இறைவனை முறையாகத் தொழுதனர். இறைமறையின் திருவசனங்கள் அவற்றுக்கு அண்ணலார் விரித்த பொருளை தங்களுக் கிடையே கருத்துப் பரிமாறிக் கொண்டனர். மறைவசனங்கள் சிறுகச் சிறுக செவிவழியாய் அவர்களையும் சென்றடைந்தி ருந்தன. இதயங்களை ஆட்கொண்டன.

ஆரம்ப முன்னோடியாய் அபூபஷீரே அக்குழுவின் தலைவராக ஆக்கப்பட்டார். பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த

அபூஜந்தல் (ரளி), வலீத் (ரளி) இன்னும் பல இளைஞர்கள் அக்குழுவில் இணைந்திருந் தனர். எழுச்சிமிகு வீரச்சிங்கங் களாக எழுபது பேர் ஆங்கிருந் தனர். இறைவனைத் துதித்துக் கொண்டும், இடையிடையே போர்ப்பயிற்சிகள் செய்து கொண்டும், மக்காவாசிகளை அச்சுறுத்திக் கொண்டும் நாட் களை நகர்த்தினர். இது அவர் களாக விரும்பி எடுத்துக் கொண்ட வாழ்க்கை அல்ல. இந்நிலைக்குத் தள்ளப்பட்டார் கள். கொடுமைப் பாதிப்பு இப்படி ஆக்கிவிட்டது. இயல்பிலேயே தீவிரவாதியாக யாரும் இருப்பதில்லை.

பொதுவாக பெரிதாகச் சொல்லுமளவிற்கு மக்காவில் விளைபொருட்கள் எதுவும் இல்லாத நிலையில், மக்கத்து மக்களின் வாழ்வாதாரம் வணிகத்தை நம்பியே இருந் தது. அதிலும் ஷாம் (சிரியா) நாட்டு வர்த்தகமே அதிகப்படி யான இலாபத்தை அள்ளித் தந்த பரவலான வியாபாரமாக இருந்தது. ஹுதைபிய்யா உடன்பாட்டுக்குப்பின் நிறைந்த நிம்மதியுடனும், நம்பிக்கையுடனும் மக்கா குறைஷியர் இருந்தனர். வணிகப் பயணம் மேற்கொண்டனர்.

அவர்களின் இந்த நம்பிக்கையில் இடி விழுந்தது. ஆம்; அவ்வூர் இளைஞர்களின் கூட்டம் வணிகக்குழுவை திடீர் திடீர் எனத் தாக்க ஆரம்பித் தது. சிறிதும் எதிர்பாராக்காத வணிகக் கூட்டம் சிதறி ஓடியது. உயிர், உடைமைச் சேதங்கள் ஏற்பட்டன. கொண்டு செல்லும் வர்த்தக இலாபத்தின் பெரும் பகுதி பாதுகாப்பைப் பலப் படுத்தவும், ஆயுதங்கள் வாங்கிக் குவிக்கவும், போர்த் தளவாடங் களைப் பெருக்கவுமே பயன் படுத்தப்பட்டது. நெடுந்தூரப் பயண வாணிபத்தால் மக்களுக்குப் பயன் விளையா திருந்தது.

அபூபஷீர் குழுவினர் அயராது துணிவுடன் போராடி வந்தனர். தாக்குதலைத் தொடர்ந்து தொடுத்து வந்த னர். மக்கத்துத் தலைவர்கள் நிலைகுலைந்து போயினர். அவர்களின் நிம்மதியும் எதிர் பார்ப்பும் பறிபோனது. மக்கா வின் செல்வந்தர்கள், தலைவர் களின் பணம், காசுகள் வணிகத் தில் பயன்படுத்தப்பட்டிருந் தன. முதலும், இலாபமும் முற்றிலுமாகப் பறிபோனதில் மிகுந்த கவலையடைந்தனர்.

அத்தனை பேரும் மக்கா வின் இளைஞர்கள்! என் செய்வது? நமது நெருக்குதலால் இப்படி மாறி விட்டார்கள். அடுத்து என்ன செய்யலாம்? என ஆலோசனை செய்தனர். மதீனாவின் ஆட்சியாளர் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு மடல் எழுதினர். 'முஹம்மதே! செங்கடலின் ஓரக்கரை

வழியே மறைந்திருந்து எங்கள் வணிகக் குழுவைத் தாக்கும் அந்த வழிப்பறிக்காரர்களை தயைகூர்ந்து மதீனாவிற்கு அழைத்துக் கொள்ளுங்கள்! நாங்கள் எந்த ஆட்சேபனையும் செய்ய மாட்டோம்.

மக்காவில் கொடுமை, மதீனாவிலும் இருக்க முடியாத நிலை. வேறெங்கு போவார்கள்? என்ன செய்வார்கள் அந்த எழுச்சிமிகு இளைஞர்கள்?

மக்கத்துத் தலைவர்களிடமிருந்து அதிகாரப்பூர்வமாகவந்த மடலின் செய்தியைப் படிக்கச் சொல்லிக் கேட்ட அண்ணலார் (ஸல்) அவர்கள், உண்மையில் அகம் மலர்ந்தார்கள். செய்து கொண்ட உடன்பாட்டிற்காகவே இறைநெறியைத் தழுவி வந்தோரை மதீனாவிற்குள் வாழ அனுமதிக்க முடியாதிருந்தார்கள். இதனால், அவர்கள் புரட்சிக்காரர்களாக, போராட்டவாதிகளாக மாறிவிட்டார்கள். அவர்களுக்கு வாழ்க்கையே போராட்டமாகி விட்டது.

தமக்கு பாதிக்கும்போது மனமாற்றம் ஏற்படுகிறது. இதனால் உரிமையும், சுதந்திரமும் தருவதற்கு ஆதிக்கக்காரர்கள் முன் வருகின்றனர். வேறு வழியில்லாததால்தான் சர்வாதிகாரிகள் அடிபணிகின்றார்கள். ஒப்பந்தத்திற்கு வருகின்றார்கள்.

அபூபஷீருக்கு மடலொன்று தீட்டுமாறு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பணித்தார்கள். அனைவரும் உடனே மதீனா புறப்பட்டு வருமாறு அதில் அழைப்பு விடுத்திருந்தார்கள். இறைத் தூதரின் தோழர்கள் அம்மடலைஎடுத்துக் கொண்டு அபூபஷீரிடம் விரைந்தனர்.

என்ன சோதனை! என்ன வேதனை! எழுச்சித் திருமகன் அபூபஷீர் (ரளி) அப்போது உடல்நலன் குன்றிப் படுத்தப் படுக்கையாகப் பாயில் கிடந்தார்கள். அந்த இளைஞரின் இதயத்தில்தான் என்னென்ன கற்பனைகள்! இறைநெறியை இதயப்பூர்வமாய் ஏற்றோம். இறைத்தூதரின் வழிகாட்டலில், அறிவுரையில் திருமதீனாவில் வாழ்வோம் என்றெல்லாம் கனவு கண்டார். அத்தனையும் நிறைவேறாத ஆசையாய் அவரது நெஞ்சில் சோகமூட்டம் போட்டது.

## போர்க்குணமும் போராட்டமும் தூய இலட்சியத்தை அடைவதற்கே!

'அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டலில், அறவுரையில், நட்பில், நல்லுறவில், அமைதி மயமான அறவாழ்க்கை வாழலாம்' என்றெண்ணிய அவருக்கு இப்போது இறப்பு வந்துவிட்டது. எந்த நாளுக்காக எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏங்கிக் காத்திருந்தாரோ அந்த

நாளும் வந்தது. ஆனால் மடலைப் பெற்றும் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மதீனா விற்குத் தான் அவரால் செல்ல முடியவில்லை. தேம்பித் தேம்பி அழுதார். உயிர் பிரிந்து கொண்டி ருக்கிறது என்பதற்காக அல்ல. உத்தமரின் அழைப்பை செயல் படுத்த முடியவில்லையே என்ப தற்காக மிரள மிரள விழித்தார். இனிய உலகைத் துறந்து போகிறோமே என்றல்ல. இறைத் தூதர் நபி (ஸல்) அவர்களின் திரு முகம் பார்த்து, நேருக்கு நேரான அறவுரை உறவில் திளைக்க முடியவில்லையே என்பதற்காக.

ஏகத்துவத் திருவாசகமாம் கவின்மிகு கலிமாவை மொழிந்த வராக அந்த வீரப் பெருமகன் அபூபஷீர் (ரளி) ஆங்கே இறப்பெய்தினார். 'இறைவன் ஒருவன் அவனது திருத்தூதர் முஹம்மத் (ஸல்)' எனும் சொல்லே அவரது இறுதிப் பேச் சாக அமைந்தது. உள்ளத்திலும், உணர்விலும், செயலிலும், சிந்தையிலும், பேச்சிலும், மூச்சி லும் இறைவன் ஒருவன் என்றே ஆனது. ஆம்! எல்லாருக்கும் இறைவன் ஒருவனே.

இலட்சிய வேட்கையுடன் கூடிய போராட்டத்தைத் துவக்கி, தூய எண்ணத்துடன் செயல் பட்டு, தலைமையேற்று அதில் வெற்றியும் கண்ட தம் தோழரின் இறப்பு, எழுச்சிமிகு தோழர்களை நிலைகுலைய வைத்தது. ஒரு கணம் அப்படியே உறைந்து விட்டார்கள். நீதியை நிலை நிறுத்த, அக்கிரமத்தை அடக்க, ஆதிக்க வெறியை ஒடுக்க, சமூக நீதியும், நியாயமான சுதந்திரமும் பெற போர்க் குணமும், போராட்ட உணர்வும் அவசியம் என்பதை அந்த எழுச்சிமிகு இளைஞர்கள் எடுத்துக் காட்டினர்.

அபூபஷீர் (ரளி) அவர்களின் உடல் நன்கு குளிப்பாட்டப் பட்டு, தையல் இல்லாத வெண் ணிற ஆடை (கஃபன்) போர்த்தப் பட்டுத் தொழ வைக்கப்பட்டது. இறந்தவர்களுக்காக இறை வனைத் தொழுது வேண்டிப் பிரார்த்திப்பது அவசியமாகும். இதற்கு ஜனாஸா தொழுகை எனச் சொல்லப்படுகின்றது. இது சிலரின் மீது கடமையாகும். தோழர்கள் இந்த இறுதிக் கடமையைச் செய்து அங்கேயே அடக்கினர். அதற்கு அருகிலேயே மஸ்ஜித் (பள்ளிவாசல்) ஒன்றும் கட்டினர்.

அண்ணலார் (ஸல்) அவர் களின் அழைப்பிற்கேற்ப, எஞ்சி யிருந்த ஏனைய தோழர்களனை வரும் மதீனா செல்ல ஆயத்தமா யினர். இந்தப் போராட்டமும், போர்க் குணமும் அவர்கள் விரும்பி ஏற்றுக் கொண்டதல்ல அல்லது பிழைப்புக்காக மேற் கொண்டதுமல்ல. வேறுவழி யில்லாமல் தான் இதன்பக்கம் தள்ளப்பட்டார்கள். இப்போ தெல்லாம் சரியாகிவிட்டது. இதனால் இலக்கை (மதீனா)

நோக்கிப் புறப்பட்டுப் போனார்கள். விலைபோகும்கூலிப்படையினர் அல்லர் அவர்கள்?

பொதுவாகப் போராட்டங்கள் தொடக்கத்தில் தூய்மையானஎண்ணத்துடன்இலட்சிய வேட்கையுடன் துவங்கப்படும். போகப்போக சுயநலம், ஆதாயம் தேடல், புகழ், விளம்பரம் தலைமைப்பதவிஎனும்போதைகள் நுழைந்து ஆரம்பித்த அடிப்படை நோக்கத்தைச் சிதைத்து விடும். இலட்சியம் அடையப் பெற்றாலும், நோக்கம் எட்டப் பட்டாலும், போராட்டமும், போர்க்குணமும் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும். போராட்டங்கள் பிழைப்புக்கானதோற்றமாய் மாறிப்போகும்.

ஆனால், அந்த இளைஞர்களின் போராட்டம் சந்தர்ப்ப சூழ்நிலையால் 'மாநபியுடன் மதீனாவில் வாழ வேண்டும் எனும்தணியாதஆர்வம்தணியும் வாய்ப்புவந்தது. நோக்கம்எட்டப் பட்டது. போர்க்குணத்தை விட்டு போராட்டத்தைத் துறந்து மதீனா வந்தார்கள்' அந்த மாசில்லாத தோழர்கள்.

மக்காவில் மாபெரும் வீரர் 'காலித்.' இவர் பெரும் வீராதி வீரர்களுக்கெல்லாம் கடும் மிரட்டலாக விளங்கினார். குறைஷியரின் பெரும் பலமாகத் திகழ்ந்தார். இவரது சகோதரர் வலீத் (ரளி) என்பார் இறைநெறியை ஏற்ற இளைஞர்களில் ஒருவராக இருந்தார்.


நம்பகமான சேவையில்
நம்பிக்கையான மருந்தகம்

பாவா மெடிக்கல்ஸ்

294/1, சாலை தெரு,
இராமநாதபுரம் - 623 501.

போன் : 04567-224500, 228500
செல் : 9443255158

அந்த எழுச்சிமிகு இளைஞர்கள் குழுவில் இவரும் இருந்தார். ஆர்வத்துடன் மதீனா வரும் வழியில் சிலர் பயணித்து வந்த ஒட்டகம் பாறை ஒன்றில் இடறி மோதி கீழே விழ வலீதும் அதி லிருந்து விழுந்தார். விரல்களில் சிராய்ப்புக் காயம் ஏற்பட்டு, இரத்தம்கசிந்தது. வலிபொறுக்க முடியாமல் துடித்திட்ட அவர், 'இதென்ன அவலம்! இறைப் பாதையில் வேறெந்தப் பெரிய காயமும் ஏற்படாமல் விரல்களில் காயம்பட்டிருக்கின்றதே!' என நொந்து கொண்டார்.

இறைநெறி ஏற்றோரின் எண்ணவோட்டங்கள் எத்தகு அர்ப்பணிப்புடனும், தியாகச் சிந்தனையுடனும் இருந்திருக் கின்றன. அண்ணல் நபி (ஸல்) அவர்களைப் பார்த்து அகமகிழ்ந் திட்ட அப்பெருமகன் அக்காயத் திலேயே இறப்பெய்தினார். 'இறை நெறியாம் இஸ்லாமே உண்மைநெறி; அதைஏற்பதுவே ஈருலகிலும் வெற்றியைத் தரும்' என்று தன் சகோதரர் காலிதுக்கு இறப்பதற்கு முன் ஒரு மடல் அனுப்பினார். தான் கண்ட உண்மையைத் தன் சகோதரரும் காண வேண்டும் என விரும்பி இறைநெறி அழைப்புப் பணி செய்தார்.

அண்ணல் நபி (ஸல்) அவர் களின் ஆருயிர்த் தோழர் அபூபக்கர் (ரளி) அவர்களின் அன்பின் வாழ்க்கைத் துணைவி உம்முருமான் (ரளி) நோய்வாய்ப் பட்டு படுத்தப் படுக்கையாய் ஆகி இறந்தார். மனைவியைப் பிரிந்திட்ட அவரும், அன்னையை இழந்திட்ட ஆயிஷா (ரளி) அவர் களும் துக்கம் தாளாமல் துவண்டு போயினர். அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அன்பும், ஆறுதலும் அவர்களுக்குப் பேராதரவாய் இருந்து அவர்களது மனத் துயரத்தை ஆற்றியது.

அபூபக்கர் (ரளி) அவர்களின் புதல்வர் அப்துல் கஃபா; இவர் இன்னும் இஸ்லாத்தை ஏற்காது மக்காவில் வசித்து வந்தார். தாயின் மரணச் செய்தி கேட்டுத் துடித்துப் போய் மதீனா வந்தார். சில நாட்களுக்குப்பின் மனப் பூர்வமாய் இறைநெறியை ஏற்று அப்துல் ரஹ்மான் என அண்ணலாரால் பெயர் சூட்டப்பட்டார். சாந்தி மார்க்க உறவில் சங்கமமாயினர்.

இரு சாராருக்குமிடையில் உடன்பாடு காணப்பட்டிருந்தால் தங்கு தடையின்றி மக்கத் தாரும், மதீனாத்தாரும் ஒருவருக் கொருவர் சந்தித்து மனம் விட்டுப் பேசி அளவளாவும் வாய்ப்பு அடிக் கடி கிடைத்து வந்தது. எல்லா ரும் உறவினராய் இருந்ததால் காய்ந்து பட்டுப் போயிருந்த அவர்களின் பாச உறவு, குடும்பப் பந்தம் பசுமையாக மீண்டும் தழைத்து வளர ஆரம்பித்தது. பாச உறவு பசலைக் கொடியாய்ச் செழித்துக் கொண்டிருந்தது.

(தொடரும்)

தொடர் : 7

# இஸ்லாம் கூறும் நாவடக்கம்

**பேராசிரியர் வி.ஏ.எம்.யாஸீன்,**
எம்.ஏ.,பி.எல்.,எம்.பி.ஏ.,எம்.ஃபில்.,

"கௌதுல் அஃளம்" ஹள்ரத் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள் சிறுவராக இருந்தபோது அவர் களுடைய தாயார் அவர்களை மேற்படிப்பிற்காக பட்டணத் திற்கு அனுப்பி வைத்தார்கள். படிப்பு செலவுக்காக நாற்பது தங்கக் காசுகளை அவர்களின் சட்டைப் பையில் வைத்து அவர் களை வழியனுப்பும்போது மகனே! நீ எந்த நிலையிலும், எவரிடமும் பொய்யே பேசக் கூடாது. உண்மையைத்தான் பேச வேண்டும் என்று அறிவுரை கூறினார்கள்.

வியாபாரக் கூட்டத்தின ருடன் அவர்கள் பயணம் செய்த போது கொள்ளைக் கூட்டத் தினர் அவர்களை தடுத்து நிறுத் தினர். ஒரு கொள்ளைக்காரன் "கௌதுல் அஃளம்" அவர்களிடம் "உன்னிடம் என்ன இருக் கிறது?" என்று கேட்டதும், "என் னிடம் நாற்பது தங்கக் காசுகள் இருக்கின்றன" என்று அவர்கள் கூறினார்கள். உடனே, அவன் கொள்ளைக்கூட்டத் தலைவனி டம் கூற, அந்தத் தலைவன் "கௌதுல் அஃளம்" அவர்களிடம், "உன்னிடமிருக் கும் தங்கக் காசுகள் வெளியே தெரியாமல் இருக்கும்போது, நீ ஏன் உண்மையைச் சொன்னாய்?" என்று கேட்டான். "நீ எந்த நிலையிலும், எவரிட மும் பொய்யே பேசக் கூடாது; உண்மையைத் தான் பேச வேண்டும்" என்று என் தாயார் கூறி அனுப்பினார்கள். அதனால் தான் நான் உண்மையை சொன்னேன்" என்று "கௌதுல் அஃளம்" அவர்கள் கூறியதும், கொள்ளைக் கூட்டத் தலைவன் அதிர்ந்து போய் விட்டான்.

தாயின் அறிவுரை கேட்டு உண்மையைக் கூறிய சிறுவன் எங்கே? மாற்றார் பொருட் களை கொள்ளையடித்துவாழும் நான் எங்கே? என்று சிந்தித்து, அவன் கொள்ளையடிக்கும் கொடும் செயலை விட்டுவிட்டு நல்லவனாக மாறினான்.

ஒரு தகவலை மாற்றி சொல்வது அல்லது அந்த தகவலின் ஒரு பகுதியை மறைத்து சொல்வது அல்லது அந்தத் தகவலில் இன்னும் இல் லாததை சேர்த்து சொல்வது

அல்லது இல்லாத ஒன்றை இட்டுக்கட்டி சொல்வது இவையாவும் பொய் என்ற வரையறைக்குள் அடங்கும்.

மெய்யை சொல்வதற்கு சாமர்த்தியம் தேவையில்லை. ஆனால், பொய்களை சொல்வதற்கு நிறைய சாமர்த்தியம் தேவைப்படுகிறது. அடுத்தவர்கள் நம்பும் வகையில் வார்த்தைகளை ஜோடித்து சொல்ல வேண்டும். சொல்லிய பொய்களை நினைவில் வைத்துக் கொள்வது இன்னும் சிரமமான காரியமாகும். சொன்ன ஒரு பொய்யை மறைக்க பல மடங்கு பொய்கள் சொல்லக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு, இதனால் யாருக்கு எந்த இடத்தில் என்ன சொன்னோம்? என்பதும் மறந்து வாழ்க்கையில் சிக்கலான நிலை ஏற்படக்கூடிய அபாய நிலைக்கு பொய்யர்கள் தள்ளப்பட்டு விடுகிறார்கள். இதனால் தான் 'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு' என்று பெரியவர்கள் கூறினார்கள். பொய் சொல்பவர்களை யாரும் பெரிதாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள். அவர்கள் "பசிக்கிறது; சாப்பிட கொடுங்கள்" என்றால் யாரும் தரமாட்டார்கள். ஏனென்றால் அவன் உண்மையைச் சொல்கிறானா அல்லது பொய் சொல்கிறானா என்று மற்றவர்களுக்கு சந்தேகம் வரும்.

அதனால்தான் "பொய் சொல்பவர்களுக்கு போஜனம் கிடைக்காது" என்று பெரியவர்கள் சொல்வார்கள்.

பாவத்திற்குப் பல கருவிகள் உண்டு. ஆனால், அவற்றிற்கெல்லாம் பொருத்தமான கைபிடி பொய் என்று இத்தாலிய மொழியில் ஒரு பழமொழி இருக்கிறது. மிகப்பெரும் பாவங்களில் பொய் பேசுவதும் ஒன்றாகும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியிருப்பதால் பொய் பேசுவதை நாம் தவிர்த்துக் கொள்ள வேண்டும். உண்மைகளை பேச வேண்டும்.

ஹள்ரத் அபூபக்ரா நுஃபைஉ பின் அல் ஹாரிஸ் (ரளி) அவர்கள் கூறியதாவது :

**"நாங்கள் [ஒரு நாள்] அல்லாஹ்வின் தூதர் நபி [ஸல்] அவர்கள் அருகில் இருந்தோம். அப்போது அவர்கள், "பெரும் பாவங்களிலேயே மிகப் பெரும் பாவங்களை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா?" என்று [மூன்று முறை] கேட்டுவிட்டு, "அல்லாஹ்வுக்கு இணை வைப்பது, பெற்றோரைப் புண்படுத்துவது, பொய் சாட்சியம் சொல்வது" அல்லது பொய் பேசுவது ஆகியவை [தாம் அவை]" என்று கூறினார்கள். அப்போது சாய்ந்து கொண்டிருந்த அல்லாஹ்வின் தூதர் நபி [ஸல்] அவர்கள் எழுந்து அமர்ந்து இறுதியாகச் சொன்ன]தை திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டேயிருந்தார்கள். இதைக் கண்ட நாங்கள் அவர்கள்**

நிறுத்திக் கொள்ளக்கூடாதா? என்று கூறினோம்.''

(ஸஹீஹ் முஸ்லிம் 143)

மெய் சொர்க்கத்திற்கு வழிகாட்டும். ஆனால், பொய் நரகத்திற்கு வழிகாட்டும் என்று நபி (ஸல்) அவர்கள் நமக்கு அறிவுறுத்தியிருக்கிறார்கள். ஆகவே, உண்மையை வாழ்வின் அடிப்படையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ''உண்மை நன்மைக்கு வழி காட்டும். நன்மை சொர்க்கத் திற்கு வழிகாட்டும். ஒரு மனிதர் உண்மை பேசிக் கொண்டே இருப்பார். இறுதியில் அவர் 'வாய்மையாளர்' (ஸித்தீக்) எனப் பதிவு செய்யப்படுவார். பொய், தீமைக்கு வழி வகுக்கும். தீமை நரகத்திற்கு வழி வகுக்கும். ஒரு மனிதர் பொய் பேசிக் கொண்டேயிருப்பார். இறுதியில் அவர் 'பெரும் பொய்யர்' எனப் பதிவு செய்யப்பட்டு விடுவார்'' இதை ஹள்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம் - 5081)

உண்மையை பேசுபவர்கள் எப்போதும் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருப்பார்கள். ஆனால், பொய்யர்கள் மனக் கலக்கத் தினால் உழன்று கொண்டிருப் பார்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

''உண்மை என்பது மன அமைதியைத் தரும். பொய் என்பது கலக்கத்தைத் தரும்''

(நூல் : திர்மிதீ, அஹ்மது)

உண்மையை பேசுபவர் களுக்கு பயம் என்பது எதுவும் இருக்காது. ஆனால், அறம் கெட்ட நெஞ்சு திறம் கெட்டு அலையும் என்ற பழமொழிக் கேற்ப பொய்யர்கள் எப்போதும் பயத்தில் வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

சிலரை எல்லா நேரத்திலும் ஏமாற்றலாம். பலரை சில நேரம் ஏமாற்றலாம். ஆனால், எல்லோரையும் எல்லா நேரத் திலும் ஏமாற்ற முடியாது என்று முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஆப்ரகாம் லிங்கன் கூறியிருக் கிறார். பொய்யர்கள் ஒரு நாள் கையும் களவுமாக பிடிபடுவார் கள். இவர்கள் கூறிய பொய்களை யார் எப்போது கண்டுபிடித்து விடுவார்களோ என்ற அச்சம் எப்போதும் இவர்கள் மனதில் அலைமோதிக் கொண்டிருக்கும். பல பொய்களை சொல்லி பலரை ஏமாற்றி கொண்டிருக் கிறோம். எங்கே எப்போது யார் கையிலும் சிக்கி விடுவோமோ என்று பதற்றப்பட்டுக் கொண்டி ருப்பார்கள். பொய் சொன்னத னால் கிடைத்த ஆதாயங்கள் கைவிட்டு போய் விடுமோ என்ற மன உளைச்சல் இவர் களை ஆட்டிப்படைக்கும்.

சிலர் பொய்யை சொல்லி விட்டு, அதை உண்மை என்று

நிரூபிக்க கடுமையாக வாதாடுவார்கள்.

அப்படிப்பட்டவர்கள் மேல் அல்லாஹ் மிகவும் கோபம் கொள்வான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

அல்லாஹ்வின் தூதர் நபி [ஸல்] அவர்கள் கூறினார்கள்: "மனிதர்களிலேயே அல்லாஹ் விடம் மிகவும் கோபத்திற்குரியவன், [உண்மையை மறுத்துப் பொய்மையை நிலைநாட்ட] கடுமையாகச் சச்சரவு செய்பவனாவான்." இதை ஹள்ரத் ஆயிஷா [ரளி] அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம் 5183)

ஒட்டு மொத்தத்தில் பொய் கொடிய நரகத்தின் வழிகாட்டி. நரகத்தை கண் முன் காட்டும் நாட்காட்டி. நரகத்தில் தள்ளும் ஆள்காட்டி. ஆகவே, பொய் பேசும் வழக்கத்தை வாழ்விலிருந்து அறவே ஒழித்துவிட வேண்டும். ஆனால், பொய்யை நபி (ஸல்) அவர்கள் மூன்று சந்தர்ப்பங்களில் அனுமதித்திருக்கிறார்கள்.

இதன் அறிவிப்பாளரான ஹள்ரத் இப்னு ஷிஹாப் அஸ் ஸுஹ்ரீ [ரஹ்] அவர்கள் கூறுகிறார்கள்: "மக்கள் பொய் என்று சொல்லக்கூடிய எதற்கும் [மார்க்கத்தில்] அனுமதியுள்ளதாக நான் கேள்விப்படவில்லை. மூன்று பொய்களைத் தவிர!

1. போர் தந்திரத்திற்காகச் சொல்லப்படும் பொய்.
2. மக்களிடையே சமாதானத்தை உருவாக்குவதற்காகச் சொல்லப்படும் பொய்.
3. [குடும்ப ஒற்றுமைக்காக] கணவன் மனைவியிடமும், மனைவி கணவனிடமும் சொல்லும் பொய்.

மேற்கண்ட ஹதீஸ் மற்றோர் அறிவிப்பாளர் தொடர் வழியாகவும் வந்துள்ளது. அதில், ஹள்ரத் சாலிஹ் பின் கைசான் அவர்களது அறிவிப்பில், ஹள்ரத் உம்மு குல்ஸூம் [ரளி] அவர்கள், "மக்கள் பேசும் பொய்களில் மூன்றைத் தவிர வேறெதற்கும் அல்லாஹ்வின் தூதர் [ஸல்] அவர்கள் அனுமதியளித்ததை நான் கேட்டதில்லை; [மேற்கண்ட] மூன்று விஷயங்களில் தவிர" என்று கூறினார்கள்" என இடம் பெற்றுள்ளது.

(ஸஹீஹ் முஸ்லிம் 5079)

நெறிமுறைகளை எங்கே கட்டாயப்படுத்த வேண்டுமோ அங்கே இஸ்லாம் கட்டாயப் படுத்துகிறது. நெறிமுறைகளை எங்கே தளர்த்த வேண்டுமோ அங்கே இஸ்லாம் தளர்த்துகிறது. மனிதர்களுக்கு உலக வாழ்வில் நிர்ப்பந்தம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதால் இஸ்லாம் வாழ்வியலுக்கேற்ற ஒரு சன்மார்க்கமாக திகழ்கின்றது.

சிலர் அவ்வப்போதுவீட்டில் இருப்பவர்களை சபித்துக் கொண்டிருப்பார்கள். நீ உருப்படுவியா? நீ நல்லா இருப்பியா? என்று அமங்கல மான வார்த்தைகளால் ஏசிக் கொண்டிருப்பார்கள். ஆனால் மங்கலமான வார்த்தைகளை சொல்லவேண்டும். ஏனெனில், அப்படிப்பட்ட மங்கலமான வார்த்தைகளை காதால் கேட்பதுதான் நற்குறி என்று நபி (ஸல்) அவர்கள் நமக்கு எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

**ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் கூறியதாவது : "அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள், "பறவை சகுனம் என்பது கிடையாது. சகுனங்களில் சிறந்தது நற்குறியே ஆகும்" என்று சொன் னார்கள். மக்கள், நற்குறி என்பதென்ன?" என்று கேட்டார் கள். நபி (ஸல்) அவர்கள், "அது நீங்கள் செவியுறும் நல்ல (மங்கலமான) சொல்லாகும்" என்று பதிலளித்தார்கள்.**

(ஸஹீஹ் புகாரி - 5754)

வீட்டில் சொல்லக்கூடாத வார்த்தை 'இல்லை' என்பது. "அரிசி இல்லை; பருப்பு இல்லை; எண்ணெய் இல்லை; காய்கறி கள் இல்லை" என்றெல்லாம் சொல்லவே சொல்லாதீர்கள். "அரிசி வாங்கணும்; பருப்பு தேவையா இருக்கு; வரும் போது புளி வாங்கிட்டு வாங்க" என்று சொல்ல வேண்டும். இல்லை இல்லை என்று சொன் னால் எல்லாம் இல்லாமலே போய்விடும் என்று அந்தக் காலத்தில் வீட்டிலுள்ள பெரியவர்கள் சொல்வார்கள். நெல்லைக் கொட்டினால் அள்ளிட முடியும். ஆனால், சொல்லைக் கொட்டினால் அள்ள முடியாது என்று கிராமங்களில் ஒரு பழமொழி இருக்கிறது. ஆகவே, நெல்லைக் கொட்டினாலும் அளந்துதான் கொட்ட வேண்டும். சொல்லை கொட்டினாலும் அளந்துதான் கொட்ட வேண்டும். இந்து சமயத்தினரின் திருமணத்தில் மாப்பிள்ளை மணப்பெண்ணின் கழுத்தில் தாலி கட்டும்போது கெட்டி மேளம் கெட்டி மேளம் என்று கூறி மேளத்தின் சப்தத்தை அதிகப்படுத்துவார் கள். ஏனென்றால் தாலி கட்டும் தருணத்தில் யாரேனும் கூறிய அமங்கல வார்த்தைகள் யார் காதிலும் விழக்கூடாது என்பதே இதற்குக் காரணமாகும். சில சொற்கள் வெல்லும்; சில சொற்கள் கொல்லும். ஆகவே, சொற்களை கையாள்வதில் கவனம் தேவை.

இந்த பிரபஞ்சம் சொற் களாலே சூழப்பட்டிருக்கிறது. மனிதர்களின் மகிழ்ச்சியையும், துன்பத்தையும் வெளிப்படுத்து பவை சொற்கள்தான். இந்தச் சொற்கள் மட்டும் இல்லையென் றால் இந்த உலகத்தில் மயான

அமைதிதான் நிறைந்திருக்கும். புறக்கணிக்கப்பட்ட அன்பிலும், நிராகரிக்கப்பட்ட உறவிலும், சொல்ல இயலாத வேதனைகளி லும் அமிழ்ந்து கிடக்கும் சொற் களை யார் அறிவார்? அவை மனிதர்களின் மனதிற்குள்ளேயே புழுங்கிக் கொள்கின்றன. பரிமாறப்படாமலே அவை மனிதர்களோடு மரணித்துக் கொள்கின்றன.

நல்லச் சொற்கள் மதிப்பு மிக்கவை. ஆனால், அவற்றுக்கு செலவு அதிகமில்லை என்று ஆங்கில கவிஞன் ஷேக்ஸ்பியர் கூறினார். ஆகவே, எண்ணங் களும், பேச்சுகளும் நல்லவை யாக இருந்தால்தான் நம் முடைய செயல்களும் நல்லதாக இருக்க முடியும். கம்பராமாயணம், பெரிய புராணம், நெடுநல்வாடை போன்ற நூல்களில் வையம் அல்லது உலகம் என்ற மங்கல வார்த்தைகளோடு தொடங்கு வதைக் காணலாம். இவற்றை அமுதச் சொற்கள் என்று பகுத் தறிந்து கூறியிருக்கிறார்கள். "அ" என்றஎழுத்துமங்கலஎழுத்து என்று தமிழ் நிகண்டுகள் கூறு கின்றன. இதனால்தான் 1330 குறள்களை எழுதிய திருவள்ளுவர் "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு" என்ற முதல் குறளை "அ" என்ற எழுத்தில் தொடங்கினார்.

வாழ்க்கையில் நாம் பெறு கின்ற அனுபவங்கள் பெரும்பா லும் வார்த்தை எனும் அடித்தளத் தின் மீதே அமைகின்றன. உற வின் அன்பு, ஆசிரியரின் அறிவு, கல்வி, கண்டிப்பு, நட்பு, ஆறுதல், வாழ்த்து மற்றும் சமூகத் தொடர்பு போன்ற அனுபவங் கள் ஒவ்வொன்றும் வார்த்தை களின் கோர்வைகளால் தான் நிகழ்கின்றன. ஆகவே, அமங்கல வார்த்தைகளை கூறாமல் மங்கல வார்த்தைகளைக் கூற வேண்டும். மங்கல வார்த்தை கள் காதில் கேட்பதனால் வாழ் வில் நல்லவை நடக்கும். சொல் வளம் வீட்டின் நலம். நா வளம் நாட்டின் நலம் என்ற கருத்தை யாராலும் மறுக்க முடியாது.

நாம் பேசுவதற்கு சாதகமாக இருக்கும் சாதனம் நாக்கு; மனித உடலில் எலும்புகள் இல் லாத கல்லீரல், சிறுநீரகம், மூளை, இதயம், வயிறு போன்ற உறுப்பு களில் நாக்கும் ஒன்றாகும். "அரை அடி நாக்கு ஆறடி மனிதர்களையும் வீழ்த்தி விடு கிறது" என்று பல்கேரியா நாட்டில் ஒரு பழமொழி இருக்கிறது. "இதயத்தின் சாவி நாக்கு. இது இதயத்தை திறக்கவும் செய் கிறது; மூடவும் செய்கிறது" என்று ஜப்பானிய மொழியில் ஒரு பழமொழி இருக்கிறது. "கூரான கத்தி உடலைக் கிழிக் கிறது; கூரான நாக்கு இதயத்தைக் கிழிக்கிறது" என்று ஆப்பிரிக்கா நாட்டில் ஒரு பழமொழி இருக் கிறது. "சுவையான உணவு களைக் கேட்கும் நாக்கு அவ்வப்

போது சுவையான வார்த்தை களை வெளியிடுவதில்லை" என்று ஸ்பெயின் நாட்டில் ஒரு பழமொழி இருக்கிறது.

பார்த்தல், கேட்டல், சுவைத் தல், நுகர்தல், உணர்தல் என்ற ஐம்புலன்களுக்கு தேவையான கண், காது, மூக்கு, வாய், மெய் என்ற ஐம்பொறிகளில் சுவைக் கும் நாவைத் தவிர மற்ற நான்கு பொறிகளை அல்லாஹ் வெளிப் படையாக வைத்தான். ஆனால் நாக்கை மட்டும் முப்பத்திரண்டு பற்களுக்கிடையே சிறை வைத்து வாய் என்னும் கதவுகளால் மூடி விட்டான். வெளிப்படையாகவைத் தால் இந்த உறுப்பு மனிதர்களின் இதயங்களில் ஆறாத புண்களை ஏற்படுத்தி விடும் என்ற காரணத்திற்காகவே அல்லாஹ் இதை சிறையில் அடைத்துவிட் டான் என்றே சொல்ல வேண்டும். ஆகவே நாவை அடக்கி வைக்க வேண்டும் என்பது வாழ்வில் ஒரு முக்கியமான அம்சமாகும். நாவடக்கத்தைப் பற்றி காரைச் சித்தர் பாடிய பாடல் ஒன்றும் இருக்கிறது.

ஊற்றைச் சடலமடி!
உப்பிருந்த பாண்டமடி!
காற்றடைத்த பையடி!
காயமே பொய்யடி!
நாற்றமெடுக்கும் நாலு நாளில்
மூச்சது நின்று போனால்
நேற்றிருந்த பாண்டங்கள்
இன்றைக்கு மண்ணாச்சு!
தூற்றுவதும் போற்றுவதும்
துணைக்கு வாரா சகியே
ஆனந்த பெண்ணே!

இறந்து போனால் மனிதர் களின் சடலங்கள் அழுகிப் போய் விடும் ஊற்றைச் சடலங் களாகும். உப்பு தோய்ந்த வியர்வையை உண்டாக்கும் பாத்திரம்தான் இந்த உடல். மூச்சு ஓடிக் கொண்டிருக்கும் காற்று அடைத்த பைதான் மனிதர்களின் உடல்.

மனிதர்களின் உடல் மற்றும் அந்த உடல் தரும் சுகம் எல்லாமே பொய்யானவை. நிரந்தரம் இல் லாதவை. மூச்சு நின்று மனிதர் கள் மரணித்தால் நாலு நாட்களுக் குள் மனிதர்களின் சடலங்கள் நாற்றம் அடித்து விடும். நேற்று வரை உயிருடன் இருந்தவர்கள் இன்று இறந்துவிட்டதனால் அவர்கள் புதைக்கப்பட்டு மண்ணோடு மண்ணாகி விட் டனர். யார் தூற்றினாலும் புகழ்ந் தாலும் அந்த ஏச்சும், பேச்சும் அல்லது புகழும் இறந்துபோன மனிதர்களுக்கு துணையாக அவர்களுடன் செல்வதில்லை. ஆகவே, முகஸ்துதியும் வேண்டாம்; மற்றவர்களை தூஷிப்பதும் வேண்டாம் என்று நாவடக்கத்தைப் பற்றி காரைச் சித்தர் விளக்குகிறார்.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரடீஸ் ஒருமுறை தன்னுடைய மாணவர்களைப் பார்த்து "மாணவர்களே! நம்முடைய உடலில் ஓர் உறுப்பு இருக்கிறது.

அது செய்கிற தவறுக்கு அது தண்டனை அனுபவிப்பதில்லை. ஆனால், உடலிலுள்ள மற்ற உறுப்புகளே தண்டனையை அனுபவிக்கின்றன. அது என்ன உறுப்பு?" என்று கேட்டார். பதில் கூற முடியாமல் மாணவர்கள், "ஐயா! நீங்களே சொல்லுங்கள்" என்று கூற, "அந்த உறுப்பு நாக்கு" என்று சாக்ரடீஸ் பதிலளித்தார். சச்சரவுகள் ஏற் படும்போது ஒருவரை திட்டு வதும், ஏசுவதும் நாக்கு தான். சச்சரவுகளில் அடிதடி நடக் கும்போது நாக்கு தானே ஏசியது என்று யாரும் நாக்கை தாக்கு வதில்லை. நாக்கு பத்திரமாக வாய்க்குள் உட்கார்ந்து கொள் கிறது. ஆனால், தலை, கண்கள், மூக்கு, முகம், கைகள், கால்கள் ஆகிய உறுப்புகள்தான் தாக்கப் பட்டு காயமடைகின்றன. ஆகவே, நாக்கு புரியும் குற்றத் திற்கு மற்ற உறுப்புகள் தண்டனை அடைகின்றன. ஆகவே, நாவடக்கம் வாழ்க்கை யில் அவசியமானது" என்று சாக்ரடீஸ் விளக்கமளித்தார்.

"ஒவ்வொரு நாள் காலை யிலும் உடலிலுள்ள எல்லா உறுப்புகளும் நாவைப் பார்த்து அல்லாஹ்வை அஞ்சி நீ சரி யாக நடந்து கொள். உன்னை வைத்துத்தான் நாங்களும் கணிக்கப்படுகிறோம். நீ சரியாக இருந்துவிட்டால் நாங்களும் சரியாக இருந்து விடுவோம். நீ தவறினால் நாங்களும் தவற வேண்டியதிருக்கும்" என்று சொல்வதாக நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

**"ஒவ்வொரு நாள் காலை யிலும் உடலிலுள்ள ஏனைய உறுப்புகள் நாவைப் பார்த்து எங் கள் விஷயத்தில் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்; உன்னை வைத்தே நாம் கவனிக்கப்படு கிறோம். நீ சரியாக நடந்து கொண்டால் நாமும் சரியாக இருப்போம். நீ தவறி விட்டாலோ நாமும் தவறி விடுவோம்" எனக் கூறுவதாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.** (நூல் : திர்மிதீ)

உடலிலுள்ள எல்லா உறுப்பு களும் நாவைப் பார்த்து பயப் படுகின்றன. ஏனெனில், நாவி னால் ஏற்படும் குற்றத்திற்காக ஒருவர் நரகத்தில் தள்ளப்பட் டால் குற்றம் புரியாத மற்ற எல்லா உறுப்புகளும் நரக வேதனையை அனுபவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. ஆகவே, நாக்கை கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும்.

யாகாவா ராயினும் நாகாக்க
காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

"ஒருவர் எதைக் காத்திட முடியாவிட்டாலும் நாவையா வது அடக்கிக் காத்திட வேண்டும். இல்லையேல், அவர் சொன்ன சொல்லே அவர் துன்பத்துக்குக் காரணமாகி விடும்" என்று நாவடக்கத்தின் அவசியத்தை இந்தத் திருக்குறள் விளக்குகிறது.

(தொடரும்)

# துஆ மஜ்லிஸ்

## நாட்டங்கள் நிறைவேற...

எம் குடும்பத்தினர் அனைவரின் உடல் சுகத்திற்காகவும், எமது பிள்ளைகளின் தேவைகள் அனைத்தும் நிறைவேறவும், எமது சிரமங்கள் தீர்ந்து இறுதி வரை கண்ணியமாக வாழவும் துஆ செய்யுங்கள். **- பாத்திமா**, திருப்பூர்.

ஃபாருக் ஆடிட்டர் - உடுமலைப்பேட்டை; முஹம்மது காசிம் - லால்குடி; ஆர்.முஹம்மது சாதிக் - ஒட்டன்சத்திரம்; அ.அஷ்ரஃப் அலீ - ஒட்டன்சத்திரம்; ஜவாஹிர் பேகம் - மதுரை; பாத்திமா ஜின்னாஹ், எஸ்.ஹெச்.சகாபுதீன் - மதுரை; ஹபீப் நிஸா - ஒட்டன்சத்திரம்; மைதீன் ருமேஷ், சாராம்மா பேகம், ரிம்ஷா சுல்தானா - விழுப்புரம்; ஒய்.ஜாஹிர் உசேன், மெஹ்ராஜ் பேகம், ஆப்ரின் பானு, செய்யது அபுதாஹிர், அப்துஸ் ஸலாம் - மதுரை; அ.காஜா மைதீன் - நெய்க்காரப்பட்டி; எம்.ஷானவாஸ் - சவூதி; அ.அப்துல்லாஹ், உஷ்னாரா, ரேஷ்மா பிர்தௌஸ், ஹஸீனா - மதுரை; எஸ்.ஹசன் பானு, எஸ்.நூருன்னிஸா - தஞ்சாவூர்; சந்தா எண் F 595 - திருச்சி; பி.மல்லிக்கா பேகம், பி.அபுதாஹிர், பாத்திமா பேகம், பஹீமுல் ஹஸன் - மதுரை; ரேஷ்மா - சவூதி; அப்துர் ரஹ்மான் - சவூதி; ஐ.காதர் பாட்சா, கா.முஸ்திரி பேகம் - மதுரை; ஹதிகா ஹர்மன் - விழுப்புரம்; அ.ஜெய்புன்னிஸா - கருமண்டபம்; சிக்கந்தர் அம்மாள், அஜீஸ், சதாம் உசேன், பர்ஹத் சாஹிரா, அம்ரின் ஷிஃபா - மதுரை; முஹம்மது சிராஜ்தீன் - விழுப்புரம்; சாதிக் - மங்கலம்; செல்லபா, எஸ்.கோரிமா - விராதனூர்; பி.காதர் பாட்சா, ரமீஜா பீபீ, ஷேக் தாவூது, ஷஃபாணா ஆப்ரின், ஷமீம் பானு, அல்தாப் நாகூர் மீரான் - மதுரை; ஹாஜியா கே.மெஹருன்னிஸா, ஹாஜியா அ.நஜீமா, ஹாஜியா பீ.யாஸ்மின் நிஹார், ஹாஜி எம்.பீர் முஹம்மது, ஹாஜியா பீ.ருகையாள் பீவி - உத்தமபாளையம்; கா.ரபீக் ராஜா, ஷபீனா, ஆயிஷா ஆப்ரின், முஹம்மது மஃபாஜ், இப்ராஹிம்ஷா, பர்வீன் பானு, முஹம்மது தாஹா - மதுரை; ஹாஜியா பீ.முஹையதீன் பாத்திமா - நீலகிரி; எஸ்.தில்ஷாத், எஸ்.சாதிக் அலீ, யாஸ்மீன் பானு, முஹம்மது இஸ்மாயீல், யாசிர் அரபாத், ரேஷ்மா, கதீஜா, மரியம் பாத்திமா, ஷகிலா பானு,

முஹம்மது பாரூக், நிஷா, நர்கீஸ் பானு, இர்ஷாத் பாட்சா, ஆலியா, ஆலிஷா, ஆனியா - திருச்சி; எஸ்.சுல்தான் - திருச்சி; எஸ்.முஸ்தபா, ஆயிஷா பீ, முஹம்மது பாரூக், முஹம்மது மீரான் - மதுரை; பி.சாதிர் பாட்சா - பொள்ளாச்சி; கே.எஸ்.ஹாரூன் - ஈரோடு; ஜுனைது பாபு, ஷாஹிதா பானு, அகில் வாரிது, ஆஸிர் ரைஹான் - சென்னை; அல்ஹாஜ்ஜா பாத்திமா - திருப்பூர்; குஷ்ணமா, சாதிக் பாட்சா, பிர்தௌஸ், யாஷிபா, முஃப்தியாஜ் டாபியா - மதுரை; காமிலா பானு, ஹக்கீம் - சென்னை; ஷாக்கீர் உசேன், சபினா, அஸ்வர், ஸாஜியா - அபுதாபி; சையது அப்துல் காதர், சைதானி, முஸ்தபா ஹுஸைன், முஹம்மது கவுஸுல்லாஹ், மெஹர் பாத்திமா, தஸ்லீம் சுல்தானா, அனீஸ் பர்ஹானா, ஜெஸிரா ஷகீன், ஷஃபீரா ரோஷித், பஹீமா ஷரீன், ஆயிஷா மரியம் - இராமநாதபுரம்; பஜ்லுர் ரஹ்மான், முபினா, பஹிமா, ஹபிஸா, ஃபஜி - சென்னை; காஜா ஹுஸைன், நஸீமா, நஸீரா, நிலோஃபர் - சென்னை; ரோஸ் பானு, சுல்தான் அலாவுதீன் - ஒத்தக்கடை; முஹம்மது இப்ராஹிம்ஷா - மதுரை; எஸ்.அஹமது பஷீர் - ஈரோடு; ஹமீதா புஸ்ரா, அப்துல் காலிக் - ஈரோடு;

இவர்கள் அனைவருடைய ஹலாலான ஹாஜத்துகள் நிறைவேறவும், இவர்களின் துன்பங்கள், துயரங்கள் நீங்கவும், நோய் நொடிகள் நீங்கி சுகம் பெறவும், மற்றும் இவர்களின் கோரிக்கைகள் அனைத்தும் இன்ஷா அல்லாஹ் கபூலாகிடவும் எமது துஆ மஜ்லிஸ் குழுவின் தலைவரான மதுரை ஜே.எம்.எஸ். அரபு கல்லூரி முதல்வர் அஷ்ஷைகு அல்லாமா எம்.முஹிப்புல்லாஹ் ஹள்ரத் தாமத் பரக்காத்துஹு அவர்களும், துஆ மஜ்லிஸ் குழுவினரும் துஆ செய்கிறார்கள். குரலின் அருமை வாசக நேயர்களே! கண்ணியமிக்க உலமா பெருமக்களே! இதைக் காணும் நல்லவர்களே! நீங்களும் துஆ செய்யுங்கள்! வல்ல அல்லாஹ் நம் துஆக்களை கபூலாக்குவானாக!

துஆ மஜ்லிஸ் மூலம் பயன் அடைந்தோரின்...

# இதயம் பேசுகிறது!

வல்ல ரஹ்மானின் பேரருளாலும், துஆ மஜ்லிஸ் குழுவினரின் துஆ பரக்கத்தினலும் தங்கை மகளின் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. அல்ஹம்து லில்லாஹ்! துஆ செய்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் என் நன்றி கலந்த மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கிறேன். **குரல் வாசகி, மதுரை–16.**

# இறைவா, நிறைவருள் புரிவாயாக!

திண்டுக்கல் மாவட்டம் பழனி கீரனூர் அல்லாமா அல்ஹாஜ் மர்ஹூம் எஸ்.ஏ.முஹம்மது இஸ்மாயீல் பாகவீ ஹள்ரத் (ரஹ்) அவர்களின் கடைசி மகனார் ஜனாப் எம்.லுத்ஃபுல்லாஹ் அவர்கள் 09.04.24 அன்றும்,

மதுரை திருப்பரங்குன்றம் "ஜாமிஆ மஹ்ஸனித் தாரைன்" அரபு கல்லூரியில் பேராசிரியராக பணிபுரிந்த திருச்சி மாவட்டம் முஹம்மதுபட்டிணத்தைச் சார்ந்த மவ்லானா காதர் மொய்தீன் (கமரி) ஹள்ரத் அவர்கள் 05.05.24 அன்றும்,

கேரளா அத்திக்கோடு ஜும்ஆ பள்ளிவாசலின் முத்தவல்லியும், அத்திக்கோடு மர்ஹூம் ஷேக் முஹம்மது இராவுத்தர் (ரஹ்) அவர்களின் அன்பு மகனாருமான ஜனாப் எஸ்.அமீர் ஹம்சா அவர்கள் 18.07.24 அன்றும்,

தேனி மாவட்டம் உத்தமபாளையம் ஜனாப் கே.எஸ்.சையது முஹம்மது அவர்களின் அருமை மனைவியும், ஜனாப் எம்.முஸ்தபா அவர்களின் அருமை மாமியாருமான ஜனாபா என்.கே.ரஹ்மத் நிஸா அவர்கள் 20.08.24 அன்றும்,

உத்தமபாளையம் கோட்டைமேடு முன்னாள் ஜமாஅத் தலைவர் மர்ஹூம் சுருளி மைதீன் (ரஹ்) அவர்களின் அன்பு பேரரும், மர்ஹூம் எஸ்.ஷாஹுல் ஹமீது (ரஹ்) அவர்களின் அன்பு மகனாருமான ஜனாப் எஸ்.அப்துல் மஜீது அவர்கள் 22.08.24 அன்றும்,

பழனி கீரனூர் ஜனாப் துரைத்தா என்ற ஹஸன் முஹம்மது அவர்கள் 05.09.2024 அன்றும்,

கரூர் மாவட்டம் பள்ளபட்டி சின்னாரத்த மர்ஹூம் C.M.பஷீர் அஹமத் (ரஹ்) அவர்களின் அருமை மனைவியும், சின்னாரத்த மர்ஹூம் ரஷீது மவுலிசா ஹள்ரத் (ரஹ்) அவர்களின் இரண்டாவது மருமகளாரும், சின்னாரத்த அல்ஹாஜ் தாவூதுப்பா அவர்களின் அருமைத் தங்கையுமான ஜனாபா ஆயிஷா அம்மாள் அவர்கள் 06.09.2024 அன்றும்,


பள்ளபட்டி அல்லாமா மர்ஹூம் அரபி ஹள்ரத் (ரஹ்) அவர்களின் அன்பு மகளாரும், சேலம் மர்ஹூம் மவ்லானா முஹம்மது சாலிஹ் ஹள்ரத் (ரஹ்) அவர்களின் அருமைத் தங்கையும், சேலம் அல்ஹாஜ் மர்ஹூம் அப்துல் மன்னான் சாஹிப் (ரஹ்) அவர்களின் அன்பு மனைவியுமான ஜனாபா A.உம்மு ஸல்மா பீவி அவர்கள் 16.09.24 அன்றும்,

## வல்ல ரஹ்மானே! உன்னளவில் சேர்ந்துவிட்டனர்

உன்னளவில் சேர்ந்துவிட்ட இந்த உத்தமமான நல்லடியார்களின் பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பாயாக! நன்மைகளை கபூலாக்கிக் கொள்வாயாக! கேள்வி, கணக்கில்லாமல் அவர்களுக்கும், அவர்களைப் பெற்றெடுத்தவர்களுக்கும் உயர்ந்த சொர்க்கங்களை உரிமையாக்கித் தந்து. அந்த சொர்க்கங்களில் அண்ணலெம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமாக அவர்களையும், எங்களையும் வாழச் செய்வாயாக!

# வாசகர் வட்டம்

நம் உயிரினும் மேலான உண்மை நபி (ஸல்) அவர்களின் புகழ் மணக்கும் மீலாதுன் நபி சிறப்பிதழ் கற்கண்டாய் இனித்தது. நபி (ஸல்) அவர்களின் சிறப்புகளை எடுத்துக்கூறிய அனைத்து கட்டுரைகளும் அற்புதமாய் இருந்தன. அல்ஹம்துலில்லாஹ்!



மேலும், வக்ஃபு வாரிய சொத்துக்களை முடக்க நினைக்கும் ஒன்றிய அரசின் முயற்சிகளை அல்லாஹ் ஒன்றுமில்லாமல் செய்து முஸ்லிம்களுக்கு வெற்றியையும், பாதுகாப்பையும் தந்தருள்வானாக.

ஜெ. முஹம்மது யூசுப்,
பனங்காட்டூர்.

"ஸலாம் சொல்லுங்கள்" என்ற கட்டுரையில் ஸலாம் முதன் முதலாக யார், யாருக்குச் சொல்லப்பட்டது என்பதில் ஆரம்பித்து எழுதியிருந்தவை அனைத்தும் படித்து அறிய வேண்டிய ஒன்று. ஸலாமுக்கு பதில் சொல்வது வாஜிபு என்று சொல்லப்பட்டுள்ள நிலையில், அக்காலத்தில் அப்பாலைவன வீதியில் நடந்து வரும் சிறுவர்களுக்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முதலில் ஸலாம் கூறுவார்களாம். இது இன்றுள்ள கால நிலைக்கு எத்துனை பெரிய எடுத்துக்காட்டு. "பெருமைக்குரிய பெருமானார்" கவிதை தொகுப்பு நபி (ஸல்) அவர்களின் புகழ் பாடியிருப்பது அருமை. குறிப்பாக, நீதியும் நேர்மையும் கற்றோம் என்றவரிகள் பொக்கிஷம்.

பா. ஹாஜி முஹம்மது,
சேந்தமங்கலம்.

பத்திரிகையை திறந்தவுடன் மாதம் ஒரு மாமறை வசனம் தலைப்பே மிக அழகாக இருந்தது. அதில் பொதிந்துள்ள வசனத்தின் விளக்கங்கள் படிக்க படிக்க மிக அற்புதமாக இருந்தன. ஆலு இம்ரான் சூராவிலுள்ள வசனத்தை மனதில் கொண்டு அதன்படி நடந்து சிறப்புடன்வாழ நம் அனைவருக்கும் அல்லாஹ் தௌபீக் செய்வானாக!

**கா.முஸ்திரி பேகம்**, மதுரை.


தங்களுடைய ரோல் மாடலாக யாரைப் பின்பற்ற வேண்டும் என்று தெரியாமல் பாதை மாறிச் சென்று கொண்டிருக்கும் இன்றைய இளம் தலைமுறையினருக்கு பெற்றோர்கள் என்ன செய்ய வேண்டும்? என்பதை "உலக வரலாற்றை புரட்டி போட்ட உத்தமரின் முன்மாதிரி" என்ற கட்டுரை வெள்ளிடை மலை போல் விளக்குகிறது.

**ஹஃபீஜா**, மதுரை.

# தாஜ் டிரேடர்ஸ்

**சில்லரை மற்றும் மொத்த விற்பனையாளர்**


எங்களிடம் பள்ளிவாசல் கார்பெட் மற்றும் விடு ஹோட்டல்கள் கம்பெனிகளுக்கு
தேவையான ரப்பர், கயர் மேட் வகைகள் பேன்சி மேட்கள், கிளீனிங் பிரஸ்கள்
வைப்பர்கள் துடைப்பம் மற்றும் இதர கிளீனிங் பொருட்கள் கிடைக்கும்








No : 2/5, Gandi Nagar Trunk Road, Opposite to Porur Lake
Karambakkam, Porur, Chennai - 600 116
PH : 044 2476 0129, Cell : 94444 85670, 95005 95001


Touches Your Heart®
Remains Forever ...
PMP TEX INDIA
ESTD 1968
Ulama®
LUNGIES * VESTS * BRIEFS
OUR PRODUCTS
Follow us on
ULAMA FASHION
Mfd. by: PMP TEX INDIA
No.60, Old No.103A, Ramasamy Street,Chennai - 600 001.
: +91- 44 - 2525 4050, 4859 4050, : 81220 14050 : 78450 64050
: ho@pgtextiles.in : www.pmpcorporate.com
online shopping site : www.ulama.co.in Made In India